www.tamilarangam.net

සරිනිහර්
SARINIHAR


# சரிநிகர்


சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

இதழ் 85 நவ.16 – நவ.29, 1995 விலை 7.00



## யுத்தமும் மக்களின் கண்ணீரும்...



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கொழும்புப் பாதுகாப்பு: பொலிஸ்–கடற்படை இழுபறி!

கொழும்பிற்குப் பாதுகாப்பு வழங்குவது தொடர்பாகக் கடற் படை பின்பற்றும் நடைமுறைகள் காரணமாகப் பொலிசிற்கும், கடற் படைக்குமிடையே தற்போது கருத்து வேறுபாடு எழுந்துள்ளது.

இக் கருத்து வேறுபாடு காரணமாக அத்தியாவசிய தேவைகளுக்காகக் கொழும்பிற்கு வரும் பொதுமக்களும், கொழும்பைப் பிறப்பிடமாகக் கொண்டவர்களும் வர்த்தக மத்தியஸ்தானங்கள், அரச நிறுவனங்கள், திணைக்களங்கள் ஆகியனவும் பல இன்னல்களிற்கு முகம் கொடுக்க வேண்டியிருப்பதாக அறிய வருகிறது.

கொழும்பிற்குப் பாதுகாப்பு வழங்குவதனால் கொழும்பிற்கு உட்புகும் நுழைவாயில்கள், பாதைகள் அனைத்தையும் மூட வேண்டும் எனக் கருதிக் கடற்படை செயற்படுவதாகவும் அந் நிலைமையினால் பொதுமக்கள் இன்னல்களிற்கு முகங்கொடுத்துள்ளதாகவும் கொழும்புப் பொலிஸ் அத்தியட்சகர் எச்.எம்.ஜீ.பீ.கொட்டக்கதெனிய தெரிவித்தார்.

வீதித் தடைகள், காவல் நிலையங்களைப் பாவித்துக் கொழும்பிலுள்ள பல இடங்கள் கடற்படையினால் மூடப்பட்டுள்ளதாக கொட்டக்கதெனிய கூறினார்.

கடற்படை, பொலிஸின் ஆலோசனை அல்லது நடவடிக்கைகளைப் பின்பற்ற விரும்பாததால் கடற்படையுடன் கூட்டுச் சேர்ந்து இனிமேல் கொழும்புப் பாதுகாப்பு நடவடிக்கைகளை நடத்த முடியாத நிலைமையொன்று எழுந்துள்ளதாக கொட்டக்கதெனிய தெரிவித்தார்.

கடற்படையின் இந் நடவடிக்கை தொடர்பாகக் கொழும்புப் பொலிஸ் அத்தியட்சகர் என்ற முறையில் தாம் இது தொடர்பாகப் பாதுகாப்பு அமைச்சிடம் அறிவித்திருப்பதாகக் கொட்டக்கதெனிய கூறினார்.

கொழும்புப் பெருந்தெருக்களை மூடுவதால் பொது மக்கள் முகங்கொடுக்கும் கஷ்டங்கள் தொடர்பாகப் பிரதி அமைச்சரொருவர் தன்னிடம் விசாரித்ததாகக் கூறிய கொட்டக்கதெனிய அவை அனைத்தும் பொலிஸ் செய்தவை அல்லவெனத் தான் அமைச்சரிற்குத் தெரிவித்ததாகச் சொன்னார்.

பாதைகளை மூடுவதால் தாம் மாபெரும் கஷ்டங்களிற்கு முகங்கொடுத்துள்ளதாக வர்த்தகர்கள் பலர் தெரிவித்தனர். பாதைகளை மூடியதால் தமது வர்த்தக நிலையங்களை நோக்கிப் பொதுமக்கள் வருவதில்லையெனவும் தாம் அரசிற்கு வரி செலுத்த வேண்டியுள்ள தாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

கடற்படை எடுத்துள்ள நடவடிக்கை காரணமாகப் பாரியளவு வாகன நெருக்கடி ஏற்படுவதாகவும், அதனால் பாரிய எரிபொருள் விரையத்தைப் போலவே, நேரமும் வீணாகச் செலவாகிறது எனவும் இது பற்றிச் செய்த விசாரணையின் போது கொழும்புப் பொலிஸின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார். எரிபொருள் மிக அவசியமான சந்தர்ப்பத்தில், எரிபொருளை மீதப்படுத்த வேண்டும். இவ் வாகன நெருக்கடி காரணமாகப் பாரியளவில் எரிபொருள் வீணாக்கப்படுகிறது. எரிபொருளுக்காகப் பெரியளவு மூலதனம் செலவாவது குறித்து கடற்படைத் தளபதி சிந்திக்க வேண்டுமென அவ் அதிகாரி கூறினார்.

திவயின -1995.10.31

# கொழும்பு பூராவும் திடீர் தேடுதல்!

## –இராணுவம் கோரிக்கை

வட-கிழக்கில் பாதுகாப்புப் படையினரால் கைப்பற்றப்பட்ட பிரதேசங்களின் புனருத்தாரன நடவடிக்கைகளில் ஈடுபடுவது, யுத்த அகழிகளை வெட்டுவது உட்பட்ட பல்வேறு தேவைகளுக்காகக் கைதிகளை ஈடுபடுத்துவதைத் துரிதப்படுத்தும் வேலைத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்துமாறு ஸ்ரீ லங்கா சிங்ஹ படைப் பிரிவுப் படையினர் சங்கம் ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்க விடம் கோரியுள்ளது.

இவ் வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தினால் தற்போது அந் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ள பாரிய தொகைப் படையினரை அந் நடவடிக்கைகளிலிருந்து விடுவித்து யுத்த களத்திற்கு அனுப்ப முடியுமென அச் சங்கத்தின் தலைவர் மேஜர் கே.ரீ. கருணாரத்ன சுட்டிக் காட்டியுள்ளார்.

நாடு முழுவதிலுமுள்ள சிறைச்சாலைகளில் சிறைவைக்கப்பட்டுள்ள கைதிகளை நிர்வகிப்பதற்காகப் பாரிய தொகைப் பணத்தை அரசு செலவழிக்க வேண்டியுள்ளதாகவும் பல்வேறு குற்றங்கள் தொடர்பாகக் குற்றவாளிகளாகியுள்ள அவர்களிடமிருந்து இவ்வான பயன்பாட்டைப் பெறுவதால் அப்பாரிய தொகைப் பணத்தை மீதப்படுத்த முடிவதுடன் மட்டுமன்றித் தேசியக் கடமையொன்றை நிறைவேற்றவும் அவர்களுக்கு இதனூடாக சந்தர்ப்பம் வழங்கப்படுவதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

சிறைச்சாலை, பொலிஸ், இராணுவப் பாதுகாப்புப் பிரிவுகளின் உதவியுடன் இச் சிறைக் கைதிகளிடமிருந்து பாரிய பணிகளைப் பெற்றுக் கொள்ளச் சந்தர்ப்பம் கிடைப்பதாகவும் மேலும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதே சமயம் கொழும்பின் பாதுகாப்பை உத்தரவாதப்படுத்துவதற்காகக் கொழும்பிலும், சன நெருக்கடியான இடங்களிலும் அமைந்துள்ள அனைத்துத் தமிழ் இருப்பிடங்களையும் (லொஜ்) தற்காலிகமாக மூடுவதும், கொழும்பு நகரையும், அதைச் சுற்றியுள்ள அனைத்து வீடுகளையும், வர்த்தக நிலையங்களையும் குறுகிய காலப் பகுதியினுள் திடீர் தேடுதலுக்கு (Surprise Check) உட்படுத்துவதும் காலத்திற்குகந்த நடவடிக்கை எனச் சுட்டிக் காட்டும் மேஜர் கருணாரத்ன அதற்காகப் பொலிஸிற்கும், இராணுவப் பிரிவுகளுக்கும் சிவில் பாதுகாப்பு அமைப்புகளின் ஒத்துழைப்பையும் பெற முடியுமெனவும் கூறினார். இதுவரை எதுவித சந்தர்ப்பத்திலும் இவ்வாறான தேடுதல்கள் நடத்த முடியாதிருந்ததாகவும், புலிப் பயங்கரவாதத்தைப் போலவே வேறு குற்றங்களுடன் தொடர்பான தகவல்களையும் இவ்வாறான தேடுதல்களினூடாக வெளிவரச் செய்ய முடியும் எனவும் மேஜர் கருணாரத்ன தெரிவித்தார்.

கொழும்பையும், அதைச் சுற்றியுள்ள பிரதேசங்களிலும் கடந்த காலப் பகுதியினுள் நடைபெற்ற பயங்கரவாதத் தாக்குதல்களிற்காகக் கொழும்பையும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலுள்ள சில தமிழர்களின் ஒத்துழைப்புக் கிடைத்துள்ளதெனவும், புலிப் பயங்கரவாதிகளிற்குச் சார்பாகப் பணம் சம்பாதிக்கும் நோக்கத்துடன் அவர்கள் இவ்வாறு ஒத்துழைப்பு வழங்குவதாகவும் மேஜர் கருணாரத்ன குறிப்பிட்டார்.

அதேபோல் வட-கிழக்குப் பிரதேசங்களில் உள்ள தமது உறவினர்களிற்குப் புலிப் பயங்கரவாதிகளிடமிருந்து கரைச்சல்கள், தொல்லைகள் ஏற்படலாம் என்ற காரணத்தால் அவர்கள் புலிகளிற்கு ஒத்துழைப்பு வழங்குவதாகவும், கொழும்பில் தொழில் புரியும் சில தமிழர்கள் மாதாந்தம் கப்பமாக அவர்களிற்குப் பாரியளவு பணத்தை வழங்குவதாகவும் தகவல்கள் வெளிவந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

அதேபோல் வட-கிழக்குத் தமிழர்களிற்கு அத்தியாவசியமான பொருட்களை வவுனியா, அம்பாறை, சியம்பலாண்டுவ போன்ற பிரதேசங்களில் பெற்றுக்கொள்ள வசதிகளை ஏற்படுத்துவதால் கொழும்பிற்கு வரும் தமிழர்களின் எண்ணிக்கையை அநேக தூரம் மட்டுப்படுத்த முடியுமெனவும் அவர் மேலும் சுட்டிக் காட்டினார்.

திவயின -1995.11.13

# இந்தியாவிலிருந்து ஹெலிகொப்டர்கள், அமெரிக்காவிலிருந்து நவீன ஆயுதங்கள்!

அரசிற்கும், தமிழீழ விடுதலைப் புலிகளிற்குமிடையே அடுத்த கட்டச் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு நடுவராகச் செயற்பட அமெரிக்கா முன் வந்துள்ளது. யுத்தத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் பலவீனப்படுத்தப்பட்ட பின் இப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகும் என அரசின் தகவல் வட்டாரங்கள் கூறுகின்றன.

இது தொடர்பாக ஆரம்பக் கட்டப் பேச்சுவார்த்தைகளுக்காக அமெரிக்கக் குழுவொன்று எதிர்வரும் டிசம்பர் மாதத்தில் இலங்கைக்கு வரவுள்ளது. அப் பிரதிநிதிகள் குழுவினர் முதலில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைமையுடனும், அதன் பின்பு அரசுடனும் பேச்சுவார்த்தைகள் நடத்தத் தயாராகின்றனர்.

ஐக்கிய நாடுகள் சபையின் ஐம்பதாவது வருட விழாவில் கலந்து கொண்ட ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்க, அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டனுடனும், இந்தியப் பிரதமர் நரசிம்ம ராவுடனும், அமெரிக்க அரச செயலாளருடனும் வடபகுதி இனப்பிரச்சினை பற்றிக் கலந்துரையாடினார்.

வட பகுதிப் பிரச்சினைக்கு உறுதியான தீர்வு அரசியல் தீர்வொன்றே என இரு சாராரும் உடன்பட்டதுடன், சமாதானப் பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிக்க இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்க நிபந்தனைகளை முன் வைத்தார்.

யுத்த நிறுத்தம், அடையாளத்திற்காகவது ஆயுதக் கையளிப்பு, குறிப்பிட்ட காலவரையறையினுள் பேச்சுவார்த்தைகளை நடத்தி முடிக்க இணங்குவது அந் நிபந்தனைகளாகும்.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பாகப் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட முன் இலங்கை ஜனாதிபதி அமெரிக்காவுடனும், இந்தியாவுடனும் நடத்திய பேச்சுவார்த்தைகளில் யுத்த உதவிகளை வழங்க இரு நாடுகளுமே இணங்கியுள்ளன.

அதன்படி இந்தியா குறொக்கடைல் (Crocodile) ஹெலி கொப்டர்களை வழங்கவும், அமெரிக்கா இதுவரை இலங்கைக்கு வழங்கியிராத நவீன ஆயுதங்கள் பல வழங்கவும் இணங்கியுள்ளன.

யாழ்ப்பாண நகரிற்குள் செல்ல அவ் ஆயுதங்கள் மிகவும் அவசியமானவை எனத் தெரிய வருகிறது.

எவ்வாறெனினும் நடுவர் நாடாக ''அமெரிக்கா'' இங்கு வருமுன் யுத்த நடவடிக்கையினூடாகப் புலிகள் இயக்கத்தைப் பலமிழக்கச் செய்யப்படுமென அரச தகவல் வட்டாரங்கள் கூறுகிறது.

லக்பிம -1995.11.05

# பிரபாகரனின் பிறந்த தினத்தன்று பாரிய படுகொலைகளுக்கு உத்தரவு!

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் பிறந்த நாளான நொவெம்பர் 26ஆம் திகதி கொழும்பு, அனுராதபுரம், கண்டி நகரங்களில் குண்டுகளை வெடிக்க வைத்துப் பாரிய படுகொலைகளை நடத்துமாறு பிரபாகரனினால் தனது இயக்க உளவுப் பிரிவுக்கு உத்தரவிட்டுள்ளதாகவும், தற்போது அதற்காக அவர்கள் தயாராகி வருவதாகவும் தேசிய புலனாய்வுப் பணியகத்திற்குத் தகவல் கிடைத்துள்ளதாகப் பாதுகாப்புப் பிரிவின் சிரேஷ்ட பேச்சாளரொருவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணக் குடா நாட்டினுள் பாதுகாப்புப் படைகள் நடத்திய பிரதான நடவடிக்கைகள் மூன்றான முன்னேறிப் பாய்தல் தாக்குதல், இடி மின்னல் தாக்குதல், கதிர் வீச்சு (ரிவிரச) தாக்குதல்களினால் வடபகுதி அப்பாவிப் பொது மக்களிற்கும், புலிகள் இயக்கத்திற்கும் பாரிய சேதம் விளைவிக்கப்பட்டுள்ளதால், தனது பிறந்த தினத்தன்று நாட்டின் பிரதான நகரங்கள் மூன்றிலும் குண்டுகளை எப்படியும் வெடிக்க வைக்க வேண்டுமெனப் புலிகளின் தலைவர் தனது உளவுப் பிரிவுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளதாகத் தகவல் கிடைத்துள்ளது.

இவ்வாறான சம்பவங்கள் நடைபெற அநேகமான சந்தர்ப்பங்கள் உள்ளதால் கொழும்பு, கண்டி, அனுராதபுரப் பிரதேசங்களின் பாதுகாப்பைப் பலப்படுத்த வேண்டுமென, புலனாய்வுப் பணியகம் அரசிற்குத் தெரிவித்துள்ளது.

தனது பிறந்த தினத்தன்றுக்கு முன் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரை எவ்வாறெனினும் படுகொலை செய்ய வேண்டுமெனவும் புலிகள் தலைவர் தனது உளவுப் பிரிவுகளுக்குத் தெரிவித்துள்ளதாக அரச பாதுகாப்புப் பிரிவுகளுக்குத் தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளதாகப் பாதுகாப்புப் பிரிவுப் பேச்சாளர் கூறினார்.

இத் தகவல் கிடைத்தவுடன் லக்ஷ்மன் கதிர்காமரின் பாதுகாப்பு மேலும் பலப்படுத்தப்பட்டுள்ளதுடன் பொலிஸ் அதிரடிப் படையின் பாதுகாப்பும் தற்போது அவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதே சமயம் பிரபாகரனின் உத்தரவை நிறைவேற்ற முகமாகத் தற்கொலைப் புலிகள் கொழும்பு, கண்டி, அனுராதபுர நகரங்களிற்கு வந்துள்ளனரா எனக் கண்டு பிடிக்கப் பாரிய தேடுதல் நடவடிக்கையொன்றை ஆரம்பிப்பது தொடர்பாக அரச பாதுகாப்புப் பிரிவுகளின் கவனம் திரும்பியுள்ளதாகப் பாதுகாப்புப் பிரிவுப் பேச்சாளர் தெரிவித்தார்.

லங்காதீப -1995.11.05

# யாழ்ப்பாணத்தின் பின் முல்லைத்தீவு

பாதுகாப்புப் படைகள் வடக்கில் ஆரம்பித்துள்ள ''ரிவிரச'' நடவடிக்கையினூடாக யாழ்ப்பாண நகரைக் கைப்பற்றியதன் பின், புலிப் பயங்கரவாதிகளின் ஏனைய முக்கிய கோட்டைகள் அமைந்துள்ள பிரதேசங்களைக் கைப்பற்றும் நீண்ட காலத் திட்டத்துடன் யுத்தத்தை ஆரம்பிக்க முடிவெடுக்கப்பட்டுள்ளதாகப் பாதுகாப்பு அமைச்சின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய பின் அதை மையமாகக் கொண்டு சிறந்த திட்டமிடுதலுடன், புலிப் பயங்கரவாதிகளின் பிடியில் நிலவும் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மாங்குளம், பரந்தன், விஸ்வமடு, வெற்றிலைக்கேணி உட்பட்ட பல பிரதேசங்களைக் கைப்பற்றுவதற்காக வெளிநாடுகள் சிலவற்றின் உதவியுடன் ஜனவரி மாதத்திலிருந்து பாரியளவில் தாக்குதல் ஆரம்பிக்கத் தீர்மானித்துள்ளதாக அவ் அதிகாரி தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதற்காகப் பாதுகாப்புப் படைகளினால் வடபகுதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள ''ரிவிரச'' நடவடிக்கை மிக வெற்றிகரமாக முன்னேறிச் செல்லுகிறதெனவும், இன்னும் சில தினங்களில் யாழ்ப்பாணக் குடாநாட்டைக் கைப்பற்ற முடியுமெனவும் பெருந்தெருக்கள், மின்சக்தி, எரிபொருள் அமைச்சரும், பிரதிப் பாதுகாப்பு அமைச்சருமான கேர்ணல் அனுருத்த ரத்வத்த தெரிவித்தார்.

லங்காதீப -1995.11.05

# கொழும்பில் 60 வீதத்தினர் தமிழர்களாம்!

கொழும்பு நகரில் வாழ்பவர்களில் நூற்றுக்கு அறுபது வீதத்தினர் தமிழர்கள் எனப் பொலிஸாரினால் செய்யப்பட்ட மதிப்பீடு ஒன்றின் மூலம் தெரியவந்திருப்பதாகக் கொழும்புப் பிரதேசத்திற்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஜீ.பீ.கொட்டக்கதெனிய தெரிவித்தார்.

இதற்கு மேலதிகமாகக் கொழும்பு நகரில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள தமிழ் வர்த்தகர்களில் பெரும்பான்மையினர் புலிகள் இயக்கத்திற்கு உதவிகள் வழங்குவதாகத் தகவல்கள் கிடைத்துள்ளதாகத் தெரிவித்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் எப்படியெனினும் இது தொடர்பாக உறுதிப்படுத்த அறிக்கைகளைப் பெறுவதில் கஷ்டங்கள் இருப்பதாகக் குறிப்பிட்டார்.

புலிகள் இயக்க உறுப்பினர்கள் கடந்த பல வருடங்களாகவே தமது பாதுகாப்பான பிரதேசமாகக் கொழும்பு நகரை பாவித்துள்ளதாகத் தற்போது கைது செய்யப்பட்டுள்ள பயங்கரவாதச் சந்தேக நபர்களின் விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளதாகப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் கூறினார்.

லங்காதீப -1995.11.12

# கொலன்னாவையைப் பாதுகாக்க 200 இளைஞர்!

நீர், மின்சாரம், எரிபொருள் இவை மூன்றையும் நாட்டிற்கு வழங்கும் கொலன்னாவைக்கு இருநூறு இளைஞர்களைக் கொண்ட பாதுகாப்புப் படையொன்றை அமைக்கும் யோசனையொன்றை ஜனாதிபதி ஏற்றுக் கொண்டுள்ளார்.

இவ் இருநூறு பேரில் அவசர சுற்றிவளைப்புப் பிரிவொன்றும் அமைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வெலேவத்த எண்ணெய் மற்றும் காஸ்(வாயு)க் களஞ்சியம் கொலன்னாவை எண்ணெய்க் களஞ்சியம், களனி திஸ்ஸ மின் நிலையம், அம்பத்தலை நீர் இறைப்பு நிலையம், மற்றும் நீர்த் தேக்கங்கள் ஆகிய நாட்டிற்கு மின்சாரம், நீர், எரிபொருளை வழங்கும் இடங்கள் அனைத்தும் கொலன்னாவ தொகுதியில் அமைந்துள்ளன.

கொழும்பு மாவட்டப் பா.உ. பெனட் குரேயினால் பிரேரிக்கப்பட்ட யோசனையொன்றின்படி இவ் இளைஞர் பாதுகாப்புப் படைக்குக் கொலன்னாவையைச் சேர்ந்த இளைஞர்கள் இருநூறு பேர் சேர்த்துக் கொள்ளப்படவிருப்பதாகவும், அவர்கள் மேற்கூறப்பட்ட நிறுவனங்களில் சேர்த்துக் கொள்ளப்பட்டுப் பாதுகாப்புப் படைகளுடன் இணைந்து பணிபுரிவர் எனவும் தெரியவருகிறது.

கொலன்னாவ பிரதேசம் தொடர்பாக நன்கு பரிச்சயமுள்ளவர்கள் அவசியமாக இருப்பதால் கொலன்னாவையைச் சேர்ந்த இளைஞர்கள் மட்டுமே இதில் சேர்த்துக் கொள்ளப்படத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தமது பிள்ளைகளை இப் படையில் சேர்த்துக் கொள்ளப்பட்டால் அப் பிரதேசத்தவர்களிடமிருந்து தகவல்கள் கிடைக்குமெனவும் நம்பப்படுகிறது.

லக்பிம -1995.11.12

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# எரிகிற வீடும் எண்ணெய் ஊற்றுகிற பிரகிருதிகளும்!

படையினர் கோண்டாவில் வரை முன்னேறிவிட்டதாக ரூபவாஹினி சொல்கிறது. கைப்பற்றப்பட்ட பிரதேசங்களை இராணுவத் தளபதிகள் பார்வையிடுகிறார்கள். இரண்டு டாங்கிகள் ஒன்றின் பின் ஒன்றாக மரங்களைச் சாய்த்துக்கொண்டு முன்னேறுகின்றன. படையினரால் கைப்பற்றப்பட்ட இடங்களில் ஒரு ஈ. காக்கை கூட இல்லை. அரசின் பத்திரிகைத் தணிக்கைக்கிடையேயும் கசியும் செய்திகள் யாழ்குடாநாடே. வடமராட்சிக்கும். கிளிநொச்சிக்குமாக புலம் பெயர்ந்து கொண்டிருப்பதைத் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில் அரசினால் சுதந்திரமாக இயங்க விடப்பட்ட தினகரன் நவ.10. 1995 பத்திரிகையின் முதற்பக்கத்தில் மனித உரிமைகளுக்கான யாழ் பல்கலைக்கழக ஆசிரியர்களின் அறிக்கை ஒன்று பிரசுரமாகியிருந்தது. முகமூடி அணிந்த புலிகள் யாழ்ப்பாணத்தில் வீடுகளுள் புகுந்து மக்களை விரட்டுகிறார்கள் என்கிறது அந்தச் செய்தி அறிக்கை.

இந்த அறிக்கையைப் பார்த்ததும் இதுவரை காலமும். இவர்கள் லங்கா புவத் அறிக்கைகளிலிருந்துதான் தமது அறிக்கைகளைத் தயாரித்து வெளியிட்டு வந்தார்களோ என்று எண்ணத் தோன்றுகிறது.

ஷெல் மழைபோல் பொழிகிறது. விமானத்திலிருந்து கண்மூடித்தனமாக தாக்குதல் நடத்தப்படுகிறது. கனரக வாகனங்களும். டாங்கிகளும் வீடுகளையும் கட்டிடங்களையும் இடித்துத் தரைமட்டமாக்கிக் கொண்டும். வயல்வெளிகளைத் துவம்சம் செய்து கொண்டும் முன்னேறி வருகின்றன.

இந்த நிலையில் கையில் துப்பாக்கியுடனும். கண்களில் கொலைவெறியுடனும் முன்னேறி வருகின்ற படையினரை வரவேற்க தமிழ் மக்கள் மாலையுடனும் கையுடனும் நிற்பார்கள் என்றா இந்தப் பல்கலைக்கழக ஆசிரியர்கள் எதிர்ப்பார்க்கிறார்கள்.

அல்லது தாங்கள் உயிர் தப்பினாலும் போதும் என்று புலம் பெயர்வார்களா?

கோபம் கண்ணை மறைக்கும் என்பார்கள் கோபம் மட்டுமல்ல அடிவருடித்தனமும் கண்ணை மறைக்கும் தான் உண்மையைக் காணவிடாமல்!

●

இதே போன்று இன்னொரு சம்பவம் இது.

அவரும் ஒரு மனித உரிமையாளர்தான். மற்றவர் ஒரு பத்திரிகையாளர். இருவருக்குமிடையே வாக்குவாதம். விடயம் இதுதான் நாகர் கோவில் மகா வித்தியாலயத்தின் மீது நடாத்தப்பட்ட குண்டுத் தாக்குதல்கள் பற்றியது. அந்தப்பத்திரிகையாளருடைய பத்திரிகையில் நாகர் கோவில் பாடசாலை மீது நடாத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில் மாணவர்கள் கொல்லப்பட்ட செய்தி வெளியாகியிருந்தது. மனித உரிமையாளரோ அந்தச் செய்தி தவறென்று தர்க்கம் புரிகின்றார்.

நாகர் கோவில் மகாவித்தியாலயம் மீது தாக்குதல் நடத்தப்பட்டது உண்மை.

மாணவர்கள் கொல்லப்பட்டதும் உண்மை. அதை அரசு மறுத்ததும். மூடி மறைக்க முயற்சித்ததும் யாவரும் அறிந்ததே. வணபிதா ஜெயக்குமார் சம்பவம் நடந்த இடத்தை நேரில் சென்று பார்த்திருக்கிறார். சரிநிகருடனான பேட்டியில் அதை அவர் சொல்லியிருக்கிறார். ஆனால் இந்த மனித உரிமையாளரோ செய்தியே தவறென்கிறாரே? என்று பின்னால் நின்ற நான் யோசித்துக்கொண்டிருந்தேன்.

பத்திரிகையாளர் அந்த மனித உரிமையாளரிடம் கேட்கிறார்.

"அப்படி ஒரு சம்பவம் நடக்கவில்லை என்கிறீர்களா?"

"இல்லை" இது அவரது பதில்

"மாணவர்கள் கொல்லப்படவில்லை என்கிறீர்களா?"

"இல்லை"

என்க்கு ஒன்றுமே புரியவில்லை. அப்போ எதற்குத்தான் இவர்கள் தர்க்கம் புரிந்தார்களோ? பத்திரிகையாளருக்கும் புரியவில்லை என்பதை அவரது முகம் காட்டியது. அவர் கேட்டார்:

அப்போ செய்தியில் என்னதான் தவறு இருக்கிறது?

அவர் சொல்கிறார்:

"பாடசாலையின் மீது குண்டு விழவில்லை."

எங்கள் எல்லோருக்கும் ஒரே குழப்பம்.

யாரும் பேசவில்லை.

அவர் தொடர்கிறார்:

"அருகில் தான் குண்டு விழுந்தது."

இதற்கு மேல் இந்த மனித உரிமைக் காரரைப்பற்றி சொல்ல என்ன இருக்கிறது.?

இது அவருடைய வியாதி என்று நீங்கள் நினைத்தால் நான் என்ன சொல்ல முடியும்?

●

யாழ்ப்பாணத்துக்கு புதிய அரசாங்க அதிபராக எஸ். பத்மநாதன் நியமிக்கப்பட்டிருக்கிறார். ஏற்கெனவே அரசாங்க அதிபராக இருந்த கே. பொன்னம்பலம் அவர்களை. பட்டினியில் வாடும் மக்களுக்கு உணவு அனுப்புங்கள் என்று கேட்டதற்காக. இடம் பெயர்ந்து வீதிகளில் மழைக்கும். வெய்யிலுக்கும் மரங்களின் கீழ் ஒதுங்கும் மக்களுக்கு கூடாரமடிப்பதற்கான பொருட்களை அனுப்புங்கள் என்று கேட்டதற்காக. இடம் பெயர்ந்து வந்த தென்மராட்சியிலும் எந்நேரமும் தம்மீது குண்டுகள் பொழியப்படலாம் என்று பீதியடைந்திருந்த மக்களுக்காக அப்பிரதேசத்தை பாதுகாப்பு வலயமாகப் பிரகடன படுத்துங்கள் என்று கேட்டதற்காக அரசாங்கம் அவரை இடைநிறுத்தியிருக்கிறது.

இதற்காகவெல்லாம் தவறான புள்ளி விபரங்களைப் பயன்படுத்தியிருக்கிறார் என்பதுதான் அரசின் குற்றச்சாட்டு.

இது குறித்து கொழும்பு வாழ் தமிழ்க் கட்சிகள் எதுவும் பெரிதாகக் குரல் எழுப்பவில்லை. ஒரு பத்திரிகை அறிக்கை: ஜனாதிபதிக்கு ஒரு மகஜர். அவ்வளவுதான்.

மறுபுறத்தில் யாழ்ப்பாணத்து மக்களுக்கு முதலைக்கண்ணீர் வடித்தன. சில பா. உக்கள் பாராளுமன்றத்தில் தூங்காமல் விழிப்பாக இருக்கிறோமெனக் காட்டுவதற்காக அவ்வப்போது சில வார்த்தைகளைப் பேசிவைத்தனர். யாழ்ப்பாணத்தின் இந்த நிலைமைகள் தொடர்பாகவும். கொழும்பில் தமிழ் மக்கள் காரணமின்றிக்கைது செய்யப்படுவது போன்ற பல்வேறு நடவடிக்கைகள் தொடர்பாகவும் தமது அதிருப்தியை வெளிக்காட்டுவதற்காக நவ. 7ம் திகதி அவசரகாலச் சட்டத்தை நீடிக்கும் பிரேரணை மீது எதிர்த்து வாக்களிக்கப் போவதாக தமிழர் விடுதலை கூட்டணி வட்டாரங்களிலிருந்து ஒரு செய்தி கசிந்து வந்திருந்தது.

ஆனால் கூட்டணியின் அரசியல் பீடம் நிலைமையை நன்றாக 'சீர்தூக்கி ஆராய்ந்த பின்' பிரேரணைக்கு எதிராக வாக்களிப்பதில்லை என்றும். பதிலாக வாக்களிப்பு நேரத்தில் வெளிநடப்பு செய்வது என்றும் தீர்மானித்திருந்தது.

அவர்கள் சீர்தூக்கி ஆராய்ந்த நிலைமைகள் யாழ்ப்பாணத்தில் பட்டினியால் வாடும் மக்கள் பற்றியதோ. அல்லது அவர்களுக்கு தங்களது 'பொன்னான' வாக்குகளை அளித்துப் பாராளுமன்றம் அனுப்பிய அவர்களது அன்பிற்கினிய வாக்காளர்களது பாதுகாப்புப் பற்றியதோ அல்ல என்பதையும் வாசகர்கள் புரிந்திருப்பார்கள்.

மட்டக்களப்பின் எங்கோ ஓர் எல்லைக் கிராமத்திலிருந்து வாக்களித்துப் பாராளுமன்றத்திற்கு அனுப்பி வைத்த தமிழ் மக்களின் பாதுகாப்பைக் காட்டிலும். தமது பதவிகளின் பாதுகாப்பே அவர்களுக்குப் பிரதானமானது என்பதையும் சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

அவசரகாலச் சட்டத்திற்கு எதிராக வாக்களித்தால் அரசிலிருந்து வெளியேற வேண்டி ஏற்படும். அரசாங்கத்தின் சலுகைகளும். வசதிகளும் இல்லாமற் போய் விடலாம். அரசுடன் பகைக்க வேண்டி ஏற்படலாம். இதெல்லாம் எதற்கு என்றுதான் இந்த மாதிரி 'நிலைமைகளைச் சீர்தூக்கிப் பார்த்து' அவசரகாலச் சட்டத்தை எதிர்ப்பதில்லை என்று முடிவாயிற்று.

ஆனால் மறுபுறத்தில் வாக்குப்போட்ட மக்கள் தங்களுடைய பாதுகாப்புக்குறித்துக் கேட்பார்கள். வாக்களித்தோம் எங்களுக்காக என்ன செய்தீர்கள் என்று கேட்பார்கள்? எங்களை திரும்பிப் பார்த்தீர்களா? என்று கேட்பார்கள் அடுத்த முறை எம். பியாவதற்கும் ஒரு வழி வைத்திருக்க வேண்டுமல்லவா? பட்டியல் போடச் சில தியாகங்களும் (?) வேண்டுமல்லவா? அதற்காகத்தான் தான் வெளிநடப்பு. எப்படி அவர்களுடைய அப்புக்காத்து பரம்பரை மூளை? இப்போது அரசுக்குச் சொல்லலாம். நாங்கள் உங்களை எதிர்க்கவில்லை. உங்களுக்குப் புரியும் தானே எங்களது நிலைமை என்று.

தமிழ் மக்களுக்குச் சொல்லலாம்: அரசு வாக்குறுதியளித்தப்படி அவசரகாலச்சட்டத்தை நீக்கவில்லை. எனவே நாங்கள் ஆதரிக்கவில்லை என்று.

அன்பான தமிழ் மக்களே. அடுத்து வரும் தேர்தலிலும் இப்படிப்பட்ட புத்திசாலித்தனம் மிக்க தலைமைகளுக்கு வாக்களிக்க இப்போதே தயாராகுங்கள்.

இதங்களைத் தாங்களே தேர்ந்தெடுத்துக் கொண்டதால் இவ்வாறான மக்களுக்குப் பதில் சொல்ல வேண்டிய கடப்பாடெல்லாம் ஈ.பி டி.பி புளொட் போன்ற கட்சிகளுக்கு ஏற்படவே இல்லை. அவர்கள் வழமைபோல் அவசரகால சட்டத்திற்கு ஆதரவாகவே கையுயர்த்தி விட்டு வந்திருக்கிறார்கள்.

இந்த அவசரகாலச் சட்டத்தால் மக்கள் இவ்வளவு அல்லபடும் போது அதற்கு ஆதரவாக வாக்களித்திருக்கிறீர்களே என்று யாராவது கேட்டால் மக்கள் எங்களுக்கு வாக்களித்தார்களா நாங்கள் அக்கறைப்பட என்று திருப்பிக் கேட்பார்கள் போலும்!)

●

"சர்வதேச மன்னிப்புச் சபையின் கடிதங்களை நான் வாசிப்பதில்லை. அவை என்னுடைய மகனுக்கு முத்திரை சேர்க்கவே பயன்படுகின்றன" இப்படிக் கூறியவ வேறுயாருமல்ல முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜேரட்னவே தான். பாராளுமன்றத்தில் பேசும் போது அப்போது அவர் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்.



அவருக்கு சற்றும் சளைத்தவரல்ல என்று தனது மறுப்பறிக்கைகளினூடாக நிரூபித்திருக்கிறார் வெநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் அவர்கள்.

நவாலி தேவாலயம் தாக்கப்பட்டது தொடர்பான செய்தியை வெளியிட்டமைக்காக செஞ்சிலுவைச் சங்கத்திற்கெதிரான மறுப்பறிக்கையில் ஆரம்பித்து. நாகர் கோவில் மகாவித்தியால மாணவர்கள் குண்டுவீச்சில் கொல்லப்பட்டமைக்கு கவலை தெரிவித்தமைக்காக யுனிசெப் நிறுவனத்திற்கெதிரான மறுப்பறிக்கை. வடக்கிற்கு அவசர நிவாரண உதவிகள் வழங்கப்பட வேண்டுமெனக் கோரிய ஐ.நா. செயலாளர் நாயகத்துக்கெதிரான அறிக்கை என்று அவரது மறுப்பறிக்கைகள் நீண்டு கொண்டே போகின்றன.

ஆனால் வரலாற்றில் எப்போதும் நடைபெற்று வருவதைப் போலவே அவருடைய மறுப்பறிக்கைகளின் மையின் ஈரம் காயுமுன்னரே உண்மை பட்டவர்த்தனமாக வெளிப்பட்டு விடுகின்றது.

இந்த மறுப்பறிக்கை பாரம்பரியம். யாரை விட்டுவைக்கும்?

மோர்ஜ் நிறுவனம் அரசு புலிகள் யுத்தம் தொடர்பாக வெளியிட்ட அறிக்கை ஒன்றில் "இது ஒரு அரசியல் பிரச்சினை; அரசியல் மட்டத்திலேயே இதற்குத் தீர்வு காண முடியும். யுத்தம் ஒரு போதும் தீர்வைத் தராது!"

என்று குறிப்பிட்டிருந்தது.

மேலும் அவ்வறிக்கையில் அரசின் விமானக் குண்டு வீச்சுக்களும் ஷெல் வீச்சுக்களும் ஏற்படுத்தி வரும் விளைவுகள் குறித்தும் இடம்பெயர்ந்துள்ள பெருமளவு மக்கள் அவர்களுக்கான உணவுப் பற்றாக்குறை என்பன குறித்தும் அது குறிப்பிட்டிருந்தது.

ஜனாதிபதி செயலகம் இதற்கும் ஒரு மறுப்பறிக்கை தயாரித்தது. மோர்ஜ் அமைப்பின் தலைவர் சார்ல்ஸ் அபேசேகர இவ்வறிக்கைக்கு முனைப்புத் தேடுவதற்காக அரச மொழி திணைக்கள ஆணையாளர் என்ற தனது பதவிநிலையைப் பயன்படுத்தியதாகக் குற்றம் சாட்டிய அந்த மறுப்பறிக்கை வடபகுதிக்கு போதுமான உணவுப் பொருட்களை அரசு அனுப்பி வைத்துள்ளதாகவும் அவற்றைப் புலிகள் அபகரித்துக் கொள்கின்றனர் என்றும் பெருமளவிலான இடப்பெயர்வு அவர்களது இராணுவ நோக்கங்களுக்காகச் செயற்கையாக உருவாக்கப்பட்டதென்றும் கூறி அரசியல் பேச்சுவார்த்தைக்கு வருமாறு அரசையும் புலிகளையும் சமனான முறையில் அழைத்ததன் மூலம் அது விஷமத்தனம் புரிந்துள்ளதென்றும் புலிகளுக்கு மட்டுமே பேச்சுவார்த்தைக்கு வர கோரிக்கை விட வேண்டும் என்றும் குறிப்பிட்டிருந்தது.

இவ்விடத்தில் முகமூடியணிந்த புலிகளே வீடுவீடாகச் சென்று மக்களை வெளியேற்றினார்கள் என்ற மனித உரிமைகளுக்கான யாழ் பல்கலைக்கழக ஆசிரியர்களது அறிக்கையும். இராணுவ நோக்கங்களுக்காகவே புலிகள் மக்களை இடம் பெயரச் செய்துள்ளனர் என்கிற அரசாங்கத்தின் அறிக்கையும் எவ்விதம் பொருந்திப் போகிறது பாருங்கள். மக்கள் படையினரின் தாக்குதலால் வெளியேறவில்லை கோபப்பட்டும் விட்டு விடுங்கள் கோபப்பட்டும் விட்டு விடுங்கள்! புலிகளின் இராணுவ தந்திரோபாயத்துக்காக வெளியேற்றப்பட்டுள்ளார்கள் என்று சொல்லிக் கொள்வதில் இரு தரப்பினரும் முனைப்பாக உள்ளனர்.

இந்த அரசையும் அமைச்சர்களையும் அறியுமுன்பே இனங்களுக்கிடையில் சமத்துவத்தை விரும்பும் மக்கள் மோர்ஜ் நிறுவனத்தையும் தலைவர் சார்ள்ஸ் அபேசேகராவையும்அறிந்திருப்பர்.

1979 இல் இலங்கையில் பயங்கரவாதத் தடைச் சட்டம் முதன்முதலாக அமுலான போது அதற்கெதிராகக் குரல் கொடுத்த ஒரே ஒரு அமைப்பு என்ற பெருமை மோர்ஜுக்கு உண்டு என்பதை இவ்வாறான பாமரத்தனமான அறிக்கைகளை வெளியிடுபவர்கள் அறிந்திருக்க நியாயமில்லைத் தான்!

மோர்ஜின் இந்த அறிக்கை அரசினதும் வெண்தாமரை இயக்கத்தினதும் சமாதானத்துக்கான யுத்தம் என்ற கோஷத்தின் முகமூடியைக் கிழிக்கும் தான்.

மேற்படி பல்கலைக் கழக ஆசிரியர்களின் அறிக்கைக்கும் அரசாங்கத்தின் அறிக்கைக்கும் வேறுபாடுகள் ஏதுமில்லையென்பதைத் தோலுரித்துக் காட்டும் தான்! ஆக அவர்கள் கோபப்படுவதில் நியாயமிருக்கிறது தானே? கோபப்பட்டும் விட்டு விடுங்கள்!

●

கொல்லன்னாவ சம்பவத்திற்கு பிறகு தமிழர் கைதுகளால் கொழும்பின் பொலிஸ் நிலையங்களும். சிறைச்சாலைகளும் நிரம்பி வழிவது எல்லோரும் அறிந்த செய்தி.

இம்முறை வயது. பால் வேறுபாடு எதுவும் காட்டப்படவில்லை இந்தக் கைதுகளில்.

ஐ.தே. அரசின் காலத்திலும் இதே போல தமிழ் இளைஞர் கைதுகள் ஏராளமாக நடைபெற்றிருக்கின்றது. அந்த அரசின் ராஜாங்க அமைச்சராக இருந்த புலேந்திரன் அம்மையார் அப்போது இதுபற்றி ஒன்றும் வாய் திறக்கவில்லை.

ஆனால் கடந்த வாரம் பாராளுமன்றத்தில் அவர் எதிர்க்கட்சி தரப்பில் இருந்து பேசும் போது இக்கைதுகள் தொடர்பாக அரசாங்கத்தைக் கடுமையாக விமர்சித்திருக்கிறார். தமிழர்களைப் பிடித்து புலிகள். புலிகள் அல்லாதவர்கள் என்று உடம்பில் முத்திரை குத்திவிடுவார்கள் என்று சாடுமளவுக்குப் போயிருக்கிறார்.

நல்லது. புலேந்திரன் அம்மையார் அவர்களே. உங்களுடைய கோபம் நியாயமானது தான் என்றாலும் எங்களுக்கு சில கேள்விகள் எழாமல் இல்லை.

ஐ.தே.கவில் நீங்கள் அமைச்சராக இருந்த போதும் இவ்வாறான கைதுகள் நடைபெற்றனவே. அப்போது ஏன் உங்களுக்கு இப்படிக் கோபம் வரவில்லை?

அல்லது அதிகாரத்தில் இருக்கும் போது மக்களுடைய துயரம் ஒரு போதும் உங்களை எட்டுவதில்லையா? எதிர்க்கட்சியாக இருப்பதனால் தான் இது பற்றிப் பேசுகிறீர்களா? சொல்லுங்களேன்!

பத்மன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தன்வினை தன்னைச் சுடும்!

**பஞ்சமன்**

“படையினர் முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள். நாங்கள் இடம் பெயர்ந்து வந்து இருந்த இடத்திலிருந்தும் இடம் பெயர்ந்தாயிற்று. இப்போது இங்கே மழை பொழிகிறது. ஷெல்லும் மழைபோல் பொழிகிறது. சுப்பர்சொனிக் இடிபோல் முழங்குகிறது. தெருவெல்லாம் சனங்கள். ஓட்டமும் நடையுமான விரைவு. இடுப்பில் கைக்குழந்தை, தலையில் சுமை. ஓடிக் கொண்டிருக்கிறார்கள். ஷெல் எட்டாத் தொலைவுக்கு, எடுத்தது பாதி எடுக்காதது பாதியாக. உண்டது பாதி, உண்ணாதது பாதியாக சிறுகச் சேமித்து பெருகக் கட்டிய வீடு தரைமட்டமாக, இழந்தது போக எஞ்சியதைக் கொண்டு ஓடிக் கொண்டிருக்கிறார்கள். போகுமிடத்தில் சுப்பர்சொனிக் குண்டு போடுமா போடாதா என்று யோசிக்க நேரமில்லை.

நடை நடையாக, சைக்கிள்களில், வண்டில்களில் வேறு வாகனம் தான் இல்லையே. கிடுகு வேலிகளுக்குள்ளால் கூட தலையையே நீட்டாத நம்சமூகம் வேலிகள் பெயர்ந்து முதல் முறையாகப் பாரியளவில் புலம் பெயர்ந்திருக்கிறது.”

* * * *

இது யாழ்ப்பாணத்திலிருந்து நண்பன் ஒருவன் எழுதிய கடிதத்தின் ஒரு பகுதி.

1995 ஒக்ரோபர் 30,

கொழும்பு பொதுநூலகத்தில் நான் நின்று கொண்டிருக்கிறேன். “எம்முடைய தாயகமும் வடக்கே” என்கிற பனர் காற்றில் படபடத்துக் கொண்டிருக்கிறது.

ஓம், நான் நின்று கொண்டிருப்பது வடக்கு முஸ்லீம்களின் உரிமைக்கான அமைப்பு ஒழுங்குசெய்திருந்த கருத்தரங்கு கண்காட்சி மண்டபவாயிலில்.

சரியாக இற்றைக்கு ஐந்து வருடங்களுக்கு முன்னர்தான் இந்த முஸ்லிம்கள் வடக்கிலிருந்து ஒரே நாளில் புலம் பெயர்க்கப்பட்டார்கள்.

தாங்கள் வெளியேற்றப்பட்ட ஐந்தாவது வருடத்தில் தங்களது தாயகத்தில் தங்களை வாழவிடக்கோரி கருத்தரங்கு ஒன்றினையும் கண்காட்சி ஒன்றினையும் ஒழுங்கு செய்திருந்தார்கள். (ஒக்.27ந் திகதி U.N.H.C.R. காரியாலயத்தின் முன் மறியல் போராட்டம் ஒன்றையும் நடாத்தி இருந்தார்கள்!)

ஓம், அந்த இடத்தில் தான் நான் நின்று கொண்டிருக்கிறேன். எம்முடைய தாயகமும் வடக்கே என்ற அந்த பனர் கண்களை நிறைக்கிறது.

நான் திரும்பிப் பார்க்கிறேன்.

சரியாக ஐந்து வருடங்களுக்கு முன்னால் ஓர் கருகிய மாலையில் நாங்கள் ஒலிபெருக்கி கொண்டு திடீர் உத்தரவு போடுகிறோம்.

“24 மணித்தியாலத்துள் இங்கிருந்து எல்லா முஸ்லிம்களும் வெளியேறிவிட வேண்டும். ஒஸ்மானியாக் கல்லூரி மைதானத்தில் திரண்டிருந்த மக்களுக்கு நாங்கள் அறிவிக்கிறோம்.

எங்களுடைய தாயகத்தை விட்டு ஏன் போக வேண்டும் என்றெழுந்த கேள்வி எங்களது துப்பாக்கிகளின் முன் பெருமூச்சாய் கரைந்து காற்றோடு போயிற்று.

ஓம். நாங்கள் அவர்களை 24 மணித்தியாலத்துள் அவர்களுடைய காணி, நிலம், வீடு, சொத்து அத்தனையையும் விட்டுப் போகச் சொன்னோம்.

அப்பாவி மக்கள்: வாய் பேசாமல் போனார்கள். அவர்கள் எடுத்துச் செல்ல ஐந்நூறு ரூபாய்க்கு மேல் நாங்கள் எதையுமே அனுமதிக்கவில்லை.

அப்போதும் வாய் பேசாமல் போனார்கள்; நெஞ்சம் நிறைந்த பிரிவுத் துயரோடு.

முஸ்லிம்கள் என்பதைத் தவிர அவர்கள் செய்த குற்றம் ஏதென்று அறியார்.

எல்லாவற்றையும் இழந்து போனவர்கள் வாய்ப்புக் கிடைக்கும் கால் நம்மை வஞ்சித்திருக்கலாம். அப்படியும் செய்யவில்லை.

94இல் அரசு வடக்கிலும் தேர்தல் நடாத்தி நிலைமை சுமுகமாக உள்ளது எனப் பறைசாற்ற முயன்றவேளை நாம் தேர்தலைப் பகிஷ்கரித்தோமல்லமா? அதேபோது வடக்குத் தேர்தலில் தாம் பங்கேற்பது தமிழ்-முஸ்லிம் பிளவுகளை நிரந்தரமாக்கிவிடும்; அதற்கு தாம் பலியாகிவிடக் கூடாது என்பதற்காய் அத் தேர்தலைப் பகிஷ்கரித்தனர்.

எம்முடைய தமிழ்க் குழுக்கள் பாராளுமன்றக் கதிரைக்காய் நாக்கைத் தொங்கப் போட்டு எட்டு வாக்குகளால் எம்பியான போது அவர்கள் பங்கேற்றிருந்தால் பல பாராளுமன்றக் கதிரைகளைக் கைப்பற்றி இருக்கலாம் அல்லவா?

ஆனால், அவர்கள் அவ்வாறு செய்யவில்லையே?

தமிழ் மக்களின் தாயகப் போராட்டம் குறித்து அவர்கள் ஒருபோதும் எதிர்நிலை எடுத்ததில்லை. தம்முடைய தாயகமும் வடக்கு என்று தானே சொல்கிறார்கள்.

ஆனால் நாங்கள் என்ன செய்தோம்?

1985இல் மன்னார் அளவக்கையில் 3 முஸ்லிம்களைப் படுகொலை செய்ய ஆரம்பித்ததிலிருந்து இன்றுவரை காத்தான்குடி, ஏறாவூர், அழிஞ்சிப்பொத்தானை என்று எத்தனை பேரைப் பலியெடுத்திருக்கிறோம்? எத்தனை பலியெடுப்பு? பலியெடுக்கப்பட்ட பச்சிளங் குழந்தைகள் கண்காட்சிப் படங்களிலிருந்து கேள்வியெழுப்புகிறார்கள்; நாங்கள் என்ன தவறு செய்தோம்?

அருகிலிருந்த இன்னொரு குறிப்பு கூறுகிறது.

கி.பி. ஏழாம் நூற்றாண்டுக்கு முன்பிருந்தே முஸ்லிம்கள் வடக்கில் வாழ்ந்து வருகிறார்கள்.

இத்தனை பாரம்பரியம் கொண்ட மக்களையல்லவா நாங்கள் விரட்டியிருக்கிறோம்.

இன்னொரு படம்; எங்களால் விரட்டப்பட்ட முஸ்லிம்கள் கால்நடையாக வந்து மரங்களின் கீழ் குழந்தைகளையும், சுமைகளையும் சற்று இறக்கி குந்தியிருக்கும் காட்சி.

சடாரென எனது அறிவு மையத்தில் ஓர் தாக்குதல்.

நண்பன் எழுதியிருந்த கடிதத்தை ஞாபகப்படுத்தியது. எங்களது மக்களும் இப்படித் தான் எல்லாவற்றையும் இழந்து வந்து மரநிழல்களின் கீழ் குந்திஇருந்து......

தன்வினை தன்னைச் சுடும் என்பார்களே;

நான் தலை குனிந்தேன் ●

## இன்னும் தமிழர் எல்லோரும் நித்திரையா...

*(வடபகுதி முஸ்லிம் உரிமைகள் அமைப்பின் ஐந்தாவது ஆண்டு மாநாட்டில (30.10.95) கொழும்பு நூலக கேட்போர் இடத்தில் வாசித்த கவியரங்கக் கவிதை)*

என் தாய் மண்ணின் புதல்வர் புதல்வியரே
தலைபணிந்தேன் சகோதரரே....

1
அண்ணர்கள் நாங்கள் கொடுமை இழைத்தோம்.
உங்கள் மண்ணைப் பறித்தோம்.
மாபாதகர்களாய் தொப்பூழ் கொடி அறுத்து
அன்னை மண் வயிற்றிருந்தும்மை எடுத்தெறிந்தோம்.
அதன் பின்னும் ஐந்து வருடங்கள்
வடக்கில்
கொழும்பில்
உலகத்து நாடுகளில்
"நானென்ன தம்பிக்கு காவலா" எனக் கேட்கும்
ஆதாமின் காயினைப்போல்*
அருளற்றுப் பேசி வந்தோம்.
இதன் பின்னும் கூட நீங்கள் எம்மை வெறுக்கவில்லை
எதிரிநிலை எடுக்கவில்லை
இன்னமும் எம்மை அண்ணா என நினைக்கின்றீர்.

என்ன கொடுமை இழைத்தோம் தமிழர்களே
என்ன கொடுமை நாங்கள் இழைத்துவிட்டோம்.
என்னுடைய வாழ்நாளில்
வடபுலத்து முஸ்லிம் மனிதர்களே உம்போலே
இன்னுமோர் மகத்தான இனத்தவரைக் கண்டதில்லை
இதுபோல மாண்புடைய உறவுகளை அறிந்ததில்லை

இத்தனைக்குப் பின்னும் ஈழத்தின் குயிலான
என்னை அழைத்து ஒரு பாடல் பாடென்றீர்
எதைப்பாடத் தோழர்களே எவண் பாடதோழியரே
என் கண்ணீரை என் வெட்கத்தை
என் இனத்தின் வரலாற்றுத் தலைகுனிவை
கையாலாகாத
என்போன்ற தமிழ்க்கலைஞர்களின் பேடிமையை
எதைப்பாட தோழர்களே எவண்பாட தோழியரே
தவறிழைத்தோம் திருந்துவோம் என்றுலக எதிர்ப்பின் முன்
தலைவர்களே வந்து தலைசாய்த்துச் சொன்னபின்பும்
இன்னும் சில கலைஞர்
இன்னும் சில அறிஞர்
ஏதேதோ நியாயங்கள்
எடுத்துரைக்கும் கயமைதனை
எதைப்பாட தோழர்களே எவண்பாட தோழியரே.

2.
இந்துக்கடலாடி எழுந்து வரும் இளவாடை-
நீர் சிந்துகின்ற கூந்தல் துவட்டும் வடகரைகளிலே
நீங்கள் நொந்து வடித்த கண்ணீர்
இதுவரைக்கும் காயவில்லை.
அன்றே அகலிகை கல்லான எங்களது மண்ணுக்கு
மீண்டும் நீங்கள் வந்து
மிதிக்கும் வரை விடிவில்லை.

உங்களிடம் பறித்தெடுத்த நெஞ்சக் கனவுகளை
நினைவுப் புதையல்களை
உங்களது பிள்ளைகளின் எதிர்கால வரலாற்றை
மண்ணின்மேல் உங்களது மதலைத் தமிழ்
ஏன் மறைந்த தென்று அறியாத அங்கலாய்ப்பில்
உங்களது முன்னோரின்
எலும்புச் செல்வங்கள் உறங்குகிற
ஈமப் புதைகுழிகளை
அவர்கள் உதிரத்தில் செழித்த பழத் தோட்டங்களை
அந்த தோட்டங்கள் மத்தியிலே
வாழையடி வாழையென உங்கள் தலைமுறைகள்
"அல்லாகு அக்பர்"என ஆர்ப்பரித்த பள்ளிவாசல்களை
எல்லாம் முன் வைத்து
உங்கள் காலடியைத் தொட்டு
மன்னிப்பீர் என்றுவாய் விட்டலறாமல்
என்னினத்தின் கை விலங்கு
ஒரு போதும் ஒடிவதில்லை.

3
பாதகத்துக்கு
வருடங்கள் ஐந்தாச்சு
தவறு, வருத்தம், திருத்துவோம் என்றபடி
தலைவர்கள் வாக்களித்து
வருடம் இரண்டாச்சு
என்ன தமிழர்களே எல்லோரும் நித்திரையா....

எல்லாம் அபகரித்து
நட்பில்லாச் சூரியனின் கீழே
உப்புக்களர் வழியே
ஓடென்று விரட்டி விட்ட
குற்றமெதுவும் அறியா இக்
குணக் குன்று மானிடங்கள்
ஐந்து வருடங்கள்
கண்ணீரும் சோறும் கலந்தே புசிக்கின்றார்....
இன்னும் தமிழர் எல்லோரும் நித்திரையா
இதுதானும் தலைவர்களின் வாக்குறுதி முத்திரையா

ஆறாம் வருடமும் இவர்கள்
அழுவதே விதியென்றால்
அழியட்டும் இந்நாடு
அழியட்டும் எனது இனம்
அழியட்டும் என் கவிதை
அழியட்டும் எனது தமிழ்

** காயின் ஆதாமின் மகன் தனது தம்பியை ரகசியமாக கொலை செய்தவன்.*

**வ.ஐ.ச. ஜெயபாலன்**

## படைகள் முன்னேறிப் பாய்ந்ததில்
# சிதைந்த ஆலயங்கள் இவை!

கடந்த யூலை மாதம் 9ம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இராணுவத்தினரின் முன்னேறிப் பாய்தல் நடவடிக்கையின் போது பொதுமக்கள் அதிகமாகக் கொல்லப்பட்டும், பொதுவிடங்கள் சேதமாக்கப்பட்டும் பாரிய அழிவை ஏற்படுத்தியிருந்தது தெரிந்ததே. இதுபற்றிய செய்திகள் முன்னைய சரிநிகர் இதழ்களிலும் பிரசுரமாகியிருந்தது. இந்தத் தாக்குதலின் போது பல இந்து கிறிஸ்தவ தேவால்யங்கள் சுப்பர் சொனிக் குண்டுத் தாக்குதல்களுக்கும், ஷெல் தாக்குதல்களுக்கும் உள்ளாகின. நவாலி சென் பீடர்ஸ் தேவாலயம் தாக்குதலுக்குள்ளாகி நூற்றுக்கும் மேற்பட்டோர் பலியாகிப் போயிருந்தனர்.

புலிகளின் “புலிப்பாய்ச்சல்” எதிர்த்தாக்குதல் நடவடிக்கையுடன் முற்றுப்பெற்ற இத் தாக்குதல் நடவடிக்கையின் போது சேதமாக்கப்பட்ட தேவாலயங்கள், இந்துக் கோயில்களின் விபரங்கள் வருமாறு.

| தேவாலயம் | உத்தேச மதிப்பீடு |
|---|---|
| சங்கானை கத்தோலிக்க தேவாலயம் | 2,50,000/= |
| சங்கானை புனித அலோசியஸ் ஆலயம் | 1,00,000/= |

### இந்து ஆலயங்கள்

| | |
|---|---|
| மாவடி அடைக்கலம் தோட்ட கந்தசாமி கோவில் | 5,00,000/= |
| (பலிபீடம் மண்டபம், கோபுரம், வாகனங்கள் சேதம்) | 5,00,000/= |
| துறட்டிப்பனை அம்மன் கோவில் | 50,000/= |
| சங்கரத்தை பத்திரகாளி அம்மன் | 1,25,000/= |
| துணைவி காசி விசுவநாதன் ஆலயம் | 2,000/= |
| அராலி மேற்கு வைரவர் ஆலயம் | 10,000/= |
| அராலி மேற்கு ஞானியார் ஆலயம் | 15,000/= |
| அராலி மேற்கு ஐயனார் ஆலயம் | 10,000/= |
| அராலி மத்தி நாகபூசணி அம்பாள் ஆலயம் | 50,000/= |
| அராலி வண்ணபுரம் சிவன் ஆலயம் (ஒரு பகுதி முற்றாக அழிக்கப்பட்டது) | 4,50,000/= |
| அராலி மத்தி வண்ணபுரம் சிவன்கோவில் (பிரதமகுருவின் விடுதி) | 2,50,000/= |
| அராலி தெற்கு பத்திரகாளி அம்மன் ஆலயம் | 1,00,000/= |
| அராலி கிழக்கு வைரவர் ஆலயம் | 5,000/= |
| நாகேந்திரமடம் சிவன் ஆலயம் | 20,000/= |
| நாகேந்திர மடம் வைரவர் ஆலயம் | 15,000/= |
| மயிலியப்புலம் கந்தசாமி ஆலயம் | 4,500/= |
| வட்டு தெற்கு பரமகுரு தேசிய பெருமாள் ஆலயம் | 5,000/= |
| வட்டு தெற்கு இத்தியடி பிள்ளையார் ஆலயம் | 85,000/= |
| பொன்னாலை பிள்ளையார் ஆலயம் | 1,00,000/= |
| சுழிபுரம் கொட்டடிப்பேரன் ஆலயம் | 8,000/= |
| சங்கானை கூடத்து மனோன்மணி அம்மன் ஆலயம் | 50,000/= |
| சங்கானை கறுத்தார் வைரவர் ஆலயம் | 25,000/= |
| சங்கானை நகர ஞானவைரவர் ஆலயம் | 30,000/= |
| சங்கானை மானியாவத்தை குருமறை ஞான வைரவர் | 3,69,125/= |
| சங்கானை ஓடக்கரை சிவன் ஆலயம் | 25,000/= |
| சங்கானை சிதம்பர அம்பலவாணர் ஆலயம் | 55,000/= |

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# யுத்தமும் மக்களின் கண்ணீரும்

வ.ஐ.ச.ஜெயபாலன்

அல்லல்பட்டு ஆற்றாது அழுத கண்ணீருடன் யாழ்ப்பாணத்து தமிழர்கள் கொட்டும் மழையில் தங்களதும் தங்களது பிள்ளைகளதும் உயிரைக் காக்க ஓடிக் கொண்டிருக்கின்றனர். குழந்தைக்ளுக்கு பால் கொடுக்க வழியில்லாமல் குடையில் வழியும் மழைநீரை பருக்கிய தாய்மாரைப் பற்றி பி.பி.சி. தமிழோசையிடம் விபரித்த போது கிளிநொச்சி அரசாங்க அதிபர் இதயம் வெடிக்க விம்மி அழுதார்.

ரிவிரசா இராணுவ நடவடிக்கை ஆரம்பித்ததிலிருந்தே கண் மூடித்தனமானதும் தொடர்ச்சியானதும் செறிவானதுமான ஷெல்லடியும், விமானக்குண்டு வீச்சும் நகரும் இராணுவத்தின் முன்னே நெருப்புக் கம்பளமாக விரிந்து வந்து கொண்டிருந்ததில் பாதை நீள மக்கள் பெரிய அளவில் குடி பெயர்ந்து ஓடத் தொடங்கியிருந்தனர். எனினும் அரச படைகள் நீர்வேலியை அண்டி ஷெல் குண்டு வீச்சு தாக்குதல் கம்பளம் யாழ் நகரின் மீது படர்ந்து மூடிய போது மக்கள் வெளியேற்றம் கட்டற்றுப் போனதாக யாழ்ப்பாணத்தில் இருந்து கிடைக்கிற சேதிகள் தெரிவிக்கின்றன.

திருநெல்வேலிச் சந்திக்கு அண்மையில் வசித்துவந்த எனது சித்தப்பாவின் மகள் ராணியின் முன்வீட்டுக்காரர்கள் ராணுவம் முன்னேறி வந்தபோதே கிளிநொச்சிக்கு அகதிகளாக ஓடிவிட்டனராம்.

ராணுவம் நீர்வேலிக்கு வந்த போது புலிகளின் கண்களுக்கும் ஏவுகணைக்கும் எட்டிய தூரத்திலிருந்து அரச விமானங்கள் யாழ்ப்பாணம் மீது செறிவான கம்பள குண்டு/ராக்கட் வீச்சு தாக்குதல்களில் மூர்க்கமாக ஈடுபடத் தொடங்கியதாம். ராணியின் வீட்டுக்கு முன்வீடு மேற்படி தாக்குதலில் தரைமட்டமாகியதாம். இதனால் ராணி இப்போது தனது இரண்டு பிள்ளைகளுடனும் வவுனிக்குளத்துக்கு தப்பி ஓடி வந்திருக்கிறார். விடுதலைப் புலிகள் அமைப்பும் மக்கள் வெளியேற்றத்தை கோரியதுடன் கிளாலியில் இலவச படகு சேவையையும் ஒழுங்கு செய்திருந்ததாம்.

மனித அவல நிலைமையின் தீவிரத்தை தமிழகமும், மலேசிய தமிழர்களும், ஐ.நா.சபை அலுவலகமும்; சர்வதேசமும் உணர்ந்த அளவுக்கு சிங்கள மக்களின் முன்னணிச் சக்தியினர் கூட இன்னும் உணரவில்லை. இன்னமும் தென் இலங்கையில் யுத்த கோசங்களே முன்நிலைப்பட்டிருக்கின்றது. இது தமிழர்களது மனதை கடந்த அரை நூற்றாண்டாக தொடர்ந்தும் பாதித்து வருகிற ஒரு விடயமாகும்.

தமிழர்களது அவலம் தொடர்பாக ஐ.நா. செயலாளர்நாயகம் அவர்கள் நவம்பர் 3, 1995 அன்று விடுத்த அவசர நிவாரண உதவிக்கான கோரிக்கையை கண்டித்து வெளிவிவகார துணை அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் அவர்கள் எதிர்ப்பு அறிக்கை ஒன்றை விடுத்தார். கடந்த காலங்களிலும் தமிழர்களுக்கெதிரான இனக்கொலைத் தாக்குதல்கள் தொடர்பாக சர்வதேச சமூகம் வாய் திறக்கக் கூடாது என்ற வகையில் அமைச்சர் அவர்கள் செயற்பட்டு வந்துள்ளார். நவாலி தேவாலயத் தமிழர் படுகொலை தொடர்பாக கவலை தெரிவித்தமைக்காக அமைச்சர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் மீதும், நாகர் கோவில் பாடசாலை தமிழ் மாணவர்கள் படுகொலை தொடர்பாக கவலை தெரிவித்தமைக்காக யூனிசெப் நிறுவனத்தின் செயலாளர் நாயகத்துக்கெதிராகவும் அவர் விடுத்த கோப அறிக்கைகள் பிரபலமானவை. சந்திரிகா அரசின் கடும்போக்காளரும் யுத்தவாதியுமான அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் அவர்கள் தமிழகமும் சர்வதேசச் சமூகமும் அதிர்ச்சியடைந்திருக்கிற ஒரு மனித அவல சூழலில் கூட தனது வழமையான போர்வாதத்தை தளர்த்திவிடவில்லை என்பது அதிர்ச்சி தருகிறது.

பொதுநலவாய அமைப்பின் கூட்டத்தில் கலந்த கொள்ள நியூசிலாந்து சென்றிருக்கும் வேளையில்கூட யுத்தநிறுத்தமில்லை என்று அவர் அடித்துச் சொல்லியிருக்கிறார். தமிழருக்கு விரோதமானதும் யுத்தத்துக்கு சார்பானதும் சர்வதேசநிறுவனங்களை கிள்ளுகீரையாக கருதுவதுமான அமைச்சரின் நிலைபாடு தமிழர்களையும் புலிப்படையினரையும் பாதித்ததை விட அரசாங்கத்தையே அதிகம் பாதித்தது. பின்னர் வரலாற்றில் நிச்சயமாக இது எழுதப்படும். இலங்கை ஜனாதிபதி சந்திரிகா அம்மையாரின் வெண்புறா தோற்றத்தை சர்வதேசரீதியாக இவ்வளவு சுலபமாக வேறு எவராலும் கறைப்படுத்தியிருக்க முடியாது என்று நாளைய வரலாறு பேசும்.

இந்த வரலாறு காணாத மனித அவலநிலைமையில் தென்னிலங்கையில் அரை அடிமைகளாக வாய்புதைத்து அஞ்சி அஞ்சி வாழ்கிற தமிழர்களால் ஒன்றுமே செய்யமுடியவில்லை. வடபகுதி நிலைமை தொடர்பாக ஒரு பதாகை ஆர்பாட்டம் செய்வோம் என சரிநிகர் அலுவலகத்தில் வைத்து ஒரு மனித உரிமைப் போராளியிடம் கோரியபோது நாம் ஒரு கவிஞனை இழந்துவிட விரும்பவில்லை என அவரிடமிருந்து பதில் வந்தது. கண்மூடித்தனமான கைதுகள் 'ஏரிப்படுகொலைகள், கொலன்னாவை சம்பவத்தின்பின் 1983 பாணியில் பொலிசார் கண்முன்னமே இடம்பெற்ற கொலைகள்' அது தொடர்பாக அரசு காட்டுகிற மெத்தனப்போக்குகள், திடீரென தமிழ் மக்களை தெருவில் நிர்க்கதியாக இறக்கிவிட்டு விட்டு விடுதிகள் (Lodge) சீல் வைக்கப்படுகிற சேதிகள் என தென்னிலங்கையில் வாழ்கிற தமிழர்கள் பேதலித்துப் போயிருக்கிறார்கள்.

வரலாற்றில் எப்போதுமில்லாதமாதிரி தமிழர்களது பாராளுமன்ற அரசியல் ஸ்தம்பித்துப் போயிருக்கிறது. கடந்த காலங்களில் தமிழர் மீது அக்கறை காட்டிய பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராசசிங்கம் கூட இன்று மௌனமாகிவிட்டார்.

1956ம் ஆண்டு சிங்களம் மட்டும் சட்டம் நிறைவேற்றப்பட்டபோது இனக்கலவர அச்சுறுத்தலைக் கூடப் பொருட்படுத்தாமல் தமிழரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களும் கொழும்பில் வாழ்ந்த தமிழர்களும் கோல்பேஸ் திடலில் சாத்வீக போராட்டம் நடத்தியது எல்லாம் இன்று பொய்யாய்ப் பழம் கதையாய் கனவாகிவிட்டது.

—▷15

# 'புத்தளம் மாவட்டத்தில் புறக்கணிக்கப்பட்ட தமிழ்க் கிராமங்கள்

பூ.முருகதாஸ், பொ.பிரபாகரன்
கொழும்பு பல்கலைக்கழகம்

வடமேல் மாகாணத்தின் புத்தளம் மாவட்டத்தில் அமைந்துள்ள அமைதியான மீனவக்கிராமங்கள் தான் உடப்பு, ஆண்டிமுனைக்கிராமங்கள். ஏறத்தாழ 7500 மீனவக் குடும்பங்கள்ளக் கொண்ட இக்கிராமத்தின் குறுமண் வெளிகளில் ஆங்காங்கே தென்னையும் பனையும் நிழல் பரப்பி நிற்கின்றன. இக்கிராமத்தின் பிரதான தொழில் வளம் மீன் பிடித்தலும் துணைத்தொழில்களுமேயாகும். இக்கிராமங்களில் கிட்டத்தட்ட 50 முஸ்லிம் குடும்பங்கள் வாழ்கின்றன. தமிழ் முஸ்லிம் மக்களிடையே இன்றுவரை நல்லுறவ நிலவி வருகின்றது.

இன்றைக்கு 300 ஆண்டுகளுக்கு முன் தென்னிந்தியாவின் இராமேஸ்வரம் பகுதியில் இருந்து 7 தோணிகளில் வந்து குடியேறிய சுமார் 250 குடும்பங்களின் வாரிசுகளே தாங்கள் என இக்கிராம மக்கள் கூறுகின்றார்கள். உடப்பு துரோபதை அம்மன் கோவில், முத்து மாரியம்மன் கோவில், மாரியம்மன் கோவில், ஐயனார் கோவில், பத்திரகாளியம்மன் கோவில் ஆகியவற்றால் சூழப்பட்ட இக்கிராமமக்களின் பொருளாதார முக்கியத்துவம் அண்மைய ஆண்டுகள் வரை குறைவானதாகவே இருந்தது. கடற்தொழிலாளர்களான மீனவர்கள் ஆறுமாதம் மீன்பிடித்தும், கடன் பட்டும் சீவியம் நடத்திவருகின்றார்கள். இக்கிராமங்களின் பெண்கள் பெருமளவு வீட்டு வேலைகளையே கவனித்து வருகின்றார்கள். சாதாரண மரக்களங்களால் மீன்பிடித்தொழில் செய்பவர்களது வருமானம் குடும்பத் தேவைகளுக்கே போதுமானதல்ல. சிலவேளை கடற் தொழில் மூலம் இவர்களுக்கு எவ்வித வருமானமும் பெற முடியாத நாட்களும் இருக்கின்றன.

சம்மட்டியார்கள் கரவலை வைத்திருப்பதோடு பெருமளவான கூலித்தொழிலாளர்களை அமர்த்தி இலாபகரமான தொழில் செய்துவருகின்றார்கள். இவர்கள்தான் கிராமத்தின் பணக்காரர்கள். ஏழை மீனவர்கள் சம்மட்டிமாரிடம் ''அடிமைக்கடன்'' பட்டும், வட்டிக்கு கடன் பட்டும் சீவியம் நடத்துகிறார்கள். அடிமைக்கடன் பெற்றவர்கள் மேலும் மேலும் கடன் பட்டும் கடனை செலுத்த முடியாத நிலையில் தம் ஆண் பிள்ளைகளையும் அடிமைத் தொழிலுக்கு அனுப்புகிறார்கள். சிலவேளை காணியையும், வீட்டையும் கடனுக்காக விடவேண்டிய நிலை எழுகின்றது.

ஆண்டிமுனைக்கிராமத்தின் சன அடர்த்தி குறைவாகவும், உடப்பு சன அடர்த்தி நெருக்கமாகவும் இருக்கின்றது. இங்கு ஆண்டிமுனையில் ஆண்டிமுனை த. வி. உடப்பு த.வி. என்பன இருக்கின்றன. இப்பாடசாலைகளில் போதியளவு ஆசியர்கள், கட்டிடங்கள் ஆய்வுக்கூடங்கள் நூலகங்கள் எதுவுமில்லாத நிலையில் இயங்கி வருகின்றன. உடப்பு த.வியில் மட்டும் 900 மாணவர்கள். 18 தொண்டர் ஆசிரியர்கள் கடமை புரிகிறார்கள்.

ஆண்டிமுனைக் கிராமத்தில் இருந்து நான்கு பேர் பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவுசெய்யப்பட்டிருக்கிறார்கள். உடப்பில் இருந்து 8 பேர் பல்கலைக்கழகங்களில் பல்வேறு கற்கை நெறிகளில் கல்விபயில்கின்றார்கள். இவர்களில் இருவர் மிகவறிய மீனவத் தொழிலாளர்களின் பிள்ளைகளாவர். 57 பேர் க.பொ.த.(உ/த) சித்தியடைந்தும் தொழில் வாய்ப்பின்றி இருக்கின்றனர்.

பெண்பிள்ளைகள் வேலை செய்வதில் அதிக ஆர்வம் காட்டத் தொடங்கியிருக்கிறார்கள். ஆடைத்தொழிற்சாலைகளிலும், இறால்பண்ணைகளிலும் இவர்கள் வேலை செய்கின்றனர். இளைஞர்களிடையே வெளிநாட்டு மோகம் அதிகரித்து வருகின்றது. காணி, வீடு, வள்ளம் எதையாவது விற்றாவது, கடன் பட்டாவது ஐரோப்பிய நாடுகளுக்கு செல்லத்துடிக்கும் இளைஞர்கள் அதிகமாகவிருக்கிறார்கள். பலர் தரகர்களால் இடைநடுவில் கைவிடப்பட்டு மீண்டும் திரும்பி வந்திருக்கிறார்கள்.

**தமிழ் கிராமங்கள் என்பதால் புறக்கணிப்பு:**

இக்கிராமங்கள் தமிழ்க் கிராமங்கள் என்பதாலோ என்னவோ எவ்வித அடிப்படை வசதிகளும் இல்லாதனவாக இருக்கின்றன. சீரான வீதிகளோ, குடிநீர் விநியோகமோ, விளையாட்டு மைதானமோ, வாசிகசாலைகளோ, எதுவுமில்லை. கிராமத்தின் குறுமண் வெளிகள் பயிர்ச் செய்கைக்கு வாய்ப்பானவையல்ல. கடலாலும், ஆறுகளாலும் சூழப்பட்ட இக்கிராமங்கள் இக்காலம் வரை எவ்விதமான இனவன்முறைகளாளோ, குடியேற்றங்களாளோ பாதிப்படையவில்லை.

கிராமத்தின் சகலவிதமான சமூகநலன் நடவடிக்கைகளுக்கும் ''இந்து பரிபாலன சபை'' என்ற அமைப்பே பொறுப்பாக இருக்கிறது. இதன் பெரும் பணி ஆலயங்களைப் பராமரிப்பது, சமய நிகழ்ச்சிகளை நடத்துவது என்பனவையாகும். என்றாலும் இவ்வமைப்பே சந்தைகளை ஏலம்விட்டும், பலநிதிதிரட்டல் நடவடிக்கை மூலமும் சிரமதானம் மூலமும் கிராமத்திற்கு சிற்சில வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து வருகின்றது. வேறு எவ்வகையான சமூக அமைப்புகளோ இயக்கங்களோ இக்கிராமத்தில் இல்லை.

***இறால் பண்ணைகளால் கிராமம் பறிபோகும் ஆபத்து***

உடப்பு ஆண்டிமுனைக்கிராமங்களின் இயல்பு வாழ்வையும், தொழிலையும் உலுக்கும் வகையில் இறால் பண்ணைகளின் பெருக்கம் உருவாகியிருக்கிறது. இரவோடிரவாக இறால் பண்ணைகள் ஆரம்பிக்கப்படுகின்றன. கிராமத்தின் தரிசு நிலங்களிலும், கரையோரங்கள், ஆற்றுப்படுக்கைகள் யாவும் மிகவேகமாக இறால்பண்ணைகளுக்.காக ஆக்கிரமிக்கப்பட்டு வருகின்றன. இதனால் கிராமத்தின் பாரம்பரிய மீனவத்தொழில் பாதிக்கப்பட்டு வருவதோடு பெருமளவு மீனவர்கள் தொழிலை இழக்க வேண்டிய நிலையும் தோன்றியுள்ளது. இறால் பண்ணைகளில் கிராமத்தின் நிலங்கள் பறிபோவதோடு, சுற்றுப்புறச் சூழல் மிகவேகமாக மாசடைந்து வருகின்றது. நச்சுப் பொருட்களும், கழிவு நீரும்,நீரிலும் நிலத்திலும் கலப்பதனால் நீர்நிலைகளும் நிலமும் மாசடைகின்றன. குடிநீருக்கு ஊற்று நீரையும், கிணறுகளையும் நம்பிவாழும் மக்கள் குடிநீர் கூட பெறமுடியாத அவலம் அதிகரித்து வருகிறது. சிலவேளை இரண்டு மைல் தூரம் போய் குடிநீர் தேடுகிறார்கள். மேலும், இறால் பண்ணைகளால் சூழல் மாசடைவதையும், கிராமம் பறிபோவதையும் தவிர கிராம மக்களுக்கு எவ்வித பயன்பாடும் இல்லை.

இறால் பண்ணை உடமையாளர்கள் புதிய பணக்கார வகுப்பாக உருவாகி வருகின்றன்றார்கள். இவர்களிடம் பணப்புழக்கம் அதிகரித்து வருகிறது. இதன் மூலம் கிராமத்தின் உற்பத்தி உறவும், பொருளாதார சமநிலையும் வெகுவாக மாறிவருகின்றன. இறால் பண்ணை உடமையாளர்கள் பணத்தைக் கொண்டு எதையும் செய்யும் துணிவு பெற்று வருகிறார்கள்.

இறால் பண்ணைகளில் பெண்களும், சிறுவர்களும் குறைந்த கூலியில் அதிகம் சுரண்டப்படக் கூடிய தொழிலாளர் படையாக மாற்றப்பட்டு வருகிறார்கள். இறால் பண்ணைகளால் வரும் சுகாதாரக் கேடுகள் பெண்களையும் சிறுவர்களையும் விரைவாக பாதிக்கும் ஆபத்து எழுந்துள்ளது. இறால் பண்ணைகளை சுத்திகரிக்கும் தொழில்களான களிவகற்றுதல், துப்புரவாக்கல் போன்ற சுகாதாரக் கேடான தொழில்களில் பெண்களும் சிறுவர்களுமே ஈடுபடுகின்றனர்.

15.10.95 இல் ஆண்டிமுனைக்கிராமப் பெண்கள் அதிகாலையில் இருந்து புதிய இறால் பண்ணைகள் அமைக்க கொண்டு வரப்பட்ட புல்டோசர்களை மறித்து முழுநாளும் மறியல் செய்தார்கள். இனிமேலும் தாம் தம் பூமியையும், வேலையையும் இழக்க தயாரில்லை என இவர்கள் கூறுவது சற்று ஆறுதலானதுதான்.

இறால் பண்ணைகளால் இலட்சம் இலட்சமாய் பணம் புழங்கியபோதும் அது தனிப்பட்டவர்களின் கைகளில்தான் புரள்கிறது. அதனால்தான் ஏழை மீனவகிராமவாசிகள் மேலும் மேலும் ஏழ்மையடைவதோடு தம் தொழிலையும், நிலத்தையும், சுயத்தையும் இழந்து வருகின்றார்கள்.

நீண்ட கால நோக்கில் இக்கிராமங்கள் இம் மக்களின் கையை விட்டுப்போய்விடும். அரசியல் சமூக எதிர்காலமற்று புறக்கணிக்கப்பட்ட மக்களாக இவர்கள் இருக்கிறார்கள்.

கிரமத்தின் படித்த இளைஞர்கள், பாடசாலை ஆசிரியர்கள், பொறுப்புவாய்ந்தவர்கள் எதிர்காலம் குறித்து நிச்சயமற்றிருக்கிறார்கள். முடியுமானால் பிரச்சினைகளில் இருந்து தப்பிச் செல்லுமாறு சூழ்ல் அவர்களை நிர்ப்பந்திப்பதை விளங்கிக்கொள்ளக் கூடியதாயிருக்கிறது.

புத்தளம் மாவட்டத்தின் தனித்தமிழ் கிராமங்களாக தலைநிமிர்ந்திருக்கும் இக்கிராமங்களின் எதிர்காலம் என்ன என்பது தான் அக்கிராம மக்களின் இன்றைய கேள்வியாக இருக்கின்றது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# இலங்கை பாராளுமன்ற அரசியலில் பெண்கள் — 14

1970ம் ஆண்டு தேர்தல், உலகம் இலங்கையை கூர்ந்து கவனிக்கச்செய்த தேர்தலாகக் கருதலாம். குறிப்பாக பெண்கள் அரசியலைக் குறிப்பிடலாம்.

ஐக்கிய தேசியக்கட்சியின் தலைமையிலான அரசாங்கத்தின் ஐந்து வருட கால ஆட்சி முடிவு பெற்று 1970 மார்ச் 28ம் திகதி பிரதிநிதிகள் சபைகலைக்கப்படும்போது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி - சமசமாஜ கொம்யூனிஸ்ட் ஐக்கிய முன்னணி உருவாக்கப்பட்டிருந்தது. இவ் ஐக்கிய முன்னணியின் தலைவியாக சிறிமாவோ பண்டாரநாயக்கா நியமிக்கப் பட்டிருந்தார்.

இலங்கை 1960யூலை தேர்தலில் பெற்ற சாதனையை ஸ்திரப்படுத்துவதாக இந்த1970 தேர்தல் இருந்தது எனலாம்.

1970ம் ஆண்டு ஏப்பிரல் 23ம் திகதி ஏழாவது பாராளுமன்றத்தை அமைப்பதற்காக 440 பேர் வேட்பு மனுத்தாக்கல் செய்திருந்தனர். இவர்களில் 14பேர் பெண்கள்.

இவர்கள் கட்சிரீதியாக பின்வருமாறு பிரிந்து காணப்பட்டனர்.

*1. ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி - 4*
*2. லங்கா சமசமாஜக்கட்சி - 2*
*3. ஐக்கிய தேசியக்கட்சி - 3*
*4. மக்கள் ஐக்கிய முன்னணி - 1*
*5. சிங்கள மக்கள் கட்சி - 4*
*(சிங்கள மஹஜன பக்ஷய)*

இத்தேர்தலில் மூன்று தம்பதிகள் போட்டியிட்டனர். அவர்கள் பிலிப் குணவர்தன - குசுமா குணவர்தன, டீ.பி.இலங்கரத்தன - தமராகுமாரி இலங்கரத்ன, லெஸ்லி குணவர்தன - விவியன் குணவர்தன

இவர்களில் டி.பி.இலங்கரத்ன,லெஸ்லி குணவர்தன,சோடிகளே வெற்றிபெற்றிருந்தனர். பிலிப்-குசுமா ஆகியோர் இருவரும் இரு தொகுதிகளிலும் தோல்வியடைந்தனர்.

1970 மே27ம் திகதிஇடம் பெற்ற தேர்தல் சிறப்புமிக்க தேர்தல்களில் ஒன்றுக கொள்ளலாம்.

இத்தேர்தலின் போது; 1956இல் எஸ். டபிள்யு ஆர். டி. பண்டாரநாயக்காவின் கொள்கையை முன் எடுப்பதற்காகவும் சோசலிஷ ஜனநாயகத்தை ஸ்தாபிப்பதனை நோக்கமாகவும் கொண்டு 1968இல் ஆரம்பிக்கப்பட்ட ஐக்கிய முன்னணி 156தொகுதிகளில் 115 தொகுதிகளை வென்றது. இதன் மூலம் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தைக்கொண்டிருந்தது. ஐக்கிய தேசியக்கட்சி இத்தேர்தலின் போது 128 தொகுதிகளில் போட்டியிட்டிருந்தாலும் 17தொகுதிகளில் மாத்திரமே வென்றது.

பெண்களைப் பொருத்தவரையில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் சார்பில் போட்டியிட்ட நால்வரும் வென்றார்கள். அதேபோல் லங்கா சமசமாஜக்கட்சியின் சார்பில் போட்டியிட்டஇருவரும் வென்றார்கள். ஏனைய அனைவரும் தோல்வியடைந்தனர்.

அத்தனகல்ல தொகுதியில் போட்டியிட்ட சிறிமாவோ பண்டாரநாயக்கா 21,723 அதிகப்படியான வாக்குகள் பெற்று வென்றார்.

7180 அதிகபடியான வாக்குகளை பலங்



கொட தொகுதியில் பெற்று வென்ற மல்லிகா ரத்வத்த இரண்டாவது தடவையும் பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்டார். இத் தொகுதியில் நான்கு பேர் போட்டியிட்டிருந்தபோதும் இரு பெண்களுக்கிடையே போட்டி காணப்பட்டது. இத்தேர்தலில் மல்லிகாவுக்குப் போட்டியாக, ஐ.தே.க. சீதா மொலமூரே செனவிரத்னவை நிறுத்தியிருந்தது குறிப்பிடத்தக்கது.

1965ம் ஆண்டு பொதுத்தேர்தலில் 844 அதிகப்படியான வாக்குகளை பெற்று மீரிகம தொகுதியில் வென்ற ஷீவா ஓபேசேகர இம்முறை 5323 அதிகப்படியான வாக்குளைப் பெற்று அதே தொகுதியில் வென்றார்.

1965-70 காலப்பகுதியில் பிரதிநிதிகள் சபையில் முக்கிய பதவிவகித்த இவர் 1970ம் ஆண்டு ஐக்கிய முன்னணி அரசாங்கத்தில் சுகாதார பிரதி அமைச்சாக நியமிக்கப்பட்டிருந்தார். பின்னர் 1975ல் சுகாதார அமைச்சராக நியமிக்கப்பட்டிருந்தார்.

2560 அதிகப்படியான வாக்குளைப்பெற்று கலகெதர தொகுதியில் வென்ற தமரா குமாரி இலங்கரத்ன 1949இலிருந்து 1952 வரை கண்டி தொகுதிக்கான பாராளுமன்ற உறுப்பினராக சேவை செய்த அனுபவம் பெற்றவர். ஸ்ரீ.லங்கா சுதந்திரக்கட்சியின் பெண்கள் அமைப்பின் உப தலைவியாக இவர் கடமையாற்றியவர். 1970இன் பின் பாராளுமன்ற தலைமைக்குழுவுக்கு நியமிக்கப்பட்டதுடன் பாராளுமன்ற கூட்டங்களிலும் முக்கியத்துவம் பெற்றவராக திகழ்ந்தவர்.

*குசலா அபயவர்தன*

பொரல்ல தொகுதியில் 592 அதிகப்படியான வாக்குளைப்பெற்றுவென்ற குசலா அபயவர்தன முதற் தடவையாக பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்டார். லங்கா சமசமாஜக்கட்சியின் சார்பில் போட்டியிட்ட இவர் ஐக்கிய தேசியக்கட்சியின் அரசாங்கத்தில் தொழில் தொழில் வாய்ப்பு, வீடமைப்பு அமைச்சராக பதவி பகித்த எம்.எச்.மொஹமட்டை தோல்வியுறச் செய்திருந்தார்.

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா இரண்டாவது தடவையாகவும் இலங்கையின் பிரதமராக தெரிவு செய்யப்பட்டார். அதுவரை காலம் 10ஆண்டுகளுக்குள் இரண்டு முறை பிரதமராக நியமிக்கப்பட்டவரும் ஒரு தடவை எதிர்க்கட்சி தலைவியாக பதவி வகித்தவரும் சிறிமாவோ பண்டாரநாயக்கா ஆவார்.

## குடியரசின் முதற் பெண் பிரதமர்



குசலா அபேவர்த்தன

1970ம் ஆண்டு டிசம்பர் மாதம் லுசாகாவில் நடந்த அணிசேரா நாடுகளின் **(Non-Alignec Movenment)** மூன்றாவது மாநாட்டில் கலந்து கொண்ட பிரதமர் சிறிமா அவ்வமைப்பின் உப தலைவராக நியமிக்கப்பட்டார். ''இறுதி வரையும், பூரணமாக வல்லரசுகளிடம் அடிமைப்பட்டிருப்பதை இல்லாதொழிப்பதே எமது பிரதான இலக்காக இருக்க வேண்டும்'' என அம்மாநாட்டில் உரையாற்றியிருந்தார். **''ஏகாபத்தியத்திற்கும் காலனித்துவதிற்கும் எதிராகவும் தேசிய விடுதலைக்காகவும் போராடும் சகல இனங்களுக்கும் இலங்கை உதவியையும் ஒத்துழைப்பையும் வழங்கும்''** என தனது உரையின் இறுதியில் தெரிவித்திருந்தார்.

1973 மே 13ம் திகதி அல்ஜிரியாவில் நடைபெற்ற அணிசேரா நாடுகளின் நான்காவது மாநாட்டில் இலங்கை பிரதிநிதிகளுக்கு தலைமை தாங்கிச் சென்றிருந்தார். 1971 ஜனவரியில் சிங்கப்பூரில் இடம் பெற்ற பொதுநலவாய நாடுகளின் பிரதமர்களின் மாநாட்டில் இலங்கைப் பிரதிநிதியாகவும் சிறிமா கலந்து கொண்டிருந்தார்.


1972 மே மாதம் 22ம் திகதி இலங்கை குடியரசாக பிரகடனப்படுத்தப்பட்டதன் பின் இலங்கை சோஷசலிஷ ஜனநாயக குடியசரசின் முதற் பிரதமராக சிறிமா காணப்பட்டார்.

1976 ஒகஸ்ட் மாதம் 16ம் திகதி இலங்கையில் 86 நாடுகள் கலந்து கொண்ட அணிசேரா நாடுகளின் ஐந்தாவது மாநாடு ஆரம்பமானது. அது ஸ்ரீ லங்காவுக்கு சிறப்பு தந்த ஒரு தினமாக கொள்வர். இம்மாநாட்டின் போது அணிசேரா நாடுகளின் தலைவராக சிறிமாவோ பண்டாரநாயக்கா நியமிக்கப் பட்டார். பெண்ஒருவர் அப்பதவிக்கு நியமிக்கப்பட்ட முதற் சந்தர்ப்பம் அதுவே. 1979 இல் கியூபா நாட்டில் ஹவானா நகரில் ஆறாவது மாநாடு நடைபெறும் வரையில் அப்பதவியில் திருமதி சிறிமாவே இருந்தார்.

அணிசேரா மாநாட்டின் புதிய தலைவராக இலங்கை பிரதமரை நியமிக்கப்பட்டதைப் பற்றி சாம்பிய ஜனாதிபதி பேராசிரியர் கெனத் கவுண்டா, சைபிரஸ் ஜனாதிபதி மகாரியோஸ், வியட்நாம் சோஷலிஷ அரசின் பிரதமர் பேம் வென் டொங், பனாமா ஜனாதிபதி டமார் டொரிஜோஸ், ஹராரே, கயானா பிரதமர் போர்பஸ் பர்ன்ஹம், மற்றும் இந்தியப்பிரதமர் இந்திராகாந்தி ஆகியோர், உலகத்தின் முதலாவது பெண் பிரதமரின் தலைமையை தாங்களும் ஏற்றுக்கொண்டோம் எனும்கருத்து பொதிந்த உரையை ஆற்றியிருந்தனர். திருமதி சிறிமாவை தலைவர் பதவிக்கு முன்மொழிந்த மிசர் (எகிப்து) ஜனாதிபதி அன்வர் சதாத் உரையாற்றும் போது இதுவரை காலம் அணிசேரா கூட்டமைப்புக்கு திருமதி சிறிமாவோவினால் கிடைக்கப்பெற்ற ஒத்துழைப்பினாலும் அவர் உலகம் முழுவதும் பெற்றுள்ள அங்கீகாரத்தினாலும் மாநாட்டின் தலைமைப்பதவிக்கு அவரே பொறுத்தமானவர் என குறிப்பிட்டிருந்தார்.

திருமதி சிறிமாவினால் முன்வைக்கப்பட்ட யோசனைகளில் இந்த மாநாட்டின் போது இந்து சமுத்திரத்தை சமாதான பிராந்தியமாக்குதல், காலனித்துவ நாடுகளில் கடத்தப்பட்ட புராதன சொத்துக்களை மீளப்பெறுதல், அணிசேரா நாடுகளுக்கான வர்த்தக வங்கியொன்றை ஸ்தாபித்தல், ஆகிய மூன்றையும் மாநாடு அங்கீகரித்தது.

(வரும்)



### 1970 பொதுத்தேர்தல்

| | | |
|---|---|---|
| ***அத்தனகல்ல*** | | |
| திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க | SLFP | 31612 |
| J.R. சூரியப்பெரும | SLFP-MEP | 9889 |
| W. ரத்னசேகர | R.R | 349 |
| ***கலகெதர*** | | |
| திருமதி தமரா குமாரி இலங்கரத்ன | SLFP | 13211 |
| W.M.G.T. பண்டா | UNP | 10651 |
| ***மீரிகம*** | | |
| திருமதி ஸ்ரீவா ஒபேசேகர | SLFP | 24872 |
| W.S. கருணாரத்ன | UNP | 19549 |
| ***பலாங்கொட*** | | |
| H.M. பண்டாரநாயக்க | MEP | 114 |
| திருமதி மல்லிகா ரத்வத்தை | SLFP | 18808 |
| திருமதி சீதா மொலமூரே செனவிரத்ன | UNP | 11619 |
| P. தெல்கொட | I | 176 |
| S. ஸ்ரீ காந்தன் | I | 222 |
| ***தெகிவளை-கல்கிஸ்ஸ*** | | |
| திருமதி விவியன் குணவர்தன | LSSP | 29430 |
| எஸ்.டி.எஸ்.ஜயசிங்க | UNP | 27463 |
| ***பொரல்ல*** | | |
| திருமதி குசலா அபயவர்தன | LSSP | 16421 |
| M.H. மொஹம்மட் | UNP | 15829 |
| M.A. மன்சூர் | I | 510 |
| ***கலிகமுவ*** | | |
| P.A.P.B. பாலசூரிய | SLFP | 13370 |
| P.B. நவரட்ன | SLFP | 297 |
| திருமதி விமலா கண்ணங்கர | UNP | 12702 |
| ***கொலன்னாவை*** | | |
| திருமதி குசுமா குணவர்தன | MEP | 12881 |
| D.P இலங்கரத்ன | SLFP | 217171 |
| ***கலவான*** | | |
| சரத் முத்தட்டுவேகம | CP | 11109 |
| திருமதி P. சோமா மெதிவ் | SMP | 85 |
| அபேரத்ன பிலபிட்டிய | UNP | 6314 |
| ***திவிடகல*** | | |
| பியதாஸ ஹரிச்சந்திர | SLFP | 20614 |
| திருமதி D.M.S. தர்மதிலக்க | SMP | 368 |
| அல்பிரட் அமரசேகர | UNP | 9461 |
| ***தெஹியோவிட்ட*** | | |
| D.P.R. விரசேகர | LSSP | 17091 |
| திருமதி D. H. பெர்ணான்டோ | SMP | 355 |
| M.S. தேமிஸ் | UNP | 12884 |
| ***மொரட்டுவ*** | | |
| விமலசிறி டிமெல் | LSSP | 24672 |
| திருமதி M. நீனா விஜெசூரிய | SMP | 252 |
| M. ருஸ்கின் பெர்னாந்து | UNP | 20258 |
| ***பஸ்ஸர*** | | |
| S.A.S. சோமபால | SLFP | 8382 |
| பின்சிறி பெர்ணான்டோ | SMP | 176 |
| திருமதி லில்லியன் பீரிஸ் | UNP | 5798 |
| ரட்னம் குமாரவேல் | I | 114 |

**SLFP- Sri Lanka Freedom party**
**UNP-United National Party**
**MEP- Mahajana Eksath Peramuna**
**I- Independent**
**SMP- Samajawathi Mahajana Peramuna**

உரும்--

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# குடும்பம் என்பது ஒரு அதிகார நிறுவனமா?

## பெண்களும் குடும்ப உறவுகளும் – 1

இராசம்மா – அநாமிகா



எமது தமிழ்ச் சூழலில் பெரும்பாலும் 99% வீதமானவர்கள் நிலவுகிற ஆண்-பெண் அசமத்துவ நிலையை கேள்விக்குட்படுத்தாமல் இருப்பது என்பது ஆசசரியமாகவே உள்ளது. தமிழ்ச்சூழலில் மிகக் குறைந்தளவில் பெண்ணிலை வாதிகள் இருக்கவே செய்கிறார்கள்.இவர்கள் சீதனம், சமனற்ற சம்பளம், வேலைவாயப்பு, உயர்கல்வி, பாலியல் தொல்லை எனக் குறிப்பிட்ட சில விடயங்களையே கவனத்திற்கெடுத்து விவாதிக்கிறார்கள். ஒருபுறம் இந்த அசமத்துவ நிலை என்றென்றும் பெண்கள் முகம் கொடுத்துவரும் பிரச்சினைகள், என்றபோதிலும் அவை மட்டுமே பெண்களது பிரச்சினைகள் அல்ல. அதற்கு மேலாக பல விடயங்களில் குறிப்பாக குடும்பம் **(Family)**,பால் வேறுபாடு **(Gender)** தாய்மை **(Motherhood)** , பாலியல் உறவு **(Sexuality)** போன்ற விடயங்களை முழுமையாக ஆய்வு செய்து அவற்றின் அசமத்துவ நிலை, ஐதீக பலம்,சமூக கருத்தியல்கள் செலுத்தும் அழுத்தங்கள் என்பனவற்றை புரிந்து கொள்ளாமல் ஒரு பெண் நிச்சியமாக பெண்ணிலை வாதியாக இருக்க முடியாது. அதாவது சமூகத்தில் ஒவ்வொரு பெண்ணும் குடும்பம், பால் வேறுபாடு, தாய்மை, பாலியல் உறவு, என்பனவற்றை எவ்வாறு முகம் கொடுக்கிறாள், அவற்றின் மீது சமூக கருத்தியல்கள் (கலை, இலக்கியம், கலாசாரபண்பாடு, மதம், ஆணாதிக்கம்) எவ்வாறு ஆதிக்கம் செலுத்துகின்றன. அவற்றுள் பெண்கள் எவ்வாறு மூழ்கிப் போகிறார்கள் போன்ற முக்கிய விடயங்களை ஆராயாமல் ஆண்-பெண் அசமத்துவ நிலையைப் புரிந்து கொள்ள முடியாது என்பது மட்டுமல்ல அவை மீண்டும் பெண்களை கீழ்படிவிற்கே இட்டுச் செல்லும் என்பதும் மறுக்க முடியாத உண்மையாகும்.

### குடும்பம் பற்றிய கருத்துக்கள்

முதலில் குடும்பம் என்ற பதம் என்ன வரையறையைக் கொண்டிருந்தது, தற்போது என்ன வரையறையைக் கொண்டிருக்கிறது என நோக்குவோமாயின் குடும்பம் என்ற பதம் எவர்களை உள்ளடக்குகிறது என்பது கூட காலப்போக்கில் மாற்றமடைந்தே வந்துள்ளது. என்பதனைப்புரிந்து கொள்ள முடியும். **Jeanilouis Flandrin** என்பவர் **France Dictionary**யில் குடும்பம் என்ற பதம் 16, 17, 18ம் நூற்றாண்டுகளில் இரத்த உறவு சேர்ந்து வாழ்தல் ஆகிய இரண்டு வேறுபட்ட விடயங்களை குறிக்கவே பயன் பட்டது எனவும், அரிதாக சில வேலைகளில் இரத்த உறவு அல்லது திருமணத்தால் பிணைக்கப்படாத ஒரே வீட்டில் வசிப்பவரை குறிப்பதாக பயன்பட்டது எனவும், 17ம் நூற்றாண்டில் ஒரே வீட்டில் வாழும் அந்த வீட்டு ஆணின் தலைமையின் கீழ் வசிக்கும் அனைவருமே **(Wife, Baby, Servant, Domestics,)** குடும்பம் என்ற பதத்திற்குள் உள்ளடக்கப்பட்டதாகவும், அக்காலத்தில் இதுவே முதன்மையான அர்த்தமாக இருந்தது எனவும் கூறுகின்றார்.

18ம் நூற்றாண்டில் இது ஒரே வீட்டில் வாழும் இரத்த உறவினரை மட்டுமே குறிப்பதாக மாறிவிட்டது. 1869ல் குடும்பம் என்பது ஒரே இரத்த உறவைக் கொண்ட ஒரே வதிவிடத்தைக் கொண்ட குறிப்பாக தாய், தந்தை, குழந்தைகள் என்பவர்களை மட்டுமே கொண்டதாக இந்த வரையறை மாறிவிட்டது எனவும் கூறுகிறார்.

குறிப்பிட்ட ஒரே காலத்தில் ஒரே சமூகத்தின் உள்ளேயே வெவ்வேறு வர்க்கங்களின் மத்தியில் குடும்பம் என்பது வேறுபட்ட அர்த்தங்களைக்கொண்டதாக விளங்கியது.

16ம், 17ம் நூற்றாண்டில் பிரபுக்களதும் விவசாயிகளதும் குடும்பங்களிடையிலும், கைத்தொழில் புரட்சியின் ஆரம்ப காலத்தில் நிலவிய தொழிலாளிவர்க்க குடும்பத்திற்கும், 19ம் நூற்றாண்டு நடுப்பகுதியில் வாழ்ந்த முதலாளிவர்க்க குடும்பத்திற்கு இடையிலும் வேறுபாடுகள் காணப்படவேசெய்தது. இக் குடும்பங்களுக்குள் பாலுறவு, சொத்துறவு வாரிசு என்பவற்றிலும் வேறுபாடு காணப் பட்டது.

நவீன காலமாகிய 20ம் நூற்றாண்டில் குடும்பம் என்ற பதம் திருமணமாதல், பெற்றோராதல், ஒரேவதிவிடத்தை கொண்டிருத்தல் (தாய், தந்தை, குழந்தை) என நவீன வரையறையைக் கொண்டிருந்தாலும் எமது சமூகத்தில் பல் வேறுபட்ட வடிவங்களில் குடும்ப உறவுகள் காணப்படவே செய்கிறது. இவர்களை வரையறுப்பதில் ஒரு சிக்கல் ஏற்படுகின்றது. அட்டவணையைப் பார்க்கவும்.

| திருமணம் | பெற்றோராதல் | ஒரேவதிவிடம் | அர்த்தம் |
|---|---|---|---|
| ஆம் | ஆம் | ஆம் | முழுமையான கருக் குடும்பம் |
| ஆம் | ஆம் | இல்லை | கணவன் மனைவி தற்காலிகமாக பிரிந்து வாழ்தல் |
| ஆம் | இல்லை | ஆம் | குழந்தையில்லாத திருமணமாவர்கள் |
| ஆம் | இல்லை | இல்லை | பெயரளவில் திருமணம் |
| இல்லை | ஆம் | இல்லை | சமூக வரையறையை மீறியவர்கள் |
| இல்லை | ஆம் | ஆம் | திருமணமாகாத, ஒரே வதிவிடம் கொண்ட பெற்றோர் |
| இல்லை | இல்லை | ஆம் | ஒன்றாக வாழ்பவர்கள் |

இந்த அட்டவணையைப் பார்க்கும் போது குடும்பம் என்பதை இன்று வரையறுப்பதில் உள்ள சிக்கலைப் புரிந்துக் கொள்ளக் கூடியதாய் உள்ளது. இந்த மாதிரியான உறவுகளை குறைந்தளவில் நமது சமூகத்தில் பார்க்க கூடியதாய் உள்ளது. ஆனால் சமூக நியமமான (திருமணமாதல், பெற்றோராதல், ஒரே வதிவிடம்) என்பதனை கருத்திற்கெடுக்கும் போது இவர்களை வரையறுப்பதில் முடிவு காண முடியாதவர்களாகவே உள்ளோம். ஆகவே சமூகத்தில் நியமமாக எடுத்துக் கொள்ளப்பட்ட வரையறை சரிதானா என்பது சங்கடத்திற்குரியதாகவே உள்ளது. இவற்றைப் பாக்கும் போது திருமணம் குடும்பம் என்ற வரையறையெல்லாம் நெகிழ்வுநிலை நோக்கி அதாவது காலச்சூழலுக்கு ஏற்ப இன்றுவரை மாற்றமடைந்து வருவதைக்காணக் கூடியதாய் உள்ளது. இவ்வாறு பார்க்கும் போது குடும்பம் என்ற நிறுவனம் எல்லா இடங்களிலும், எல்லா சமூகங்களிலும் ஒரே வரையறையை உடைய இயற்கையான நிறுவனமல்ல என்பது தெட்டத் தெளிவாககின்றது. இதனை மனித சமுதாயத்தின் வரலாற்றைத் திரும்பிப்பார்த்தால் இன்னும் விரிவான விளக்கத்தைப் பெறுவதுடன் குடும்ப நிறுவனம் எப்படியெல்லாம் கற்பனை பண்ண முடியாதளவிற்கு மாற்றத்திற்கு உள்ளாகி வந்துள்ளது என்பதனையும் அறிய முடியும். இதனை ''குடும்பம் - அரசு தனிச்சொத்து'' என்ற நூலின் மூலம் மனிதசமூக வரலாற்றுப் பரிணாமத்தின் ஒரு வடிவத்தை பார்ப்போம்.

''குடும்பம்-அரசு-தனிச்சொத்து'' என்ற நூலில் எங்கெல்ஸ் வரலாற்றுக் காலகட்டத்தை மூன்றாக பிரித்து நோக்குகின்றார். அவை 1)காட்டுமிராண்டிக்காலம் 11)அநாகரிகக் காலம் 111) நாகரிக காலம் என்பவையாகும். காட்டுமிராண்டிக்காலத்தில் மனிதர்கள் விலங்குகள் போல் இருந்தார்கள். வேட்டையாடி உணவு சேர்த்து வந்துள்ளார்கள்.

இக்கால கட்டத்தை ஆதிகம்யூன் எனவும் அழைப்பர். ஏனெனில் வர்க்கம், பால் என்ற பிரிவினையோ, உழைப்பு பிரிவினையோ இருக்கவில்லை. தாய்வழிசமூகமாகவே இருந்தது. அதாவது பெண்கள் எந்தவித அடக்கு முறைகளுக்கும் உட்படாது சுதந்திரமான மனித ஜீவியாக வாழ்ந்த காலகட்டம் இதுவேயாகும். இக்காலத்தில் பெண்ணை வைத்தே குழந்தையை இனம் கண்டனர்.

இதனை அடுத்து அநாகரீக காலத்தில் ஒருபுறம் மந்தைமேய்ப்பு, விவசாயம் என விரிவடைய மறுபுறம் வேட்டையாடுவதற்கு தூரஇடங்களுக்கு போக வேண்டி ஏற்பட்டது. இதனால் பெண்கள் குழந்தை பராமரிப்பு என வீட்டோடு தங்க ஆண்கள் உணவு தேடுபவராக வெளியில் செல்ல நேர்கிறது. இக்கால கட்டத்தில் சில இடங்களில் நிலைமை இவ்வாறும், வேறு சில இடங்களில் பெண்கள் வேட்டையாட சென்றுகொண்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

அடுத்து, நாகரீக காலத்தில் ஆண்களே உணவுதேடுபவராகவும்,அதனால்சொத்து-செல்வம் என இவர்களிடம் குவியத்தொடங்கிய போது, இந்த சொத்துகளுக்கு உரித்துடையவர்கள் யார் என்ற கேள்வியும் எழுகின்றது. அது தமது வாரிசுக்கே என கோரப்படுகின்றது. இதன் போதே தாய்வழி சமூகம் வீழ்ச்சியடைந்து தந்தைவழி சமூகம் தோற்றம் பெற்றது எனலாம். இந்த வீழ்ச்சியே பெண்களுடைய வரலாற்றுகதியில் ஏற்பட்ட தோல்வி என்றால் மிகையாகாது. இந்த கால கட்டத்தை வெறும் வார்த்தையினால் விளக்கிக் கூறிவிடமுடியாது. ஏனெனில் இந்த தந்தை வழிசமூகம் என்பது கடுமையான போராட்டத்தினூடே வந்திருக்க முடியும். இந்த வரலாற்றுரீதியான தோல்வியே பெண்களை பாலியல் உறவுரீதியில் **(Sexuality)** ,பால் வேறுபாடு **(Gender)**, ஒரு தார ஒருபுருஷ குடும்பம் **(Monogomy)**, இரண்டாம் பட்ச கீழ்ப்படிவு நிலை **(Sobortionation)** போன்றவற்றின் தோற்றத்திற்கு மூலமாய் இருந்தது என்றால் மிகப் பொருத்தமானதே.

இவ்வாறு தந்தை வழிசமூகமே குடும்பத்திற்கு தோற்றுவாயாக அமைந்தது போல், தனிச் சொத்துடமை கருக் குடும்ப நிலைக்கு **(Nuclear Family)** வடிகாலாய் இட்டுச்சென்றது னெ எங்கெல்ஸ் குறிப்பிடுகிறார். இவ்வாறு தோற்றம் பெற்ற குடும்பமே ஆரம்பத்தில் உற்பத்திலகாக இருந்தது எனவும் கூறுவர். அதாவது உற்பத்தியானது வீட்டைமையமாக வைத்தே இருந்தது. இதன் போது பெண்களும் நேரடியாகவே உற்பத்தியில் மந்தைமேய்ப்பு, விவசாயம் போன்றவற்றில் பங்குகொண்டார்கள். பின்னர் முதலாளித்துவத்தின் வளர்ச்சியுடன் தொழிநுட்ப சாதனங்கள் பாரியளவில் வளர்ச்சியடைய உற்பத்தியானது. வீட்டிற்கு வெளியே நடைபெறத் தொடங்கியது. இதன் போதே வேலை பிரிவினை (உழைப்பு பிரிவினை) ஏற்பட பெண்கள் சொத்து, வாரிசு என வீட்டோடு கட்டப்பட்டார்கள். இதனால் குடும்ப நிறுவனமானது நுகர்வலகாக மாற்றமடைந்தது எனவும் கூறுவர்.

எனவே ஒட்டுமொத்தமாக குடும்பநிறுவனம்என்பதை தற்போதைய நிலையில் வைத்தும், வரலாற்றுப் போக்கை வைத்தும் நோக்கும்போது ஒரு தெளிவான முடிவிற்கு வரக் கூடியதாய் உள்ளது. அஃதே குடும்ப நிறுவனம் என்பது நிலையானதோ, இயற்கையானதோ அல்ல. காலத்திற்கு ஏற்ப இன்றுவரை மாற்றமடைந்துவரும் ஒரு நிறுவனம் என்பதே பொருத்தமானதாகும்.

குடும்பம்புனிதமானதா? என்ற கேள்வியைத் தொடுப்போமாயின் அதன் உள்ளார்ந்த அம்சங்களை விரிவாக பரிசீலிக்கும் போதே தெளிவான முடிவிற்குவரமுடியும்.



ஆனால் எமது தமிழ்ச் சமூதாயத்தில் குடும்பம் என்பது புனிதமானது என்றும், பெண் திருமணமாகி, குடும்பத்திற்குள் சென்று வாரிசைப் பெற்றுக் கொடுக்கும் போதே நிறைவு பெறுகிறாள் என சமூக கருத்தியல்கள் பலமாக அழுத்தம் கொடுத்து அவளை அதற்குள்ளேயே அமிழ்த்திவிடுகிறது. அவளும் எவ்வித கேள்வியும் எழுப்பாது குடும்பநிறுவனத்தினுள் சென்று ஒருவித சமூக அந்தஸ்தை பெற்றுக்கொண்டவளாக திருப்தியடைகிறாள். ''புருஷன் மனைவி உறவுதான் புனிதமானது'' என்ற சினிமா பாடல் தொட்டு வெகுஜன தொடர்பு சாதனங்கள் அனைத்துமே இந்த சமூக கருத்தியலின் பலத்தையே மீண்டும் மீண்டும் வலியுறுத்துகிறது. இவையாவும் பொய்மைவாதமே என்பதை குடும்ப நிறுவனம் ஆற்றும் பாத்திரத்தையும் அங்கு பெண்ணின் பங்களிப்பையும் முழுமையாகப் பரிசீலிக்கும் போதே புரிந்து கொள்ளலாம்.

குடும்ப உறவுகள் என்பதை எங்கெல்ஸ் பினவருமாறு மேற்கோள்காட்டுகிறார். ''தந்தை, தாய், குழந்தை, சகோதரன், சகோதரி எனும் சொற்கள் வெறும் மரியாதையைக் குறிக்கின்ற பட்டங்கள் அல்ல. அவை முற்றிலும் திட்டவட்டமான மிகவும் கூறான பரஸ்பரக் கடமைகளைத்தாங்கியுள்ளன''. அஃது எமது சமூகத்தில் வெறும் பாசப்பிணைப்புக்களை கொண்டதுபோல் தோற்றமளிப்பது கானல் நீர் போன்றதேயாகும். இது ஓர் அதிகாரபடிநிலைவரிசையை தாங்கியுள்ளது. அதாவது குடும்ப நிறுவனம் என்பது அதிகாரத்தினாலும், திட்டவட்டமான கடமைகளினாலும் கட்டமைக்கப்பட்ட ஒரு உறவுநிலையே என்றால் மிகையாகாது.

இன்று எமது தமிழ்ச்சமூகத்தில் திருமணம்எனும் போது ஓர் சராசரி ஆண் பெண்ணிடமிருந்து எவற்றை எதிர்ப்பார்க்கிறார் எனப் பார்த்தால் மணப்பெண்ணுடன் கொண்டுவரப்படும் சீதனம், (வீடு, பணம், நகை) அடுத்து அழகானவளாய் இருக்கவேண்டும். சமையல் செய்யக்கூடியவளாகவும் வீட்டைப் பொறுப்பாக பராமரிக்கக் கூடியவளாகவும், சொத்துக்களை பாதுகாப்பவளாகவும், ஆணுக்கு வாரிசைப் பெற்றுக் கொடுப்பவளாகவும் இவற்றுடன் பொருளாதார வருமானத்தை பெற்றுத்தரக்கூடியவளாகவும் இருக்கவேண்டும் என்பதே பொதுவான எதிர்ப்பார்ப்பர்கும். இவற்றுடன் சாதகபொருத்தம், சாதியம், சமயம்,குடும்பநிலை (அந்தஸ்து) போன்ற யாவுமே கருத்தில் எடுத்துக் கொள்ளப்படும். இங்கு அதாவதுதமிழ்ச் சமூகத்தில் திருமணத்தின் போது ஒரு பெண்ணுக்கும் எதிர்பார்ப்புக்கள் இருக்கும் என்பது கருத்தில் எடுத்துக் கொள்ளப்படுவதேயில்லை. மாறாக அவள் தனது விருப்பத்தை (எதிர்ப்பார்ப்பை) தெரிவிக்கும்போது அவளைச் சர்வாதிகாரி, அடங்காதவள், குடும்பத்திற்கு பொருத்தமற்றவள் எனப் பல அர்த்தங்களை சமூகம் கற்பித்து விடுகிறது. இதனால் பல பெண்கள் தம்முடைய எதிர்பார்ப்புக்களை நசுக்கிக்கொண்டே திருமண பந்தத்தின் மூலம் குடும்ப நிறுவனத்திற்குள் நுழைகின்றனர்.


குடும்பம் என்ற நிறுவனத்தில் பெண்ணின் வேலைப்பிரிவினையைப்பற்றி பார்ப்போமாயின், திருமணத்தின் பின் பெண் சமையல், வீட்டுப்பராமரிப்பு, குழந்தை வளர்ப்பு என வீட்டுவேலைகளுடன் வருமானம் தேடித்தருபவளாகவும் இருக்க நிர்பந்திக்கப் படுகிறாள். இங்கு அதாவது இந்த குடும்ப நிறுவனத்தில் பெண்களுடைய வீட்டு வேலைகள் என்பது குறித்து ஆண்கள் எதுவித அக்கறையும் செலுத்துவதில்லை. அது பெண்ணுடைய கடைமை என்பது போலவே உணர்கிறார்கள். வீட்டுவேலைகள் என்பது ஒருவகை உழைப்பு என்ற மதிப்பீடு ஆண்கள் மனதில் எழுவதேயில்லை. அந்தளவிற்கு சமூகக்கருத்தியல்கள் ஆணையும், பெண்ணையும் பாகுப்பாடுகாட்டி கருத்துப் பலத்தை உருவாக்கியுள்ளது. இதனால் வீட்டுவேலைகள் குறித்து பெண் சலிப்புற்றாலும் கூட உள்ளார்ந்த புரிதலை எட்டுவதேயில்லை. அதாவது கீழ்ப்படிவிற்கும் வேலைச்சுமைகளுக்கும் ஆளாகும் பெண்ணே அதனைச் சரியாகப் புரிந்து கொள்ளாத போது ஓர் ஆண் எப்படி புரிந்து கொள்வார்? இந்த வகையில் பார்க்கும் போது குடும்பநிறுவனத்தில் வீட்டு வேலைகள் என்பதை விரிவாக ஆராய வேண்டியது அவசியமாகும்.

**பெண் வீட்டு வேலை குடும்பம் பற்றி அடுத்த இதழில்**


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# கொலன்னாவைக்குப் பிறகு...



# கொழும்பில் இப்படித்தான் இருக்கிறது!

கொலன்னாவ, ஒருகொடவத்த எண்ணெய் தாங்கி வெடிப்புச்சம்பவத்தைத் தொடர்ந்து கொழும்பு நகரில் தமிழ் மக்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்ட சம்பவங்கள் தொடர்பான செய்திக் கட்டுரையைச் சென்ற இதழில் விசேட கட்டுரையாகத் தந்திருந்தோம்.

இதுபோன்ற பல சம்பவங்கள் கொழும்பிலும், சூழவும் நடை பெற்றிருக்கின்றன. எனினும் பல சம்பவங்கள் வெளிவரவில்லை. இது தொடர்பான தகவல்களைச் சேகரிக்க சரிநிகர் செய்தியாளர் பல இடங்களுக்கு விஜயம் செய்தார். எனினும் நாம் தமிழ்ப் பத்திரிகையாளர்களாக இருப்பது எமது தகவல் திரட்டும் எல்லையை வரையறுக்கிறது என்பதை நீங்கள் புரிந்து கொள்வீர்கள் என நம்புகிறோம்.

சென்ற இதழில் வெளியான பாலத்துறைச் சம்பவத்தைப் பற்றித் தகவல் திரட்டச் சென்ற எமது செய்தியாளரையே ஒரு கும்பல் புலி..., புலி.. என விரட்டிக் கொண்டு வந்ததும், பின்னர் அவர் தெரிந்த சில நண்பர்களால் காப்பாற்றப்பட்டதும் நடந்த சம்பவங்கள்.

இங்கே எமது செய்தியாளரால் திரட்டப்பட்ட மேலும் சில தகவல்களைக் கீழே தருகிறோம்.

ஆ-ர்.

### முகத்துவாரத்தில்

ஒக்டோபர் 21ம் திகதி முகத்துவாரம் சென் ஜேம்ஸ் தேவாலயத்திற்கு முன்னால் வசித்து வந்த ராஜகுலசிங்கம் (வயது 40) கும்பலாக வந்த காடையர் கூட்டத்தினால் கடுமையாக தாக்கப்பட்டு இன்னமும் ஆஸ்பத்திரியில் இருக்கிறார்.

சரிநிகருக்கு ஆரம்பத்தில் கிடைத்த தகவல் இவர் இறந்து விட்டாரென்றே கிடைத்தது. பின்னர் அவரது மனைவியைக் கண்டு எடுத்த தகவலின்படி அவர் தற்போது மிகவும் மோசமான நிலையில் சிகிச்சை பெற்று வருவதாகத் தெரிகிறது.

ராஜகுலசிங்கத்தின் மனைவி கொழும்பு விவேகானந்த கல்லூரியில் கற்பிக்கும் ஆசிரியை. பெயர் வணக்கலோஜினி (வயது 29). சம்பவம் நடந்த தினமானது இவருக்கு குழந்தை பிறந்து 45வது நாள் என்பது குறிப்பிடத்தக்கது.

இதுபற்றி வணக்கலோஜினி கூறும் போது; ''அன்றைய தினம் மாலை 6.45 இருக்கும். வீட்டுக்கு வெளியில் சத்தமாக இருந்தது. வழமைபோல் குடித்துவிட்டு சண்டை பிடிக்கும் கோஷ்டிகள் என்றிருந்தோம். ஆனால் வீட்டின் கூரை மீது ஆட்கள் நடமாடுவதும் வீட்டு வாசல்வரை கூச்சல் வந்துவிட்டதையும் உணர்ந்ததன் பின்தான் ஏதோ அசம்பாவிதம் நடக்கிறதென்பதைப் புரிந்து கொண்டோம். வீட்டின் கதவை பலமாக பலர் தட்டுவது கேட்டதும் பின் கதவால் வீட்டுச் சொந்தக்காரரின் (சிங்களவர்) வீட்டுக்கு குழந்தையையும் எடுத்துக் கொண்டு போய் ஒழிந்தார் எனது தாய். எனது கணவர் கதவைத் திறந்ததும் எல்லோரும் தடிகளும், வாள்களும் போத்தல்களோடும் வேகமாக நுழைந்து தாக்கினர். ஏறத்தாழ 250பேர் இருக்கும். என்னை ஒரு பக்கம் கையால் தாக்கிக் கொண்டிருக்க எனது கணவரை இழுத்துக் கொண்டு போய் வெட்டினர். அதற்கிடையில் பலர் பொல்லுகளால் தாக்கினர்.

''நீ புலி அல்லவா...'! 'எங்கே மற்றவர்கள்...'' எனக் கேட்டு அடித்தனர். என்னால் அம்மா என்று கதறக்கூட முடியாத நிலை. ஏனென்றால் குழந்தையோடு பக்கத்துவீட்டு மலசலகூடத்தில் ஒழிந்திருக்கும் எனது அம்மா ஓடி வராமல் இருக்க வேண்டுமே. எனது கணவர் உயிர்போகும் நிலையிலிருந்த போது பொலிஸார் வந்து சேர்ந்தனர். அவர்கள் தான் அவசர சிகிச்சைப் பிரிவுக்குக் கொண்டு சென்றனர். கூடவே நானும் சென்றேன். ஆரம்பத்தில் நான்கூட கணவர் இறந்து விட்டார் என்றே நினைத்திருந்தேன். பின்னர்தான் பிழைத்து விட்டார் என்பதை அறிந்து ஓரளவு நிம்மதியானேன். கணவருக்கு ஏறத்தாழ 80 தையல்கள் போடப்பட்டிருக்கிறது. முகம், கழுத்து தவிர எல்லா இடங்களிலும் பெரிய வெட்டுக் காயங்கள். எனது கணவருக்கு சுயநினைவிருக்கிறதா என அறிவதற்காக தினமும் ஆஸ்பத்திரியில் ''மகன் பிறந்து இன்றோடு எத்தனை நாள் தெரியுமோ?'' என கேட்பேன். அவரும் ''ஐம்பது நாள்...'' ''ஐம்பத்தோராவது நாள்....'' என ஒவ்வொரு நாளையும் கூட்டிச் சொல்வார். நானும் ஆறுதலடைவேன். வீட்டில் பல பொருட்களை அள்ளிக்கொண்டு போய் விட்டனர். 19 பவுண் நகை, எனது கணவரின் அடையாள அட்டையுடன் இருந்த பேர்ஸ் உட்பட பல பொருட்கள் இப்போது வீட்டில் இல்லை. இன்றைய நிலையில் எங்களுக்கு அங்கேயும் இருக்க முடியாது. இங்கேயும் இருக்க முடியாது என்றால் நாங்கள் என்ன செய்து கொள்ளலாம்'' எனத் தேம்பியழுகிறார் இவர்.

சம்பவ தினத்துக்கு அடுத்த நாளிலிருந்து வீட்டைவிட்டு வந்து ஒரு லொட்ஜில் குழந்தை மற்றும் தன் தாயோடும் தங்கியிருக்கிறார். நடந்தவை பற்றி செய்த முறைப்பாட்டுக்கு பதிலேதும்...? என கேட்ட போது

''இன்னமும் முறைப்பாடே செய்யவில்லை. எனக்கு சிங்களம் பேசத் தெரியாது'' எனக் கூறுகிறார் இவர்.

### ஹட்டன் இளைஞர் சிவகுமார்

ஹட்டனை பிறப்பிடமாகக் கொண்ட இளைஞர் சிவகுமார் கொழும்பு பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவ பீடத்தில் கற்று வெளியேறியவர். பொரலகளையிலுள்ள அரசாங்க அச்சகத்தில் வேலை கிடைத்தவுடன் அருகாமையிலுள்ள வனாத்தமுல்ல பகுதியில் ஒரு வீட்டில் வாடகைக்கு இருந்திருக்கிறார். கொலன்னாவ எண்ணெய் தாங்கி வெடித்த நாளன்று இவர் அரசாங்க அச்சகத்தில் இரவு வேலையாக இருந்திருக்கிறார். விடியற்காலை வீடு திரும்பியபோது வனாத்த முல்லையில் கடற்படையினர் இவரைப்பிடித்து விசாரித்த போது உண்மையைக் கூறியபோதும் பலமாக தாக்கியிருக்கின்றனர். இறுதியில் வாகனத்தில் ஏற்றிக் கொண்டு சென்ற தன் பின்னர் சுற்றத்தாரில் ஒருவர் ''இவன் புலி என்பது இத்தனை நாள் தெரியவில்லையே'' எனக் கூறியிருக்கிறார். சிவகுமாருடன் படித்த இன்னொரு முஸ்லிம் இளைஞர் ''அவன் பாவம் அப்பாவி. அவனுக்கு யாழ்ப்பாணம் என்ன கலர் என்று கூடத் தெரியாது'' என கூற கேட்டுக் கொண்டிருந்த சிங்களவர் ''அப்படி என்றால் எங்களுக்கு உன்னிலும் சந்தேகம். நீ அவனுக்காக பரிந்து பேசுவது ஏன்? என கதை வலுத்ததாக அவ்விளைஞர் கூறுகிறார்.

### ஸ்ரீ விக்கிரமபுர-வனாத்தமுல்லை நிலை

சென்ற இதழில் ஸ்ரீ விக்கிரமபுர சம்பவம் பற்றி வெளியிட்டிருந்தோம். அங்கு பொலிஸாரின் உதவியோடு நடந்த அடாவடித்தனங்கள், தாக்குதல், கொள்ளை என்பவற்றைத் தொடர்ந்து இப்போது அப்பகுதியிலிருந்த ஆறு தமிழ் குடும்பங்கள் பாதுகாப்பு தேடி தங்கள் வீட்டைக் காலி செய்து விட்டு போய் விட்டதாக ஸ்ரீ விக்கிரமபுர நிருபர் தெரிவிக்கிறார். இன்னும் சிலர் வீட்டை விட்டுப் போக ஆயத்தமாகி வருகின்றனர். அங்கு வசித்து வரும் கொழும்பு மாநகரசபையின் நவசமசமாஜக் கட்சி உறுப்பினர் எஸ்.நவரட்ணம் ''இந்த இடத்தைச் சுற்றியிருக்கும் எல்லோருக்கும் நான் எத்தனையோ உதவிகளைச் செய்திருக்கிறேன். என்னை அறிந்திருந்தும் கூட என் வீட்டிற்குள்ளும் புகுந்து அட்டகாசம் செய்ய முனைந்தனர். இனியும் இங்கு பாதுகாப்பாக இருக்க முடியாதென்றே நினைக்கிறேன். வீட்டை விற்று

என்.எஸ்.குமரன்

விட்டு போகும் முயற்சியை இப்போது செய்து வருகிறேன்'' என்கிறார்.

அதேபோல் வனாத்த முல்லையில் அப்பாவி தமிழ் இளைஞர்கள் இருவர் அடித்துக் கொல்லப்பட்டதுடன் அப் பிரதேசத்திலிருக்கும் தமிழர்கள் பயமுறுத்தப்பட்டு வருவதாலும் அங்கிருக்கும் தமிழர் பலரும் வீடுகளை காலி செய்து வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

வெளியேறியவர்களில் ஒருவரான விஜயன் இதுபற்றி குறிப்பிடும்போது ''வீட்டிலிருந்தே எல்லாவற்றையும் கொண்டு வந்து விட்டேன். இனி அங்கு வாழமுடியாது. கஷ்டப்பட்டு சிறுக சிறுக சேமித்து வாங்கிய வீடு அது. இன்று அதை விட்டு விட்டு அந்நியர் வீட்டில் வந்து இருக்க வேண்டியிருக்கிறது'' என்கிறார்.

### லொஜ்களுக்கு மூடுவிழா

கொலன்னாவ சம்பவத்தைத் தொடர்ந்து கொழும்பில் மாத்திரம் 24 லொஜ்கள் இதுவரை மூடப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

'புலிகளின் இருப்பிடமாக இவை கண்டு பிடிக்கப்பட்டதனாலேயே அவை மூடப்பட்டன' என அரச தரப்பில் கூறப்படுகிறது. ''புறக்கோட்டைப் பொலிஸ் பிரிவில் இருக்கும் லொஜ்களில் 6 புலிகளின் பிரதான குகைகளாக இருந்தது கண்டு பிடிக்கப்பட்டு அவற்றை மூட உத்தரவிட்டேன்'' என்கிறார் புறக்கோட்டை பொலிஸ் பொறுப்பதிகாரி இந்து கருணாரத்ன.

''எனது பொலிஸ் பிரிவில் இருந்த 32 லொஜ்களில் 5 புலிகளின் இருப்பிடமாக இருந்ததால் அவற்றை மூட நடவடிக்கை எடுத்தேன்'' என கொட்டாஞ்சேனை பொலிஸ் பொறுப்பதிகாரி உபாலி கலகமுவ குறிப்பிட்டிருக்கிறார்.

அதேபோல் வாழைத் தோட்டத்திலும் இதே காரணத்தினால் இரண்டு லொஜ்கள் மூடப்பட்டதாகவும், வெள்ளவத்தையில் 20 லொஜ்களில் 3 மூடப்பட்டதாகவும் தெரியவருகிறது.

கொழும்பில் 'புலிப் பீதி'யைக் கிளப்பி தமிழர்களை ஒடுக்கும் திட்டமிட்ட நடவடிக்கையின் ஒரு அங்கமாகவே இதைக் கொள்ளலாம்.

லொஜ்களை மூடச் செய்வதற்காக லொஜ்களுக்குள் புகுந்து பலரைப் பிடித்துச் சென்று புலி முத்திரை குத்தி அவர்கள் தங்கியிருந்த லொஜ்களையும் 'புலி இருப்பிடம்' என முத்திரை குத்தி அவற்றை மூடும் செயல்கள் பற்றிய தந்திரோபாயம் தெரிந்ததே.

அண்மையில் பல லொஜ்களை மூடி பலரை திடீரென்று வெளியேற்றிய போது போக்கிடமற்ற நிலையில் வீதிகளில் கதறிக்கொண்டிருந்த தாய்மாரின், சிறுவர்களின், நோயாளர்களின் அவலங்களுக்கு யார் ஆறுதல் கூற இயலும்?

### கைது அதிகரிப்பு

கொலன்னாவ சம்பவத்தோடு தமிழர்களைக் கைது செய்யும் நடவடிக்கைகள் மிக மோசமாக அதிகரித்து வருவது தெரிந்ததே. வெலிக்கடை, களுத்துறை போன்ற சிறைச்சாலைகள் உட்பட இன்னும்பல சிறைச்சாலைகள் நிரம்பியிருப்பதாகவும் 'புலி சந்தேக நபர்களாக' 14 வயது சிறுமி தொடக்கம் 70 வயது கிழவர் வரை அடைத்து வைக்கப்பட்டிருப்பதாகவும் இவர்களில் கர்ப்பிணிகளும் அடங்குவர் என்றும் அறியக் கிடைத்துள்ளது.

இன்றைய கைது நடவடிக்கைகள் யாவும் அவசர கால ஒழுங்கு விதிகளின் கீழேயே நடத்தப்பட்டு வருகிறது. ஆட்சியிலிருக்கும் சந்திரிகா அரசாங்கம் பதவிக்கு வருமுன், 'தாங்கள் பதவிக்கு வந்தால் அவசரகால சட்டத்தை நீக்கிவிடுவதாக அறிவித்திருந்த போதும் பதவிக்கு வந்ததன் பின் வாக்குறுதியை காப்பாற்றுவதாக காட்டி அவசரகால சட்டத்தை நீக்கினாலும் சில நாட்களுக்குள் நாட்டில் ஒரு சில இடங்களைத் தவிர பல இடங்களில் அவசரகால சட்டத்தை அமுல்படுத்தியது.


கொழும்பில் நடக்கும் கைதுகளுக்கு அவசர கால சட்டத்தை காரணம் காட்டுகின்ற போதும் மலையகத்தில் அவசரகாலச் சட்டம் அமுலில் இல்லை. ஆனால் மலையகத்தில் இன்று மேற்கொள்ளப்பட்டு வரும் கைதுகளுக்கு பயங்கரவாத தடுப்புச் சட்டம் (PTA) காரணமாக காட்டப்படுகிறது. சந்தேக நபரொருவரை சந்தேகத்தின் பேரில் பலகாலம் தடுத்து வைக்கும் ஏற்பாடு அவசரகால சட்டத்தில் மாத்திரமே இருந்தும் கூட மலையக இளைஞர்கள் தடுப்புக் காவலில் பல நாளாக அடைக்கப்பட்டிருக்கின்றனர்.

அரசாங்கம் பதவிக்கு வந்து இரு மாதங்களில் (1994 ஒக்டோபரில்) மலையகத்தில் மேற்கொள்ளப்பட்ட கைதின் போது பிடித்து தடுத்து வைக்கப்பட்டுள்ள டொக்டர் சாந்தகுமார் இன்னமும் தடுத்து வைக்கப்பட்டுள்ளதை உதாரணமாக கூறலாம். ஒரு வருடமும் தாண்டி விட்ட நிலையில் அண்மையில் ''கைதிகள் அனைவரையும் விசாரணை செய்! அல்லது விடுதலை செய்'' எனக் கோரி சாகும் வரை உண்ணாவிரதம் மேற்கொள்ள திட்டமிட்டிருந்தனர். அதன் அடையாள உண்ணாவிரதப் போராட்டமாக கடந்த ஒக்டோபர் 15ம் திகதி உண்ணாவிரதமிருந்திருக்கின்றனர். இறுதியில் சிறை நிர்வாகம் கோரிகைக்கு ஒப்புக்கொண்டதைத் தொடர்ந்து போராட்டம் கைவிடப்பட்டது. ஆனால் இது ஒரு பம்மாத்தாகவே கருதிய கைதிகள் மீண்டும் உண்ணாவிரதத்தை தொடர உத்தேசித்திருப்பதாக தெரியவருகிறது.

இப்படியான கைது நடவடிக்கைகள் செய்து வரும் வேளை, மலையகத்தில் தற்போது புது முறையொன்று அமுல்படுத்தப்பட்டுள்ளது. எஸ்டேட் லயன்களில் வீட்டுக் கதவில், வீட்டில் வசிப்பவர்களின் பெயரை பெரிதாக எழுதி வைத்திருக்க வேண்டுமாம். கதவில் எழுதப்படாத ஒருவர், வீட்டில் தங்கியிருந்தால் அவர் கைது செய்யப்படுகிறார்.

இந்த நடைமுறை மிகவும் பாரதூரமானது என ஒரு தொழிற்சங்கவாதி தெரிவிக்கிறார். அவர் குறிப்பிடும் போது ''எந்த சட்டத்தில் இப்படி செய்யச் சொல்லியிருக்கிறது. உலகத்தில் எங்கும் இல்லாத முறையிது. பொலிஸாருக்கு தேவைப்பட்டால் இரவில் பெயரையும் அழித்துவிட்டு கைது செய்து கொண்டு செல்லலாம். பொலிஸார் மேற்கொள்ளும் 'கைது கோட்டா' பற்றி உங்களுக்கு தெரியும்தானே'' என்கிறார் அவர்.

மொத்தத்தில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் தமிழ் மக்களின் மனோநிலையை உருக்குலையைச் செய்து, சிதைத்து உளவியல் சித்திரவதைக்கு உள்ளாகியிருப்பதை, உள்ளாக்கிவருவதை எவராலும் மறுக்க முடியுமா?



படம்: 'யுக்திய'

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

**முஸ்லிம் சமூகத்தின் அரசியல் மார்க்க தலைமைத்துவத்திற்கு முன் நின்று உழைத்தவர்கள் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசினர். இன்று துரதிர்ஷ்டவசமாக அரசியல்ரீதியாக உரிமைகள் மறுக்கப்பட்ட நண்பர்களுடன் இவர்கள் இல்லை. மாறாக பிழைப்புவாத அரசியல் வழியில்; கடந்தகால அனுபவங்களை புறக்கணித்துவிட்டு- உரிமைகளை வென்றெடுப்பதற்காகப் போராடுவோம்; போராடுகிறோம் என்கிறார்கள்! முஸ்லிம் சமூகத்தின் நிரந்தர இருப்புக் குறித்து; அரசியல் நிலைப்பாடு எடுப்பதில் இவர்களுக்கு ஆர்வம் இல்லாமல் இருக்கலாம்! தடுமாற்றம் இருக்கலாம்! எனினும் இவர்களோடு ஆரோக்கியமான முறையில் கருத்துக்களை சொல்வதில் என்ன தடை?**

**எவ்வித கெட்ட நோக்கங்களுக்காகவும் இது எழுதப்படவில்லை! முஸ்லிம்களுக்கு நீர்க்கமான செயற்பாட்டுடன் இயங்கக் கூடிய அரசியல் தலைமை வேண்டுமென்பதில் கருத்து வேறுபாட்டிற்கு இடமில்லை. இது எழுதப்படுவதற்கான பிரதான காரணம்- முஸ்லிம் சமூகமே சிந்தி! என்பதாகும்.**

சொல்வதற்கு 1981ம் ஆண்டிலிருந்து இன்றுவரை நிறைய விசயங்கள் இருக்கின்றன. இருந்தும் இன்றைய நடைமுறை நிகழ்வுகளிலிருந்து ஆரம்பிக்கலாம் என நினைக்கிறேன். முஸ்லிம்களுக்கு இந்த நாட்டில் ஒரு தனித்துவமான அரசியல் தலைமை வேண்டுமென்ற கோரிக்கை எந்தெந்த காரணிகளால் வேண்டப்பட்டது என்பதைப் பற்றி நாம் முதலில் சிந்திப்போம்!

பதியூதின் மஹ்மூத் தொடக்கம் எம்.எச்.முஹம்மது; ஏ.சி.எஸ்.ஹமீத், மன்சூர் இன்றைய பௌசி இவர்களைப் போன்றவர்களால் முஸ்லிம் சமூகம் திருப்திப்பட்டிருந்தால் ஸ்ரீலங்கா முஸலிம் காங்கிரஸின் தேவை-முஸ்லிம்களுக்கு ஒருக்காலும் ஏற்பட்டிருக்காது. மாறாக இச் சமூகம் இவர்களிடமிருந்து பெற்றதை விட; ஏதோ பெரிய விசயமொன்றை வேண்டி நின்றிருக்கிறார்கள். அந்த தீவிர அவாவின் வெளிப்பாடு தான் முஸ்லிம் காங்கிரஸின் வருகையும் அஷ்ரபின் அரசியல் பிரகாசமும்.

முஸ்லிம் சமூகத்தின் உள்ளத்திலிருந்து ஊற்றெடுத்த அந்த உயரிய தேவைகள் முஸ்லிம் காங்கிரஸினாலும் அதன் தனித்துவத் தலைவர் எம்.எச்.எம் அஷ்ரப்பினாலும் பூர்த்தியாக்கப்பட்டுள்ளதா என ஒவ்வொரு முஸ்லீமும் சிந்திக்கத்தான் வேண்டும்!

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸினர் -எல்லாத் துறைகளிலும் அனைத்து பீடங்களிலும் நீண்ட காலமாய் புறக்கணிக்கப்பட்டு வந்த முஸ்லிம் சமூகத்திற்கு நிரந்தர அரசியல் பாதுகாப்புடன் கூடிய ஆக்கபூர்வமான ஏதனையாவது இந்த 14 வருடங்களில் சாதித்திருக்கிறார்களா? இல்லை என்பதில் முஸ்லிம் சமூகத்தின்மீது அதிக அக்கறை கொண்டு நிற்கும் ஆத்மாக்களுக்கு சந்தேகமில்லை.

அது நிற்க!

இப்போது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அரசியல் அரங்கில் நடப்பதை சொல்லித்தான் ஆகவேண்டும். இவை பாரதூரமான விடயங்கள். இதன் கனதி பற்றி நீங்கள் இன்னும் அறிந்திருக்க வில்லையா?

நீண்டகாலமாய் தமிழர்களுடைய நியாயமான அரசியல் போராட்டங்களுக்கு எதிராக; வடக்கு கிழக்கில் வாழும் முஸ்லிம்களை சிங்கள அரசியல் தலைமைகள் பகடைக் காய்களாக பயன்படுத்தி வந்திருப்பதை நாம் அறிவோம்! இப்போது அந்த நாடகம் வேறொரு வேசத்தில்; அமைச்சர் அஷ்ரப்பின் ஊடாக கச்சிதமாக அரங்கேறிக் கொண்டிருப்பதை நாம் காண்கிறோம்! இந்த பாரதூரமான விடயம் பற்றி நாம் வாய் மூடி இருப்பது முஸ்லிம்களுக்கு ஆரோக்கியமாகாது!

ஒரு சமூகத்தின் அரசியல் விடுதலைப் போராட்டத்தை முன்னெடுப்பதாகவும் அதன் வழியில் ஷஹீ தாகவும் (வீரமரணம்) தயாரென்று குளுரைத்த அஷ்ரப் அவர்கள் எப்போது அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ பேச்சாளராக மாறினார்? அரசாங்கத்திற்கு வக்காலத்து வாங்குபவராகவும் விடுதலைப்புலிகளை அழித்தொழிப்பதற்காக போராடுவோம் என குரல் எழுப்புவராகவும்- யாழ்மக்களை பட்டினி போட்டு சாக வைககும் அமைச்சராகவும் - தமிழர்களின் தாயகக் கோட்பாட்டை சிங்களவர்களுடைய நலன்களுக்காக சிதைக்கும் பொறியாகவும் இன்று அஷ்ரப் முடுக்கிவிடப்பட்டுள்ளார். இந்த அபாயகரமான சூழல் குறித்து முஸ்லிம் காங்கிரஸை நாம் மறுபரிசீலனைக்கு உட்படுத்த வேண்டி இருக்கிறது.

''விடுதலைப்புலிகள் அழித்தொழிக்கப்படல் வேண்டும். பயங்கரவாதம் துடைத்தெறியப்பட வேண்டும். இந்த நோக்கிலே எமது அரசு செயற்படுகிறது. அரசாங்கத்திடம் இரட்டைத் தன்மை கிடையாது!''

-அமைச்சர் அஷ்ரப் (பக்கம் -01)
வீரகேசரி, 26, ஒக்டோபர் 95

இது அமைச்சர் அஷ்ரபின் உணர்ச்சி மிக்க பாராளுமன்ற உரை! இந்த உணர்ச்சி மிக்கதும் புத்திபூர்வமற்றதுமான பேச்சு; முஸ்லிம் சமூகத்திற்கு எந்தவிதமான பின் விளைவுகளை தோற்றுவிக்குமென அஷ்ரப் அறிந்திருக்கவில்லையா? விடுதலைப்புலிகளை அழித்தொழித்து விட்டு; தமிழர்களையும் இரண்டு மூன்று அமைச்சர்களுடனும்; நாள்கு ஐந்து உதவி மந்திரிகளுடனும் திருப்திப்படச் சொல்கிறாரா அஷ்ரப்?

விடுதலைப்புலிகள் முஸ்லிம்கள் தொடர்பான விடயத்தில் மகாபாரிய தவறுகள் இழைத்தவர்களாக இருக்கிறார்கள். முஸ்லிம்கள் தொடர்பான அணுகுமுறையில்; தமிழர்கள் மீது மிகப் பெரிய கறையை சுமக்க வைத்திருக்கிறார்கள்- இது ஒரு பக்கம்- ஆனால் இன்று தமிழர்களுடைய கோரிக்கைகளை ஆக்குகுறைந்த நலன்களுக்காக சிங்களவர்களுக்கு விற்றுவிடாமல் போராடிக் கொண்டிருப்பவர்கள் புலிகள் என்பதை அஷ்ரப் உணரவில்லையா?

தேசிய இனத்தின் விடுதலைக்காக போராடும் பிரபாகரனும்; அடக்கப்பட்ட உரிமைகள மறுக்கப்பட்ட சமூகத்திற்காக போராடுவதாகச் சொல்லும் அஷ்ரப்பும் குறைந்தது எதிரிகளாக இல்லாது; பிரச்சினைகளை பேசித் தீர்த்துக் கொள்ளலாம என சிந்திப்பதை விடுத்து விடுதலைப் புலிகளை அழித்தொழிப்பதற்காகவும்,பிரபாகரனை கொல்வதற்காகவும் அஷ்ரப் சபதம் மேற்கொண்டால் அப்பாவி முஸ்லிம்கள் என்ன செய்வார்கள்!?

வடக்கிலிருந்து முஸ்லிம்கள் விரட்டப்பட்டது போல்; கிழக்கிலிருந்தும் முஸ்லிம்கள் விரட்டப்படுவதையும், காத்தான்குடி, ஏறாவூர், அககரைப்பற்று படுகொலைகள் போல் மீண்டும் ஒரு இரத்த நிகழ்வு முஸ்லிம் சமூகத்திற்கு ஏற்படுவதையும் அஷ்ரப் ஊக்குவிக்கிறாரா?

பிரபாகரனையும் புலிகளையும் அழிப்பதற்கு அஷ்ரப் படை திரட்டும் போது அல்லது அதற்கு தான் அங்கம் வகிக்கும் அரசாங்கத்திற்கு முண்டு கொடுக்கும் போது பிரபாகரனும் தனக்கு எவ்வித வேறு மார்க்கங்களுமின்றி தனது ''பயங்கரவாதத்தை'' முஸ்லிம்கள் மீது கட்டவிழ்த்து விட்டால் முஸ்லிம் சமூகம் தாங்குமா?

அஷ்ரப் இதன்மூலம் எதனை சாதிக்கலாம் என நினைக்கிறார்? இன்று கிழக்கில் தமிழர் முஸ்லிம்களிடையே தோன்றியுள்ள சகஜ நிலையை புலிகள் நினைத்தால் ஒரே நிமிடத்தில் மாற்றி விடலாம்! அப்படி புலிகள் முன் யோசனை இல்லாமல் நடந்தால் ஓட்டமாவடி, காத்தான்குடி, ஏறாவூர், அம்பாறை மாவட்ட வாழ் முஸ்லிம்கள் எங்குதான் போவார்கள்?

1990 ஜுனில் கிழக்கில் இருந்த சூழலை அனுபவித்து இருந்தவர்கள் அஷ்ரப்பின் இந்த தேவையில்லாத பிரகடனங்கள் எவ்வளவு முட்டாள்தனமானது என்பதை உணர்ந்து கொள்வார்கள். இப்படியான தீர்க்கமற்ற பேச்சுக்களால் அமைச்சர் அஷ்ரப் - சந்திரிகாவையும் சிங்கள இனவாதிகளையும் முஸ்லிம் இனவாதிகளையுமே திருப்திப்படுத்த முடியும். இது ஒரு சிறு பொறி; பெரும் தீயாக மாறலாம் என நான் முஸ்லிம் சமூகத்தை எச்சரிக்க விரும்புகிறேன்.

இது எழுதப்பட்டுக் கொண்டிருக்கும் போது யாழ் குடாநாட்டு மக்கள் மரணத்தின் விளிம்பில் தவித்துக் கொண்டிருக்கிறார்கள்; 5 லட்சத்திற்கு அதிகமான மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர். தாண்டிக்குளத்திற்கு அப்பால் உள்ள அனைத்து மக்களும் பட்டினிச்சாவை எதிர்நோக்குகின்றனர்.



இம் மக்களுக்கு அத்தியாவசிய உணவு அனுப்ப வேண்டிய பொறுப்பு அமைச்சர் அஷ்ரப்பின் கையில் இருக்கிறது. இன்னும் வடக்கே உணவு அனுப்பியதாக தகவல்கள் இல்லை! இந்த நிலையில் -அமைச்சர் அஷ்ரப் அவர்களை -ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின்; முஸ்லிம் சமூகத்தின் தலைவர் என்ற ரீதியில் விமர்சனத்திற்குள்ளாக்கினால் அஷ்ரப் குற்றமிழைத்துக் கொண்டிருக்கிறார்- நான் சொல்வதற்கு முன் அவரே அவரின் அமைச்சர் பாத்திரத்தின் பொறுப்பறிந்து சொல்லியிருக்கிறார்.

''உணவுப் பஞ்சம் காரணமாக ஒரு தமிழரேனும் இறப்பதற்கு இந்த அரசாங்கம் அனுமதிக்காது. சகலருக்கும் உணவு வழங்குவது எமது கடமையாகும்!''

அமைச்சர் அஷ்ரப் (பாராளுமன்றில்)
தினகரன் -1ம் பக்கம் 08.நவம்பர் -95

ஆகவே வடக்கில் ஏற்படும் உணவுப் பஞ்சத்திற்கும் அதன் விளைவுகளுக்கும் அஷ்ரப் தார்மீகப் பொறுப்பெடுக்க வேண்டும். இது தான் உண்மை. சந்திரிகா இதைத்தான் விரும்புகிறார். ஜே.ஆர் ஜெயவர்த்தனாவும்-லலித் அத்துலத் முதலியும் இப்படித்தான் முஸ்லிம்களை பொறிகளில் சிக்க வைத்தார்கள்- வரலாற்றில் இப்போது அஷ்ரப் - லட்சக்கணக்கான தமிழர்களை பட்டினி போட்டுக் கொல்ல காரணமாக இருக்கப் போகிறார்.

பிரபாகரன் வடக்கிலிருந்து ஆயிரக்கணக்கான முஸ்லிம்களை இரவோடு இரவாக வெளியேற்றியதும் கிழக்கில் நூற்றுக்கணக்கான முஸ்லிம்களை தனது இராணுவத்தால் கொன்றதையும் வரலாறு மறக்காதது போல் -பட்டினி சாவு ஏற்பட்டால் இச்சம்பவமும் மறக்கப்படாது என்பது நிச்சயம்.

ஒரு தனிமனிதனின் நடத்தை ஒரு சமூகத்தின் தலைவிதியை தீர்மானிக்க வல்லமையுள்ளதாக இருப்பின் அத்தனிமனிதன் எவ்வளவு பொறுப்புடனும்; நிதானத்துடனும் நடந்து கொள்ள வேண்டும். வடக்குக்கு உணவு அனுப்ப முடியாவிடின் அஷ்ரப் தனது பதவியை ராஜினாமாச் செய்து அந்த வடுவில் இருந்து விலகிக் கொள்ள வேண்டும்.

இப்போது எங்களால் சொல்ல முடிந்தது இது மட்டும்தான்! பிரபாகரனின் முஸ்லிம்கள் மீதான நடத்தைகளுக்கு தமிழ் மக்கள் எந்த எவ்வு காரணமாக இருக்கவில்லையோ, அதை போல்தான் அஷ்ரபின் முடிவுகளுக்கும், பேச்சுகளுக்கும் முஸ்லிம்கள் காரணமில்லை-(கையாலாகாத் தனம்தானா இது!)

வடக்கிலிருந்து முஸ்லிம்கள் விரட்டப்பட்ட போதும் கிழக்கில் முஸ்லிம்கள் கொல்லப் பட்டபோதும் அந்த நிகழ்வுகளுக்கு காரணமாக இருந்தவர்கள் மீது தமிழர்கள் எழுப்பிய கண்டனத்தை நாங்கள் மறந்துவிட வில்லை!

அதேபோல் அஷ்ரப் தமிழர் மீது விடும் அனைத்து பிழையான நிகழ்வுகளின் மீதும் எங்களது பூரண எதிர்ப்பை தெரிவிப்பது எமது கடமையல்லவா? 12 நவம்பர் 95 இரவு பி.பி.சியில் அமைச்சர் அஷ்ரப்பின் பேட்டியை நீங்கள் கேட்டிருந்தால் வாய டைத்துப் போவீர்கள்.

வடக்குக்கு மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்காக தொண்டர் நிறுவனங்களை ஏன் அரசு அனுப்ப மறுக்கிறது என அஷ்ரப்பிடம் கேட்டபோது அவரின் பதில்.

''ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் என்ற வகையில் அழுத்தம் திருத்தமாக சொல்கிறேன், இத்தொண்டர் நிறுவனங்கள் மக்களுக்கு உதவுகிறோம் என அங்கு போய் தீய சக்திகளுக்கும் உதவலாம் அல்லவா- நாங்கள் யுத்தத்தை முன்னெடுப்பது வேறு, அங்கு பத்திரிகையாளர்களையும் தொண்டர் நிறுவனங்களையும் அனுப்பாதது வேறு விடயம்'' என்கிறார் அமைச்சர்.

சர்வதேச சமூகத்தின் ஐ.நா.ஸ்தாபனத்தில் கூட ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்க உரையாற்றும் போது ''புலிகள்'' எனக் கூறாது. மறைமுகமாக உரையாற்றும் போது அஷ்ரப் அரசாங்கத்தின் பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்தையையும் விட அரசுக்கு வக்காலத்து வாங்குவது -புலிகள் முஸ்லிம்கள் மீதான வெறுப்பை இன்று அதிகரிக்க வைக்குமல்லவா?

எமது விரல்களால் எமது கண்களை நாம் குருடாக்கிக் கொள்ளலாமா!?

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இரண்டு கோணங்கள்

## சுரேஸ் சுப்ரமணியம்

### கோணம் 1

கிரிக்கெட் விளையாடுவதில், கவிதை எழுதுவதில் என்னுடைய திறமையை சில நேரங்களில் சந்தேகித்திருக்கிறேன். ஆனால் என்னுடைய புத்திசாலித்தனத்தை என்றுமே நான் சந்தேகித்ததில்லை. ஹோனர்ஸோடு டிகிரி எடுத்து, படிப்பு முடிந்த கையுடன் நல்ல வேலை எடுத்து, இன்று, சிறந்த ஒரு எலெக்ரிகல் இஞ்சினீயராக, கை நிறைய சம்பளம் எடுக்கிறேனென்றால், என்னுடைய புத்திசாலித்தனமே காரணம். நான் குள்ளமாக, கொஞ்சம் குண்டாக இருப்பது கிரிக்கட்டில் வேண்டுமானால் எனக்கு கொஞ்சம் இடைஞ்சலாக இருக்கலாம், ஆனால் என்னுடன் செஸ்ஸோ, கார்ட்ஸோ, விளையாடினால் தெரிந்து கொள்வீர்கள் என்னுடைய புத்திசாலித்தனத்தைப் பற்றி. என்னோடு செஸ் விளையாடியவர்களில் ஒருத்தரும் தோற்காமல் போனதில்லை. சில நேரங்களில் நானும் தோத்திருக்கிறேன், ஆனால் 99%, ஓம் 99% நான் தான் வெல்கிறனான். இதையெல்லாம் ஏன் சொல்கிறேன் என்றால், ஒரு பூச்சி-ஒரு புழு எனக்குப் புத்திசாலித்தனம் காட்ட வந்து, இன்று பரிதவித்துக்கொண்டிக்கிறது என்ற பரிதாபகரமான உண்மையை, அந்தப் புழுவின் மடமையை உங்களிற்கு காட்டுவதற்குத் தான்.

சிவா என்ற இந்தப் புழு என்னோடு ஐந்து ஆறு வருடங்களாக பழகி வந்திருந்தும், என்னுடைய மகிமையை அறிந்திருந்தும், இப்படி ஒரு முட்டாள்தனமான காரியத்தை செய்திருக்குமா என்று எனக்குக் கூட முதலில் சந்தேகமாக இருந்தது. ஆனால் ஒரு முட்டாள் முட்டாள்தனமான காரியத்தைத்தானே செய்வான்! இவன் என்னிலும் பார்க்க ஆறு அல்லது ஏழு வயது இளமை; என்னிலும் கொஞ்சம் கூட உயரம்; நல்ல நிறம்.

இந்த சிவா என்னுடைய வீட்டிற்கு முந்தியிலிருந்தே அடிக்கடி வந்திருந்தாலும், நான் கல்யாணம் கட்டியதிலிருந்து இன்னும் கூட வரத்தொடங்கினான். அப்பவே எனக்கு சாடையாக சந்தேகம் வந்துவிட்டது. ஆனால் நான் இவனுடைய நட்பை பெரிதாக நினைத்ததால், ஒன்றும் கணக்கிலெடுத்துக்கொள்ளவில்லை. இவன் ஏன் அடிக்கடி என் வீட்டிற்கு வந்தவன் என்று உங்களில் புத்திசாலிகளிற்கு ஏற்கனவே விளங்கியிருக்கும்; என்னுடைய பெண்சாதியின் வடிவுதான் காரணம்.

என்னுடைய படிப்போ, வேலையோ, சம்பளமோ இருந்திருக்காவிட்டால், அப்படி ஒரு வடிவான பெண்ணை நான் கனவிலும் கட்டியிருக்க முடியாது. எனக்குத் தெரியும் நான் வடிவில்லையென்று. என்னுடைய ஐந்தடி நாலங்குல உயரமோ, முன்னால் கொஞ்சம் மொட்டையாய் இருப்பதால் பரந்த நெற்றியோ (இது அறிவைக் குறிக்குமென்பார்கள்), அல்லது மாநிறமான தோலோ அவர்களைக் கவர்ந்ததால் அவர்களுடைய மகளைத் தரவில்லை என்று எனக்கு நல்லாகவே தெரியும். ஆனால் அதே சமயத்தில், அழகை மட்டும் வைத்து சுகம் காண முடியாதென்ற உண்மை அவர்களுக்கும், எனக்கும் நல்லாவே தெரிந்திருந்தது. அதனால் தான் லதாவை சந்தோஷமாக எனக்கு கலியாணம் செய்து தந்தார்கள். சீதனம் கொஞ்சம் குறைவுதான் ( எவ்வளவு என்று இங்கு சொல்ல நான் விரும்பவில்லை) அவள் கூட சந்தோஷமாகவே இருந்தாள். பெண்களுக்கு பணம் தான் முக்கியம்; மற்றதெல்லாம் இரண்டாம் பட்சம். அவளைப் பொறுத்த வரையில் வீக்எண்ட்களில் நடக்கும் பார்டிகளிற்குப்போய், அங்கு வரும் மற்ற பெண்களுக்கு தன்னுடைய சாரியை, நகைகளை காட்டுவது; அல்லது எங்கள் வீட்டிற்கு வருபவர்களுக்கு, புதிதாகப் போடப்பட்டிருக்கும் கார்பெட், வோல்பேப்பர், சோஃபா செட் போன்றவற்றைக் காட்டுவதிலேயே, என்னைக் கட்டியதன் அர்த்தமும், சுகமும் கிடைத்து விடுகிறது. வருகிறவர்கள் ''லதா, அந்த சாரி நல்லாயிருக்குது. கன காசு செலவாயிருக்கும் என்ன?'' என்று கேட்க; இவள் அதன் விலையை சொல்ல; கேட்டவர்கள் வாயை மூட மறந்து, கொஞ்சம் பொறாமையுடன் இவளைப்பார்க்க - அவளைப்பொறுத்தவரை, அதுதான் அவளுடைய ஓர்காஸம்! பலர் இதையே திரும்பத் திரும்ப ஒரே இரவில் கேட்டால், மல்டிபிள் ஓர்காஸம்!

அல்லது அப்படித்தான் நான் சில மாதங்களிற்கு முன்னர் வரை நினைத்திருந்தேன். அப்போதுதான் எனக்கு உண்மையான சந்தேகம் சிவா மேல் வர காரணமாகயிருந்த சில சம்பவங்கள் நடந்தன.

ஒரு நாள் நான் என்னுடைய ஃப்ரெண்ட் ஒருத்தனை சந்திப்பதற்காக, வேலை முடிய முதலே, இரண்டு மணி போல், ஜெரார்ட் ஸ்ட்ரீட் பக்கமாகப் போக இவளும் சிவாவும் அங்கே ஒரு சாரிக் கடைக்குள் போவதைக் கண்டேன். எனக்கு ஒரே டென்ஷனாகி விட்டது. ஆனாலும் நான் ஒன்றும் செய்யாமல், என்னதான் நடக்கிறது பார்ப்போம் என்று அங்கங்கே மறைந்து நின்று பார்த்தேன்.அவன் ஏதோ சொல்ல இவள் சிரிக்கிறதும்; பிறகு அவள் ஏதோ சொல்ல இவன் சிரிக்கிறதுமாக நேரம் போனது. சில நேரங்களில் அவளின் கையை சிவா பிடித்து கொண்டு நின்றான். அதற்கு மேல் அங்கு நின்றால் ஏதாவது.... நடந்து விடும் என்று நான் அங்கிருந்து போய்விட்டேன்.
இப்படி சிவாவுடன் ஷொப்பிங் போவதாக லதா எனக்கு முதலே சொல்லவில்லை; பிறகும் சொல்லவில்லை. அவனும் ஒன்றும் சொல்லவில்லை.

இது நடந்தது ஒரு புதன் கிழமையன்று. அடுத்த சனி இரவு ஒரு சின்ன பார்ட்டி நடத்துவதாகச் சொல்லி, சிவாவை வரச் சொல்லியிந்தேன். இப்படியான நேரங்களில் வேளைக்கே வந்து சமைக்க, வேறு ஒழுங்குகள் செய்ய ஒத்துழைப்பான். இந்த வீடு எடுத்து வந்த போதும் இவன் தான் சாமான்களைக்கொண்டு வர, வீட்டை ஒழுங்கு செய்ய, பெயின்ற் அடிக்க உதவி செய்தான். ஆனால் இப்ப யோசிக்கும் போது தான் இவன் விழுந்து, விழுந்து உதவி செய்ததன் உள்நோக்கம் என்ன என்று விளங்குகிறது.

மற்றவர்களுக்கு உதவி செய்வதைத் தவிர இவனிடம் உள்ள இன்னுமொரு அபூர்வமான பழக்கம்: மற்றவர்களுடன் கதைக்கும் போது அவர்களைத் தொட்டுத் தொட்டு கதைப்பது. முந்தியிருந்தே அவனிற்கு இந்தப் பழக்கம் இருப்பதாக பலர் எனக்கு சொன்ன போதிலும், அவன் லதாவிடம் கதைக்கும் போதுதான் அப்படி செய்வதாக சந்தேகம். அல்லது, திட்டமிட்டே முந்தியிலிருந்தே இதை ஒரு இயல்பு போலக் காட்டுவதற்காக செய்து வந்திருக்கலாம்.

அந்த மறக்க முடியாத சனிக்கிழமை இரவன்று, பார்ட்டி முடிந்து விருந்தினர்கள் எல்லோரும் போனாற் பிறகு, மிச்சமிருந்த கொனியாக்கை நானும், அவனும் குடித்துக் கொண்டு , அவளுடன் டீ.வி பார்த்துக் கொண்டிருக்கையில்தான், எனக்கு அவன் அவளை அடிக்கடி தொடுவது தெரிந்தது. அன்றிரவே நான் அவனை நல்லா குடிக்கவிட்டு பிறகு அவனிடமிருந்து கதை எடுப்பது என்று திட்டம் போட்டிருந்தேன்.

''அக்கா நீங்கள் இன்டைக்கு வைச்ச கோழிப் பொரியல் அந்த மாதிரி இருந்தது! எங்கடை அம்மா கூட அக்கா இப்படித்தான் அளவா பதமா பொரிப்பா,'' என்று அவன் சொல்லி முடிப்பதற்குள், பக்கத்திலிருந்த லதாவை தோளிலும் கையிலும் தொட்டுவிட்டான். '' நீர் ஓராள்தான் சிவா என்னுடைய சமையலைப் பற்றி ஒன்றிரண்டு வார்த்தையாவது சொல்கிறது...''

''நான் இப்படி எல்லோருக்கும் சொல்றதில்லை, அக்கா உங்கடை சாப்பாடு சாப்பிட்டவுடனே ஏதாவது உங்களிற்கு சொல்லாட்டி எனக்கு செமிக்காது!, அக்கா. ''இவன் கதைக்கும் போது, அவள் பக்கத்தில் இருந்து அவனையே பார்த்துக்கொண்டிருந்தாலும், அவன் என்னவோ, அவள் இவனுடைய கதையைக் கேட்காமல் வேறெங்கேயோ பார்த்துக் கொண்டிருப்பது போலவும், அவளுடைய கவனத்தைத் திசை திருப்புவதற்காக தொடுவது போலவும், நிமிடத்திற்கு குறைந்தது இரண்டு தரமாவது தொட்டுக் கொண்டிருந்தான்.

''நீர், சிவா, இன்றைக்கு வேளைக்கு வந்து வெட்டித் தந்திருக்காவிட்டால் நான் இன்னும் சமைத்து முடித்திருக்க மாட்டேன் உம்மைக் கல்யாணம் கட்டுகிறவள் லக்கி. கொடுத்து வைத்தவள்.'' இது என்னை நக்கலடிப்பது போலிருந்தாலும், நக்கல் இல்லை. என்னுடைய மனிசி என்னில் நல்ல மரியாதையும், மதிப்பும் வைத்திருக்கிறாள். அவள் ஒரு வெகுளி - எல்லாரையும் இலகுவாக நம்பிவிடுவாள்: அவள் நினைக்கிறமாதிரி, கலியாணம் கட்டினால், அவன் ஒன்றும் தன்னுடைய மனிசிக்கு சமைத்துப் போடப் போவதில்லை. அவன் என்னுடைய மனிசிக்கு மட்டும்தான் வாலையாட்டிக் கொண்டு, நாக்கைத் தொங்கப் போட்டுக் கொண்டு உதவி செய்வான். அதே நேரத்தில் நான் அவளுக்கு சமைக்க உதவி செய்கிறனான் என்று சொல்ல வரவில்லை: சமைப்பது பெண்களின் வேலை.

''ஏன் சிவா உமக்கும் வயசாகிக் கொண்டுவருகிறது தானே? ஒரு கலியாணத்தைச் செய்யலாமே?''

''இல்லை, அக்கா நானும் அண்ணை மாதிரி கொஞ்சம் காசு சேர்த்துப் போட்டு தான் கலியாணப் பேச்செடுக்கிறபிளான்.

என்னை மாதிரிக் காசு சேர்க்க இவனுக்கு புத்தியோ, ஒழுங்கான வேலையோ இல்லை. எங்கேயோ ஒரு ரெஸ்டோறன்டில் வேலை செய்து கொண்டு, என்னை மாதிரிக் காசு சேர்க்கப் போகிறானாம். கலியாணம் நடந்த மாதிரிதான் இப்போதைக்கு நடக்ககாதென்று தெரிந்துதான் என்டை மனிசிக்கு வாலட்டுகிறான். கள்ள நாய்.

''என்னத்தை சேர்க்கப் போகிறீர் உம்மடை வடிவுக்கு சீதனத்தை அள்ளிக்கொண்டு வந்து கியூவில் நிற்பாளவையே? அதை வாங்கி பாங்கிலே போட்டாலே உமக்கு காணும். சும்மா யோசிக்காமல் கலியாணத்தைக் கட்டுகிற வழியைப் பாரும். இளமை இருக்கேக்கையே கலியாணம் கட்டிவிட வேண்டும். இல்லாட்டி, உம்மடை அண்ணை மாதிரி (நான்தான்) மொட்டை விழுந்து,தொந்தி வைத்த பிறகு - ஆனால் அவருக்கு படிப்பும், வேலையும் இருந்ததாலே பிரச்சினையில்லாமல் போய்விட்டது. உமக்கு உம்மடை வடிவுதான் பிளஸ் பொயின்ட் அதற்கு மேலே உம்மடை நல்ல குணத்திற்கு - உம்மை மாதிரி பொம்பிளைகளை மதிக்கிற ஆட்கள் இங்கே எவ்வளவு பேர்? சொல்லும் பார்ப்பம்! ஒன்றும் யோசிக்காமல் கலியாணத்தை முடித்து சந்தோஷமாக வாழுகிற வழியை பாரும்.''



''இல்லை, அக்கா... காசு தவிர நல்ல பொம்பிளையாகவும் வேணும், என்ன? உங்களை மாதிரி வடிவா, நல்ல குணத்தோடுள்ள ஒருத்தியைக் கொண்டுவந்தால், காசையும் பார்க்காமல் இந்த நிமிசமே கலியாணம் கட்டி விடுவேன். ஆனால் எங்கே - ஒன்று வடிவாயிருந்தா நல்லகுணமில்லாமலும், குணமிருந்தா வடிவில்லாமலும்... உங்களை மாதிரி ஒரு பொம்பிளையைக் கட்ட புண்ணியம் செய்திருக்க வேணும்.''

கொனியாக் திடீரென்று சூடாகி குடலையெரிப்பது போல் எனக்குள் உணர்ந்தேன். கட்டுக்கடங்காமல் கோபம் வந்ததால், எனது மௌனத்தைக் குலைத்து, ''ஏன் அக்காவையே கலியாணம் கட்டேன்?'' என்றேன். இது ஏதோ பெரிய பகிடி போல் இரண்டு பேரும் சிரித்தார்கள். ''டேய்! உன்டை நாடகம் எனக்குத்தெரியாதென்று நினைத்துக் கொண்டியோ? நான் ஹோனர்ஸோடு டிகிறி எடுத்தனான்டா. நீ எனக்கு நாடகம் போடுகிறாய், ஆ?'' இரண்டு பேரும் சத்தம் போடாமல், என்னையே பார்த்துக் கொண்டிருக்க, ''என்ன நாடகம் முடிந்துட்டுதோ?'' என்றேன்.

''இப்ப என்ன நடந்ததென்று, இப்படி - ''என்று லதா தொடங்க, ''லதா நீ சும்மா இரு. உனக்கு இவனைப்பற்றித் தெரியாது. உனக்கு உதவி செய்வது, உன்னை ''அக்கா, அக்கா'' என்று கூப்பிடுவது எல்லாம் நாடகம். உன்டை வடிவிலே மயங்கித்தான் இப்படிச் செய்கிறான், சபலக் கேஸ். உன்னை ஏன் நெடுகத் தொடுகிறான், சொல்லு பார்ப்பம்?'' என்று நான் அவளைக் கேட்டேன். அவன் சோபாவில் இருந்து மௌனமாக என்னையே பார்த்துக் கொண்டிருந்தான்.

''உங்களிற்கு என்ன விசரே? அல்லது வெறியோ? சிவாவிற்கு இந்தக் தொடுகிற பழக்கம் இருக்குது என்று உங்களிற்கு மறந்து போச்சோ? உங்களோடு கதைக்கேக்கையும் தொடுகிறது தானே?''

''ஓம், ஆனால், இவன் எல்லாம் திட்டம் போட்டுச் செ[illegible]றான். உன்னை மட்டும் தொட்டால் பிரச்சினை என்றுதான் என்னையும் தொடுகிறான். அப்பதானே இது தன்னுடைய இயல்பு என்று சாக்கு சொல்லாம். நான் யார்? நான் ஒவ்வொன்றையும் கவனித்துக்கொண்டுதான் வருகிறேன். எப்பவோ நான் இவனை செக் பண்ணியிருக்கலாம். ஆனால், நான் இவனை செக் மேட் பண்ண வேண்டும் என்றுதான், நல்ல சந்தர்ப்பத்தை எதிர்ப்பார்த்தது, விட்டு வைத்திருந்தனான்.

''என்னத்தை செக் மேட் பண்ணினீங்கள்? இப்ப சிவா என்ன செய்தது என்று.. இப்படி - கொஞ்சம் கூட மானர்ஸ் இல்லாமல்-''

''இப்ப என்ன செய்து போட்டானோ? அவன் கதைத்ததைக் கேட்டனியே? அக்கா மாதிரி இருந்தா உடனே கட்டி விடுவாராம் - தொட்டுத் தொட்டு சொல்கிறான் பாவி! மற்றது அண்டைக்கு உன்னை ஜெரார்ட் ஸ்ட்ரீட்டிற்குக் கூட்டிக் கொண்டு போன -''

''ஓம்! நான் தான் கேட்டனான் - கூட்டிக் கொண்டு போ[illegible] சொல்லி. உங்களைக் கேட்டால் வேலையென்று முடிய[illegible]தென்றுவீங்கள். அதான் சிவாவைக் கேட்டனான்.''

''ஏன் என்னட்டைச் சொல்லேலை?''
''சந்தர்ப்பம் வரலே-''
'இல்லை, நீ சொல்லாட்டி பரவாயில்லை. இவன் ஏன் என்னட்டைச் சொல்லேலை? உன்னை - என்டை மனிசியை - கூட்டிக்கொண்டு போயிருக்கிறான் - நான் இல்லாத நேரத்திலே வேறே. ஏன்டா என்னட்டை சொல்லேலை?''
சத்தம் போடாமல் கார்பட்டையே பார்த்துக்கொண்டிருந்தான்.
''சிவா ஏன் உங்களிட்டை சொல்ல வேணும்? நான் தானே கூட்டிக்கொண்டு போகச் சொன்னனான். நான் தான் உங்களிட்டை சொல்லியிருக்க வேணும். ஆனால் நான் சொல்ல மறந்திட்டேன்.''
''நீங்கள் இரண்டுபேரும் அந்த உடுப்புக் கடைக்குள் நிற்கிறதைப் பார்த்தனான். இவன் உன்டை கையைப் பிடித்ததையும், உன்னைத் தொடுகிறதையும் பார்த்தனான். உனக்கு வேண்டுமானால் அது சகஜமாகத் தெரியலாம், ஏனென்றால் இவனை நல்லவனென்று நம்பியிருக்கிறாய். ஆனால் இவன் ஒரு கெட்ட நாய்.''
''சும்மா அந்தப் பெடியனை பேசாமல் இருங்கோ பார்ப்பம். என்னவாயிருந்தாலும் நாளைக்கு பேசிக்கொள்ளலாம். நீங்கள் இப்ப நிதானமில்லை போலிருக்கு.''
நான் பேசாமல் கொஞ்சம் நேரம் டீவியைப் பார்த்துக் கொண்டிருந்தேன். இவ்வளவுக்கும் இவன் ஒரு வார்த்தை கூட கதைக்கவில்லை. அப்போதுதான் எனக்கொரு திட்டம் உதித்தது. என்னுடைய புத்திசாலித்தனம் என்றுமே என்னைக் கைவிட்டதில்லை.
''சிவா நான் சொன்னதையெல்லாம் பெரிதாக எடுத்துக் கொள்ளாதே. நான் வெறியிலே, நிதானமிழந்து ஏதேதோவெல்லாம் சொல்லி விட்டேன். ஐம் சொறி, ஓகே?''
பரவாயில்லை, அண்ணை என்றுஅவன் சொல்ல,அவன் கன்னத்தில் கண்ணீரொழுகுவதைக் கவனித்தேன். என்னுடைய திட்டம் வேலை செய்யும் என்ற நம்பிக்கை வலுத்தது. லதா என்னை ஆச்சரியத்தோடு பார்த்தாள்.
''சரி, வா நான் உன்னை வீட்டிலே கொண்டு போய்விடுகிறேன்,'' என்று நான் சொல்ல, அவன் கண்களில் மீண்டும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பயம் தெரிந்தது. பலியாடுபோல மௌனமாக என்னோடு வந்து காருக்குள் ஏறினான். நான் காரை ஸ்டார்ட் பண்ணி, கொஞ்ச தூரம் மௌனமாக டிரைவ் பண்ணி, ஒரு ஓரமாக நிறுத்தினேன்.

''சிவா ... நான் உன்னை கண்டபடியெல்லாம் திட்டிவிட்டேன். மன்னித்துவிடு - ஆனால், உனக்கு விளங்கவேணும் என்னுடைய கோபத்தைப் பற்றி. உன்னை நான் ஒரு கூடப் பிறந்த தம்பிமாதிரித்தான் ட்ரீட் பண்ணினான். ஆனால் நீ இப்படி செய்வாய் என்று - உனக்கு என்னைப் பற்றித்தெரியும் என்ன? எனக்கு நீ என்ன செய்கிறாய், எப்படி செய்கிறாய் என்றெல்லாம் தெரியும். இப்ப நீயா, நீ சபலத்தாலே தான் லதாவைத்தொட்டனி, அவளிற்கு உதவிகள் செய்கிற மாதிரி நடித்தனி என்று ஒப்புக்கொள். உனக்கும் எனக்கும் தான் இந்த விஷயம் தெரியவரும். லதா ஒரு வெகுளி. அவள் உன்னை நம்புகிறாள். நீயும் அவளுடைய நம்பிக்கையைக் குழப்ப விரும்பேலை என்று நினைக்கிறேன். அதனாலே, நீ செய்ததை இப்ப ஒப்புக் கொண்டு மன்னிப்புக் கேட்பியானால், நான் ஒருத்தருக்கும் ஒன்றும் சொல்லப் போறதில்லை. இல்லாட்டா, உன்னைப் பற்றி இல்லாததெல்லாம் சொல்லுவன்.''

அவன் காருக்கு வெளியே, ஸ்னோ பெய்வதைப் பார்த்துக் கொண்டு மௌனமாக இருந்தான்.


''உனக்கும், எனக்கும், சிவா இந்தக் கலியாணம் நடக்க முதலே பழக்கம். நீ எனக்கு - எங்களிற்கு - கனக்க உதவிகள் செய்திருக்கிறாய். நீ நல்லவன், இளகிய மனம் படைத்தனி என்று எனக்குத் தெரியும். ஏதோ சபலத்தாலே, சந்தர்ப்ப சூழ்நிலையாலே இப்படி செய்திட்டாய். லதாவினுடைய வடிவும் உன்னுடைய வயசும் இப்படி உன்னை செய்ய வைத்திட்டது என்று எனக்கு நல்லாத் தெரியும். ஆனால் அதை நீ இப்ப ஒப்புக் கொண்டு, மன்னிப்புக் கேள். அவ்வளவுதான் நான் கேட்கிறது.

''அண்ணை, உண்மையாக நீங்கள் நினைக்கிற மாதிரி நான் ஒன்றும் செய்யேலை... என்ட அம்மாமேலே சத்தியமா சொல்றேன் - லதாக்கா என்டை சொந்த அக்கா மாதிரி, அண்ணை. என்டை அக்கா, அண்ணை,'' என்று அழுது கொண்டே சொன்னான்.

''சிவா, உனக்குத் தெரிய வேணும் என்னைப்பற்றி. என்னோடு எத்தனை தரம் செஸ் விளையாடியிருக்கிறாய்?''
''கனதடவை அண்ணே''
''எத்தனை தரம் வென்றிருக்கிறாய்?''
''ஒருக்காலும் வெல்லேல்லை.''
''ஏன்?''
''.....எனக்கு சரியாவிளையாடத் தெரியேலையென்று -''
''அப்படி இல்லை. உனக்கு புத்தி குறைவு. அல்லது எனக்கு புத்திகூட எனக்கு?''
''புத்தி கூட''
''ரைட்! நான் புத்திசாலி! அது உனக்குத் தெரியும் இப்ப நடக்கிறதும் ஒரு செஸ் கேம்தான். நான் உன்டை கிங்கை சுத்தி வளைத்திட்டேன். நீ ட்ரோ பண்ணப் பார்க்கிறாய்; நான் செக் மேற் பண்ணப் பார்க்கறேன். நீ செய்ததை ஒப்புக் கொண்டால், ஒரு பிரச்சினையுமில்லாமல் இந்த கேமை முடிக்கலாம். என்ன சொல்கிறாய்?''
''அண்ணை சத்தியமா...''
''டேய்! **You Mother!** என்டை பொறுமையை சோதிக்காதே. எனக்குத் தெரியும் நீ சபலத்தாலேதான் செய்தனி என்று ஒப்புக்கொள்!''
மௌனமாக இருந்தான்.
'அண்டைக்கு ஜெராட் ஸ்ட்ரீட்டிற்கு இரண்டு பேரும் போனீங்கள், இல்லையோ? அப்ப நீதானே அவளைக் கூட்டிக்கொண்டு போனி?''
''இல்லை, அண்ணை, அக்காதான் கேட்டவா.''
''அவள் அப்படித்தான் சொன்னவள். உன்னை நம்புகிறதாலே அப்படி சொன்னவள். ஆனால் நீ தான் கேட்டுக் கூட்டிக் கொண்டு போனி. பிறகு அவள் மேல் கை போட்டு, பிளான் போட்டு செய்தனி?''
''இல்லை .. சத்தியமா இல்லை, அண்ணை.''
''டேய், நீயா ஒப்புக்கொள். இல்லாட்டி, என்னட்டை இருக்கிற புரூவ்களைக்காட்டி, உன்னுடைய வண்டவாளத்தை எல்லோருக்கும் காட்டுவன்.''
''....அண்ணை நீங்கள் நினைக்கிற மாதிரி அக்கா நல்லவா இல்லை. நீங்கள் இல்லாத நேரமெல்லாம் ...அவா கதைக்கிற முறையே சரியில்லை. என்னோடு ஃபிளேர்ட் பண்ணுகிறதா கதைக்கக் கூடாதெல்லாம் கதைக்கிறா.''

இவன் சொன்னதைக்கேட்டுவிட்டு அவனை நீங்கள் நம்பியிருந்தால், உங்களை நான் முட்டாள் என்பது முழுக்கப் பொருந்தும். இவன் தன்னை பாதுகாக்க அவளைக் குற்றஞ் சாட்டுகிறான். செஸ்ஸில் கூட நீங்கள் தோற்கும் தருவாயில் இந்த ஸ்ராடெஜியை உபயோகப்படுத்தியிருப்பீர்கள். அதாவது உங்களின் ராஜாவை எதிராளி சூழ்ந்திருக்க, நீங்களோ வேறெங்காவதுகாய்களை நகர்த்தி எதிராளியின் கவனத்தை திசை திருப்பப் பார்ப்பீர்கள். அதைத்தான் சிவா இங்கு செய்ய முயற்சித்தான். ஆனால், நான் யார்? தவிர லதாவைப் பற்றி எனக்கு நல்லாத் தெரியும். அவள் ஒரு வெகுளி. அவளிற்கு காசும் வசதியும் தான் முக்கியம். மேலும், அவளிற்குத் தேவையானதெல்லாம் நான் கொடுக்கிறேன்தானே. இவன் தான் காய்ந்து போய் - பொய் சொல்கிறான். இருந்தாலும் என்னதான் சொல்கிறான் என்று பார்க்க, ''மெய்யா?'' என்றேன்.

''ஓமண்ணை.நான் உங்களிற்குள்ளே பிரச்சினை வரக்கூடாதென்று தான் இவ்வளவு நேரம் பேசாமல் இருந்தனான். ஆனால் நீங்கள் என்னை சந்தேகிக்கிறீங்கள் என்பதாலே, உண்மையைச் சொல்லாமல் இருக்க முடியலே. அண்டைக்கு, ஜெரார்ட் ஸ்ரீட்டிற்குப் போன போதும், அவதான் என்டைகையைப் பிடித்தவா. ஒரு மாதிரியெல்லாம் கதைத்தவா''
''அப்படி என்ன கதைத்தவள்?''
''என்டை கை ரஃப்வாக இருக்குதாம். ஆம்பிளைகளிற்கு உடம்பு ஹார்ட்டாக இருக்கிறதுதான் நல்லதாம். பெண்களிற்கு அதுதான் பிடிக்குமாம். தனக்கும் அதுதான் பிடிக்குமாம்... ஆனால் ....ஆனால்''
''ம்! என்னவாயிருந்தாலும் பயப்படாமல் சொல்லு.''
''ஆனால், உங்களிற்கு ஓரேவண்டியும் தொந்தியும் என்பதாலே தனக்குப்பிடிக்கிறதில்லையாம்-''
''வேறென்ன என்னைப் பற்றிச் சொன்னவள்?''
''அவவிற்கு உங்களில் ஒரு துளியும் விருப்பமில்லை, அண்ணை. அவா உங்கடை காசுக்காகத்தான் உங்களோடு



இருக்கிறவாம். மொட்டை, கறுப்புப் பண்டி என்றெல்லாம் உங்களைப் பகிடி பண்ணுகிறவா, அண்ணை.''
''ஸோ, நீ, ஒருபிழையும் செய்யேலை என்கிறாய், அப்படித் தானே?''
''நான் இதை உடனேயே உங்களிட்டை சொல்லாமல் விட்டது தப்புதான், அண்ணை.'' '' டேய், டேய் எனக்குப் புத்திசாலித்தனம் காட்டாதே. நீ உன்னுடைய சபலத்தாலே, ஒரு தப்பும் செய்யேலை?''
''... இல்லை அண்ணை.''
அப்ப லதாதான் எல்லாம் செய்தது; நீ ஒரு தப்பும் செய்யேலை. ஓ. கே. அப்ப ஏன் நீ அவளைத் தொடுகிறனி?''
அது அண்ணை, என்னுடைய இயல்பு - பழக்கம்.''
''சும்மா சொல்லக்கூடாது - நல்லாவே கதை சொல்லுகிறாய். கடைசியில், நீ ஒரு பிழையும் செய்யேலை என்றாகி விட்டது.''
''நான் ஒரு பிழையும் நானறிந்து செய்யேலை, அண்ணை சத்தியமாகச் சொல்கிறேன்.''

''நீ இது வரைக்கும் சொன்னது முழுக்கப் பொய். என்டை மனிசியைப் பற்றி நீ எனக்குச் சொல்லாதே. எனக்குத் தெரியும் அவளைப்பற்றி அவளிற்கு காசும் வசதியும்தான் முக்கியம். இப்படி, உன்னை மாதிரி, விடலைத்தனமா ஒன்றும் செய்யக்கூடியவள் இல்லை. ஆனால் உனக்குத்தான் அந்த தேவை இருக்குது, அதனால்தான் எங்கே என்று அலைகிறாய். அவள் ஒரு வெகுளி என்பதால் உன்னை நம்பினவள் நான் புத்திசாலி, ஸோ எனக்குப் நீ புத்தி காட்டாதே. சரியோ? இப்ப நீ உன்னுடைய குற்றத்தை ஒத்துக்கொள். நான் பேசாமல் உன்னைப் போகவிடுகிறேன். நீ வீட்டுப்பக்கம் பிறகு வராதே. ஒருத்தருக்கும் உன்டை விஷயம் போகாது. ஒத்துக்கொள்கிறாயோ?''

''அண்ணை, நான் ஒன்றும் செய்யாமல் -''
''டேய்!'' டாஷ் போர்டிலிருந்த ஒரு பெரிய ஸ்குரு டிரைவரை எடுத்து -''இப்ப உண்மையை ஒத்துக்கொள், இல்லாட்டி குத்திக்கிழித்து விடுவேன்'' என்று வெருட்டினேன்.
''அண்ணை ப்ளீஸ் அண்ணை சரிநான்தான் செய்தனான், நான்தான் எல்லாப்பிழைகளையும் செய்தனான். நான்தான் எல்லாப்பிழைகளையும் செய்தனான்.''
''என்னென்ன பிழைகள் என்று சொல்லு''
''அக்காவை ஜெராட் ஸ்ட்ரீட்டுக்குக் கூட்டிக்கொண்டு போனது; தொட்டது; கையைபிடித்தது....''
''உதவிகள் செய்து நல்லபிள்ளை மாதிரி நடித்தது.''
''நடித்தது''
''முழுக்கச் சொல்லு''
''நல்லபிள்ளை மாதிரி நடித்தது- உதவிசெய்தது''
''ரைட்! எல்லாம் நான் செய்த குற்றங்கள்; என்னை மன்னித்துவிடுங்கள் என்று சொல்லு.''
''எல்லாக் குற்றத்திற்கும் நானே காரணம். மன்னித்துவிடுங்கோ, அண்ணை.''
''ஓ. கே. இப்ப என்ன சொல்கிறாய்: நீ சொன்னதையெல்லாம் செய்தகுற்றங்களையெல்லாம், இதிலே எழுதி உன்னுடைய கையெழுத்தைக்கீழே போடுகிறாய்,'' என்று அவனிடம் ஒரு நோட்புக்கையும், பேனையும் கொடுத்தேன். அவன் வாங்கி ஒன்றும் எழுதாமல் என்னையே பார்த்தான்.
''ம்! எழுது'' என்று ஸ்குரு டிரைவரைக்காட்டி வெருட்ட, கொஞ்சம் யோசித்து விட்டு, சொன்னதையெல்லாம் எழுதி கையெழுத்திட்டான்.

''சரி இப்ப மெதுவாகக் கதவைத்திறந்து, திரும்பிப் பார்க்காமல் ஓடு. வீட்டுப்பக்கம் தலைவைத்துக் கூட்ப் படுக்காதே. சரியே? ஓடு!
அவன் கதவைத் திறந்து, ஸ்னோவில் வேகமாக ஓடமுடியாமல் கஷ்டப்பட்டு ஓடுவதைப் பார்க்க சந்தோஷமாக இருந்தது. கடைசியாக செக்மேட் பண்ணிவிட்டேன். நானென்பதால், அவன் லதாவை பற்றி சொன்ன கதையெல்லாம் கேட்டு நம்பாமல், பதட்டப்படாமல் இருந்தேன். வேறு யாராவதென்றால் நிச்சயம் அவனுடைய பொறிக்குள் விழுந்து, கோபப்பட்டு, பதட்டப்பட்டு அவன் இவர்களை செக் மேட் பண்ண வழி பண்ணியிருப்பார்கள். எப்போதும் புத்தி முக்கியம்- அதற்குமேல், நிதானம்.

நான் வீட்டுக்கதவைத்திறக்க, அவள் மாடியில் உள் பெட்ரூமிலிருந்துஓடி வந்தாள். இவளைப் போய் நடத்தைக் கெட்டவள் என்று சொன்னானே, மடையன்! எனக்கும், லதாவுக்குமிடையில் ஒரு ரகசியமும் என்றும் நாங்கள் வைத்திருந்ததில்லையென்பதால், நான் அவளிற்கு நடந்தவைகளை மறைக்காமல் சொன்னேன். அவள் ஒன்றும் பேசாமல் கேட்டாள்.

''.....கடைசியில் வேறொரு டிஃபென்ஸும் இல்லையென்றவுடனே, உன்னை நடத்தை கெட்டவள் என்றிட்டான். நீ அவனோடு ஃபிளேர்ட் பண்ணுகிறியாம். எப்படிக் கதை?'' என்று சொல்லி சிரித்தேன். அவளும் சிரித்தாள்.

''இப்ப யோசித்துப் பார்க்கத்தான் தெரியுது: இவனெல்லாம் பிளான் பண்ணித்தான் செய்திருக்கிறானென்று. இவன் நெடுக 'அக்கா, அக்கா' என்கிறதிலே நானும் எண்டை சொந்தத் தம்பி மாதிரி பாசத்தோடு பழகினான். எப்படி வேஷம் போட்டிருக்கிறான்? அண்டைக்கு சாறிக்கடைக்குள்ளே என்னுடைய கையைப் பிடிக்கேக்கை எனக்கு ஒரு மாதிரி இருந்தது, ஆனால் இவன் ஒரு குழந்தை மாதிரிக் கதைக்கிறவன், பழகிறவன் என்று நான் பேசாமல் இருந்திட்டேன். என்ன மாதிரி நடித்திருக்கிறான்? இவன் தொட்டதை, பிடித்ததை நினைக்க எனக்கு உடம்பெல்லாம் எரிகிற மாதிரி இருக்குது. இப்படியும் மனிசர் இருக்கினமோ? ஷ்....ஷ்.... எப்படி உங்களிற்கு சந்தேகம் வந்தது?''

''என்னை ஏமாத்த முடியுமோ? எனக்குப் புத்தி காட்ட வந்திருக்கிறான் இவன்! எனக்கு முதலிலிருந்தே சந்தேகம், லதா ஆனால் உடனே ஏதாவது கேட்டால் சாக்கு சொல்லி சாமாளித்து விடுவான் என்றுதான், வெயிட் பண்ணிக் கொண்டிருந்தனான். ஒழுங்கான புரூவ் இல்லாட்டி அவன் சமாளித்து விடுவான் என்றுதான் - அதுதான் நான் உனக்குக் கூட இவனைப் பற்றிச் சொல்லேலை. நீயும் அவனை நல்லா நம்பினதாலே, நான் புரூபில்லாமல் சொன்னால் நம்பமாட்டாயென்று தெரிந்துதான், உனக்குச் சொல்லேலை. இண்டைக்கு, அவன் உன்னைப் போலப் பெட்டையென்றால் உடனே கலியாணம் கட்டுவேன் என்று சொன்னதைக் கேட்டவுடனே, கோபம் வந்து, நிதானமிழந்து கத்திவிட்டேன். இன்னும் கொஞ்சம் விட்டுப்பிடித்திருக்க வேணும். ஆனால், நான் என்பதால், என்னுடைய புத்தியைப் பாவித்து ஆளை மடக்கிவிட்டேன். இங்கே பார்: எல்லாத்தையும் எழுதி, கையெழுத்துக் கூட அவனிடமிருந்து வாங்கிவிட்டேன்.''

அவள், ஆச்சரியத்தோடு அவன் எழுதியிருந்ததை வாசித்துவிட்டு சிரித்தாள். ''நீங்கள் கெட்டிக்காரர்த்தான். அவனை ஒட்ட நறுக்கிட்டீங்கள்; இனிமே வாலாட்டான். நான் ஒரு டியூப் லைட். இப்படி இவனை நம்பி ஏமாந்திட்டேன். என்றாலும், இவ்வளவு கெதியா எல்லாத்தையும் ஒத்துக்கொள்ள வைத்திட்டீங்கள், என்று கன்னத்தில் முத்தமிட்டாள்.

பிறகு, ''பாத்திரங்கள் எல்லாம் ஸிங்கிலே போட்டிருக்கிறேன். கழுவி விடுங்கோ. எனக்கு ஒரே டையர்டா இருக்குது. நான் போய்ப் படுக்கப் போகிறேன்,'' என்று சொல்லி விட்டு மேலே போனாள்.

எனக்கு ஒரே சந்தோஷமாக இருந்தது. செக்மேட் பண்ணி விட்டேன். மடையன் என்னை ஏமாத்த முடியும் என்று மெதுவாக விசிலடித்தபடி பாத்திரங்களைக் கழுவினேன்.

## கோணம் 2

மேலே, அவன் மனைவி தன்னுடைய ஹாண்ட்பாக்கிலிருந்த அரண்டு சிறிய பக்கெட்டுகளை எடுத்து, பாத்ரூமிற்குள் சென்று, டொய்லெட்டிற்குள் போட்டு ஃபிளாஷ் பண்ணினாள். சின்னதாக, தட்டையாக, மினுங்கிய உறையைக் கொண்டிருந்த அந்த அழகான பக்கெட்டுக்கள், தண்ணீரில் சுற்றி, சுழன்று மெதுவாகத் தாழ, அவள் முகத்தில் புன்னகை பரவியது. டொய்லெட்டிற்குள் குனிந்து பார்த்தவள், திரும்பவும் ஒரு முறை ஃபிளாஷ் பண்ணிவிட்டு பெட்ரூமிற்குள் போய்ப்படுத்தாள். தனக்குள்ளேயே சிரித்துக் கொண்டிருந்தவள், அவன் படியேறி வரும் சத்தத்தை, விசிலடித்தபடி வருவதைக் கேட்டும், மெதுவாகக் குறட்டை விட்டபடி, ஆழமாக சுவாசித்துக்கொண்டு, கண்களை மூடியபடி படுத்திருந்தாள்.

"ரைட்! நான் புத்திசாலி! அது உனக்குத் தெரியும் இப்ப நடக்கிறதும் ஒரு செஸ் கேம்தான். நான் உன்டை கிங்கை சுத்தி வளைத்திட்டேன். நீ ட்ரோ பண்ணப் பார்க்கிறாய்: நான் செக் மேற் பண்ணப் பார்க்கிறேன். நீ செய்ததை ஒப்புக்கொண்டால், ஒரு பிரச்சினையுமில்லாமல் இந்த கேமை முடிக்கலாம். என்ன சொல்கிறாய்?"
"அண்ணை சத்தியமா..."
"டேய்! You Mother! என்டை பொறுமையை சோதிக்காதே. எனக்குத் தெரியும் நீ சபலத்தாலேதான் செய்தனி என்று ஒப்புக்கொள்!!"

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# "நாடகம் ஓர் கற்கை நெறியானது மகிழ்ச்சிக்குரியது"

குழந்தை ம. சண்முகலிங்கம்

**கயாதீன நாடக ஆர்வலரான அரிதேவா, ஈழத்தின் முது பெரும் நாடக எழுத்தாளரான குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்களுடன் நிகழ்த்திய உரையாடல் இங்கு நேர்காணல் வடிவில் தரப்படுகிறது.**

ஆசிரியர் குறிப்பு

> மண்சுமந்த மேனியர் குழு என்பதை நாடகத்தில் பற்றும் சமூக ஆர்வமும், வேலைகளைச் செய்வதில் கடின உழைப்பும் கொண்ட நண்பர்கள் குழு என்பதாகத்தான் நான் உணர்கிறேன். அன்பான முரண்பாடுகளோடும் அருமையான நாடகமொன்றை அளிக்கை செய்ய முடியும் என்பதை எங்களுக்கு நிரூபித்த காலமும் அதுதான்.

***மேசை விளக்கில் இருந்துவரும் மென்னொளி எங்களுக்கு நடுவில் வீற்றிருந்தது. குழந்தை சண்முகலிங்கம் அவர்களின் அன்புக்குப் பாத்திரமான இன்னும் இரு நாடக ஆர்வலர்களும் என்னுடன் இருந்தனர். 1978ம் ஆண்டில் இருந்து இன்றுவரை யாழ்ப்பாண நாடக உலகின் அனுபவங்கள் அனைத்தையும் அறிவாகவும் இன்பங்களாகவும் துன்பங்களாகவும் தன்னுள்ளே செரித்த அவர் சிறு புன்முறுவலுடன் "உனக்கென்னத்துக்கடா பேட்டி" எனத் தொடங்கியதில் இருந்து எங்கள் முன் அந்த இரவில் விரிந்த களத்தை உங்களுக்குத் தருகிறேன்.***

அரிதேவா

***தங்களுடைய நாடகத்துறைப் பிரவேசம் எவ்வாறு நிகழ்ந்தது? அக்காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் நாடகச் சூழல் எவ்வாறு இருந்தது என்பது பற்றிக் கூறுவீர்களா?***

நான் திருநெல்வேலியில் இருந்த Y.M.H.A.இல் வருஷப் பிறப்பு, தீபாவளி போன்ற பண்டிகைக் காலங்களில் தயாரிக்கப்பட்ட நாடகங்களில்தான் முதலில் நடிக்க ஆரம்பித்தேன். திருநெல்வேலியில் விதானையார் என்னும் அருமையான நடிகர் ஒருவர் இருந்தார். அவருடனும் சேர்ந்து ஆரம்பகாலங்களில் நடித்திருக்கிறேன். எனக்கு அனேகமாக கிடைக்கும் பாத்திரங்கள் நகைச்சுவையான பாத்திரங்களே! கிழவன் பாத்திரம், புரோகிதன் பாத்திரம் போன்றவை.

என்னுடைய காலத்தில் இருந்த -அதாவது நான் நாடகம் நடிக்கத் தொடங்கிய காலத்தில் இருந்த நாடக உலகம் பற்றி என்னிடம் விரிவான பார்வைகள் இல்லை. தகவல்களும் இல்லை. மனதில் இருக்கும் பதிவைதான் தரமுடியும். பின்வரும் போக்குகள் இருந்ததாக ஞாபகம். ஒன்று சினிமா தந்த தாக்கத்தினால் நடிக்கப்படுகிற சினிமா நாடகம். அதன் பாணியும் மொழியும் இந்தியத் தமிழ் சார்ந்ததாக இருந்தது. மற்றையது இந்தப் பண்பை நிராகரித்து யாழ்ப்பாணத் தமிழில் நாடகங்களைச் செய்யும் போக்கு. யாழ்ப்பாணத் தமிழில் நாடகத்தை செய்வோரிடம் இரண்டு வகையான போக்குகள் அவதானிக்கப்பட்டன. ஒன்று நகைச்சுவையைப் பிரதானப்படுத்திய நாடகங்கள். மற்றையது பேராசிரியர் கணபதிப்பிள்ளை உருவாக்கிய கனதியான நாடகங்கள்.

***ஈழத்து நாடக வரலாற்றில் நாடக அரங்கக் கல்லூரியின் உருவாக்கம் முக்கியமானதோர் நிகழ்வு. நாடக அரங்கக் கல்லூரி உருவாக்கப்பட வேண்டும் என்னும் ஆர்வம் உங்களுக்கு எவ்வாறு எழுந்தது? அதன் ஆரம்ப கால அங்கத்தவர்கள் அதன் ஆரம்ப காலச் செயற்பாடுகள் என்பன பற்றிக் கூறுவீர்களா?***

நான் ஓர் பட்டதாரியாக இருந்தபோதும் நாடகம் என்பது பாடமாகப் படிக்கப்பட வேண்டியது என்பது எனக்கு ஆரம்பத்தில் உண்மையிலும் தெரியாத ஒன்று. நாடகம் பற்றி படிப்பதற்கு புத்தகங்கள் உள்ளன, நாடகம் என்னும் கலை வடிவம் பற்றிய ஒவ்வொரு விடயங்கள் பற்றியும் புத்தகங்கள் உள்ளன, நாடக வரலாறு சம்பந்தமாக புத்தகங்கள் உள்ளன, என்பன போன்ற விடயங்கள் எனக்கு ஆரம்பத்தில் தெரியாது! ஆனால் 76ம் **ஆண்டு ஆசிரியர்களுக்கு என ஒழுங்கு செய்யப்பட்ட டிப்புளோமா கற்கை நெறி ஒன்றில்** கலந்து கொண்ட பின்பே அவ்வாறெல்லாம் அறியக் கிடைத்தது. அக்களப்பயிற்சியை ஒழுங்கு செய்தவர் **தம்மியா கொட** அக்களப்பயிற்சி ஒன்றரை வருடங்கள் நடாத்தப்பட்டது. கிழமையில் ஐந்து நாட்களும் நடைபெறும். **சொலமன் பொன்சேகா, அமர தேவா, சிவத்தம்பி, வித்தியானந்தன், வீரமணி ஐயர்,** போன்ற பலரும் எங்களுக்கு பல்வேறு துறை சார்ந்த விரிவுரைகளை ஆற்றினர். கற்பித்தல் தொடர்பாகவே அந்த டிப்புளோமா திட்டமிடப்பட்டிருந்த போதும் பொதுப்படையாக ஆனால் நாடகம் பற்றி முழு அறிவையும் தருமொன்றாகவும் இருந்தது.

இந்த களப்பயிற்சியில்தான் **தாசீசியஸ், நா.சுந்தரலிங்கம் சிவானந்தன், கந்தவனம் காரை சுந்தரம்பிள்ளை, குறமகள்** போன்றோர் எனக்கு பழக்கமாகினர். இந்தக் களப்பயிற்சி தந்த அனுபவமும் உந்துதலும் இவ்வாறானதொரு களப்பயிற்சியை யாழ்ப்பாணத்தில் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தை எழச் செய்தது. பயிற்சிக் காலத்தில் எனக்கு மிக நெருக்கமாகத் தாசீசியசுடன் பழக முடிந்தது. அவரில் நம்பிக்கையும் பிடிப்பும் ஏற்பட்டன. அதனால் என் ஆசையை அவரிடம் தெரிவித்தேன. அவருக்கு கொழும்பில் இவ்வாறான களப்பயிற்சிகளைச் செய்த அனுபவமும் இருந்தது.

நாங்கள் பெற்றுக் கொண்ட அனுபவத்தை எங்கும் பரவலாக்க வேண்டும் என்கிற என் ஆர்வத்திற்கு தாசிசியஸ் உறுதியாக இருந்தார். பிற்பாடு யாழ்ப்பாணம் வந்ததும் அரசையா, பிரான்சிஸ் ஜெனம் ஆகியோரும் மனமுவந்து பரிபூரண ஆதரவைத் தந்தனர்.

1978ம் ஆண்டு ஜனவரி மாதம் 23ம் திகதி வீரசிங்கம் மண்டபத்தில் நாடக அரங்கக் கல்லூரிக்கான ஆரம்ப விழாவை **கலையரசு சொர்ணலிங்கம் அவர்கள்** தலைமையில் செய்தோம்.

ஆரம்ப அங்கத்தவர்களாக **நூற்றியம்பது பேர்** வரையில் இணைந்து கொண்டனர்.

**சனி, ஞாயிறு** இரு நாட்களும் களப்பயிற்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டு 3 வருடங்களாகத் தொடர்ந்து நடாத்தப்பட்டன. இந்தக் களப்பயிற்சிகளினூடே நாங்கள் நாடகங்களைத் தயாரித்தோம். தயாரிக்கப்பட்ட நாடகங்களை எங்களுடைய இரசிகர் அவைக்கு அளிக்கை செய்தோம். வருடத்தில் இரண்டு சீசன்கள் நாடகங்களை அளிக்கை செய்தோம். ஒரு சீசனுக்குப் பன்னிரண்டு நாடகங்கள் என்றவாறாக தனியாள் பருவகாலச் சீட்டு ஒன்றுக்கு 10 ரூபாவும் குடும்பப் பருவகாலச்சீட்டுக்கு 15ரூபா எனவும் எங்களது இரசிகர் அவையிடம் இருந்து அறவிட்டோம்.

ஆயினும் பருவகாலம் ஒன்றுக்கு ஆறு நாடகங்களையே அளிக்கை செய்ய முடிந்தது. இவ்வாறு அளிக்கை செய்யப்பட்ட நாடகங்களில் **குகராசா, ஆனந்த ராசா** போன்றோர் தயாரித்த நாடகங்களும் அடங்கும்.

நாடக அரங்கக் கல்லூரி ஆரம்பித்த நோக்கமே நாடகக் களப்பயிற்சிகளை நடாத்துதல், நாடகத் தயாரிப்புகளை முறையாக மேற்கொள்ளுதல், நாடகத்தை கல்வி என்ற நிலைக்கு கொண்டு வந்து சேர்த்தல் என்பதாகும். அதனாலேதான் நான் School of Drama and theatre எனப் பெயரும் வைத்தேன். அன்றைக்கு எங்களுடைய சமூகம் இருந்த நிலையில் - நாடகம் கல்விக்குரியது என்பது நகைப்புக்கிடமானதாக இருந்த நிலையில் - தொடங்கிய எங்களுடைய முயற்சி இன்று பல்கலைக்கழகத்தில் நாடகம் உயர் கல்விக்கு ஓர் பாடமாக ஆனது வரையிலும் தொடர்வது எங்களுக்கும், எங்கள் மீது ஆர்வம் கொண்டுள்ளோர்க்கும் மகிழ்ச்சி தரும் ஒன்றுதானே!

***ஈழத்து நாடக வரலாற்றில் பாடசாலை அரங்குகளும் சிறுவர் நாடக அரங்குகளும் தொய்வின்றித் தொடரும் அரங்குகளாகும். உங்களது பாடசாலை அரங்கு பற்றியும் சிறுவர் அரங்கு பற்றியும் சற்று கூறுவீர்களா?***

நான் எழுதிய நான்கு பாடசாலை நாடகங்கள் 'ஏழு நாடகங்கள்' என்னும் நாடக நூலில் உள்ளன. இவை தவிரக் கட்டிளமைப் பருவத்தினரின் பிரச்சினைகளை மையமாக வைத்து **ஆரொடு நோகேன்** என்னும் நாடகமும் **துறவி** என்னும் மொழி பெயர்ப்பு நாடகமும் எழுதப்பட்டுள்ளன.

இவை தவிர க.சிதம்பரநாதன் யாழ்/பரியோவான் கல்லூரியில் படிப்பித்த காலத்தில், எழுதப்பட்ட மூன்று அல்லது நான்கு நாடகங்களும் அடங்கும். எல்லா நாடகங்களும் அதிகமாகச் சாதாரண தர, உயர்தர வகுப்பு பிள்ளைகள் செய்யக் கூடிய தரத்திலானவை.

பாடகர்கள் உரைஞர்கள் கொண்ட எதிர் யதார்த்தவாத வடிவம் (Anti Realism) எனது பாடசாலை நாடகங்களில் அவதானிக்கப்படும். பாடசாலை அரங்குகளில், பாடசாலையில் ஆசிரியர் செய்யும் போதனையை, உரைஞர்கள் செய்வார்கள். இந்தப் போதனைப்பண்பை (பிரக்ஃடின் அந்நியப்படுத்தல் உத்தியின் இன்னொரு வடிவமாக) நான் அறிவூட்டலுக்காக பாடசாலை அரங்குகளில் பயன்படுத்தினேன். இது தொடர்பாகக் கண்டனம் கூறுவாரும் உள்ளனர்.

எனது பாடசாலை நாடகங்களில் பிள்ளைகளே (மாணவர்களே) தங்களின் பிரச்சினைகளைச் செய்து காட்டுவார்கள்; தங்கள் அவலங்களைச் சொல்வார்கள். இன்னும் சில நாடகங்களில் பிள்ளைகளை அவர்களின் குடும்பப் பின்னணியுடனும் புலப்படுத்தியுள்ளேன். அனேகமான எனது பாடசாலை நாடகங்கள் கல்விப் பிரச்சினையை மையமாகக் கொண்டவை. அந் நாடகங்களில் ஊடுபாவாகப் பெண்களின் பிரச்சினைகளையும் சொல்லியிருக்கிறேன்.

என் பாடசாலை நாடகங்கள் எல்லாமே அந் நாடகங்களில் நடித்த பாடசாலை மாணவ மாணவிகளுடன் கலந்துரையாடி அவர்களின் பிரச்சினைகளைக் கருவாக கொண்டு எழுதப்பட்டவையாகும்.

***சிறுவர் அரங்கு பற்றி கூறுவதாயின்***

"கூடி விளையாடு பாப்பா" என்னும் நாடகத்துடன் தான் நான் சிறுவர் நாடகங்களை எழுதத் தொடங்கினேன் கூடி விளையாடு பாப்பாவுக்கு அதை நெறியாள்கை செய்த தாசீசியஸ் தந்த தூண்டுதலும் ஆர்வமும் தான் என்னை நாடக எழுத்தாளனாக உருவாக்கின. அந்தத் துறையில் என்னை முன்னேறவும் வைத்தன.

கூடி விளையாடு பாப்பா யுனெஸ்கோ நிறுவனச் சிறுவர் ஆண்டுக்குக்காக எழுதப்பட்டது. அதே நாடகத்தில் க.சிதம்பரநாதன் சேவல் பாத்திரமேற்று நடித்திருந்தார். அந்த நாடகம் சிதம்பரநாதனுக்கும் ஆர்வத்தை கொடுத்திருந்தது. பிற்பாடு நான் எழுதிய "ஆச்சி சுட்ட வடை" என்னும் சிறுவர் நாடகத்தை யாழ் பரியோவான் கல்லூரியில் முதன் முறையாக சிதம்பரநாதன் தயாரிக்கிறார். நெறியாளராகிறார். பிற்பாடு எனது பல சிறுவர் நாடகங்களை அவர் தயாரித்தார். என் நாடகங்களைத் தயாரித்த இன்னுமொருவர், அருமையான நடிகரும் நெறியாளருமான பிரான்சிஸ் ஜெனமவர்களாகும்.

இன்றைக்கு பல இளம் நெறியாளர்கள் என் சிறுவர் நாடகங்களைச் சிறப்பாக தயாரித்து வருகிறார்கள். திருநெல்வேலி **நந்தா** இந்த வகையில் குறிப்பிடத்தக்கவர். சிறுவர் நாடகத் தயாரிப்பின் பரிமாணங்களை விளங்கித் தயாரித்து வருகிறார். இவர்களைத் தவிர **ஜெயசங்கர், அகிலன் P.L.இமானுவேல் பிள்ளை, பருத்தித்துறை ரகுவரன்** ஆகியோரும் தயாரித்திருந்தனர். பிற்பாடு இப்பொழுது, நாடக அரங்கக் கல்லூரி அங்கத்தவர்களான **தேவா, இளங்கோ, மகாலட்சுமி, கமலா, செந்தில் நாதன்** போன்றவர்களும் குறிப்பிடத்தக்களவு தயாரிப்புகளைச் செய்துள்ளனர். வளர்நிலையில் உள்ள இவ்விளம் நெறியாளர்கள் நாளை நல்ல நாடகவியலாளர்களாக உருவாகலாம்.


***உங்களை ஈழத்து நாடக உலகில் சிறந்த எழுத்துரு ஆக்கதாரராக (Script Writer வெளிக்காட்டிய உங்களது நாடகங்களான மண்சுமந்த மேனியர் I, IIஆகியவை பற்றி மீளப்பார்க்கும் போது என்ன உணர்வை அனுபவிக்கிறீர்கள்?***

எனது நாடகங்கள் யாவற்றினுள்ளும் எல்லா இடங்களிலும் பரவலாக அளிக்கை செய்யப்பட்டது, மண் சுமந்த மேனியர் ஒன்றுதான். மூன்று மாதங்களுக்குள் அறுபத்தைந்து அரங்க அளிக்கைகளை செய்திருந்தோம். இதற்கு அடிப்படைக் காரணம், அந்த நாடகத்தை தயாரித்த சிதம்பரநாதனும் கலாசாரக்குழுவும் நிறைய உழைத்ததுதான். அந் நாடகம் எழுதப்பட்டு தயாரிக்கப்பட்டுக் கொண்டிருந்த காலத்தில் நாங்கள் எவருமே அந்நாடகம் அந்தளவுக்கு வெற்றியளிக்கும் என எதிர்பார்த்திருக்கவில்லை. நாடகம் நிகழ்ந்த 85ம் ஆண்டின் நடுப்பகுதியில் நிலவிய சமூக அரசியல் சூழ்நிலைகளும் அந்த நாடகத்தின் வெற்றிக்கு காரணமாகும். நாடகத்தின் கருவும் கதையும் அன்றைக்கு நிகழ்ந்து கொண்டிருந்த பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டிருந்தன; வடிவம் எங்களுடைய பாடசாலை நாடகங்களினூடாக வளர்ந்து வந்து கிடைத்ததாகும்; பலருக்கு வடிவமானது புதியதாகவும் இருந்தது.

நாடகத்தின் வடிவம் புதியதாக இருந்த போதிலும் இலகுவாகவும் இருந்தது. நாடகத்தில் பாத்திரங்களின் மொழி பெரும்பாலும் பேச்சுத்தமிழ். பாத்திரங்களும் நாம் நாளாந்த வாழ்க்கையில் காணும் அதே பாத்திரங்கள். மண்சுமந்த மேனியரின் இன்னொரு சிறப்பம்சம், அதில் கவிதை வருகிறது; நாட்டார் பாடல் வருகிறது; பேச்சுத்தமிழ் வருகிறது; செந்தமிழும் வருகிறது. இவை யாவும் வந்தாலும் யாவும் இணைந்தன. நாடகத்திற்கு கண்ணனின் பின்னணி இசையும் நாட்டார் பாடல்களுக்கு அவர் அமைத்த மெட்டுக்களும் அருமையானவை. இவை எல்லாவற்றையும் விட முக்கியமானது மண்சுமந்த மேனியரின் நெறியாளரான சிதம்பரநாதனின் உழைப்பு. எழுத்துருவொன்றை நாடகமாக்க முடியாத ஒருவரிடம் என் எழுத்துரு அகப்பட்டிருக்கும் என்றால் எனது எழுத்துருவின் வடிவமே உடைந்து போயிருக்கும். எனது எழுத்துருவை நாடகமாக; மேடையில் உயிரோட்டமாகக் கொண்டு வந்த திறமையும் பெருமையும் சிதம்பரநாதனுக்குத்தான் மற்றையது. நாடகத்தில் பாத்திரமேற்ற எல்லோருமே அந்தந்தப் பாத்திரங்களை உணர்ந்து சிறப்பாக செய்திருந்தார்கள்.

இன்றைக்கு யோசிக்கும் போதும் மண்சுமந்த மேனியர் குழு என்பதை நாடகத்தில் பற்றும் சமூக ஆர்வமும், வேலைகளைச் செய்வதில் கடின உழைப்பும் கொண்ட நண்பர்கள் குழு என்பத ாகத்தான் நான் உணர்கிறேன். அன்பான முரண்பாடுகளோடும் அருமையான நாடகமொன்றை அளிக்கை செய்ய முடியும் என்பதை எங்களுக்கு நிரூபித்த காலமும் அதுதான்.

அடுத்த இதழில் தொடரும்..



www.tamilarangam.net



விஞ்ஞானமானது மனிதனை இயற்கையிடமிருந்து பிரிக்கும் சக்தியாகத் தொழிற்படும் வேளை கலை இலக்கிய முயற்சிகள் மனிதனை இயற்கையுடனும் அவனது சமூகத்துடனும் பிணைக்கும் சக்தியாக பிணைக்க முயலும் சக்தியாக தொழிற்பட்டு வருகின்றது.

20ம் நூற்றாண்டின் கலை இலக்கிய வளர்ச்சியில் இதனை நாம் நன்கு அவதானிக்கலாம். 20ம் நூற்றாண்டிலே மனித நிலைப்பட்ட உணர்வுகள் முக்கியத்துவம் பெற்று வந்துள்ளன. தனிப்பட்ட படைப்பாளியில் சமூகப் பார்வையும் அவனது உணர்வு வெளிப்பாடும் படைப்புகளின் முக்கிய அம்சமாகியுள்ளது. ஆக நுகர்வோனுக்கு மனித நிலைப்பட்ட உறவுகளையும் அதன் தன்மைகளையும் சமூகத்தைப்பற்றியும் எடுத்துக்கூறும் சாதனமாக இவை தொழிற்படுகின்றன.

சில கலைகளில் இத்தகைய மாற்றத்தினை நாம் சிறப்பாகக் காணலாம். உதாரணமாக புகைப்படக்கலையின் வருகையும் அதன் செல்வாக்கும் ஓவியக் கலையில் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தியது. இதனால் ஓவியத்தில் தனிப்பட்ட கலைஞனின் உணர்வு வெளிப்பாடும் அவனது கருத்துக்களும் தத்துவங்களும் முக்கியத்துவம் பெறத்தொடங்கின. இப்படியான நேரடியான தாக்கம் ஒரு புறம் நிகழ்கையில் படைப்பாளியின் படைப்புச் சூழலும் விஞ்ஞான வளர்ச்சியால் பாதிக்கப்பட்டது. விஞ்ஞானம் அறிமுகப்படுத்திய பல்வேறுவகை சாதனங்களினால் மனிதனுக்கு அவனது நிலையாமையின் தன்மை அதன் உக்கிரம் என்பவை என்றுமில்லாதவாறு உறுத்தத்தொடங்கியது. இதனால் படைப்பாளிகள் தமது வாழ்வின் ஒவ்வொரு கணத்தையும் தனித்த அனுபவமாக கண்டு தமது அனுபவப்பதிவுகளை தமது சார்பு நிலைகளுக்கூடாக பதிக்க பிரயத்தனம் செய்தனர். இன்றைய படைப்பாளிகளுக்கு நேற்றும் நாளையும் முக்கியமானதல்ல. அவன் வாழும் ஒவ்வொரு கணமும் தான் அவனுக்கு முக்கியமானதாக மாறியுள்ளது. அவன் ஒவவொரு கணமும் இறந்து உயிர்க்கிறான்.

இந்த வெளிப்பாட்டின் ஒரு சிறந்த உதாரணமாக பிக்காசோவின் குவார்னிகாவைக் குறிப்பிடலாம். அது ஒரு நிகழ்வை ஒரு கண உள அனுபவத்தைப் பற்றியது. அக்கண அனுபவத்தில் பிக்காசோ தனது வாழ்பனுவத்தையும் ஓவிய உத்திகளையும் சமூகம் பற்றிய பார்வையையும் நிலையாமை பற்றிய கருத்துருவையும் முன்வைக்கிறார்.

இதே போல் இலக்கியத்திலும் கதைசொல்லும் மரபு மறைந்து முழுமையற்ற தொடக்க முடிவும் முக்கியமற்ற வாழ்வனுபவங்கள், தனி மனித உணர்வு வெளிப்பாடுகள் என்பன முக்கியத்துவம் பெற்றுள்ளன.

பொதுவாக விஞ்ஞான வளர்ச்சி படைப்பிலும் படைப்புச்சூழலிலும் இப்படியான ஒரு மாற்றத்தை ஏற்படுத்திய அதே வேளை விஞ்ஞானத்தின் பிரத்தியேக பயன்பாடும் கலை இலக்கியத்தில் செல்வாக்கு செலுத்தியது. விஞ்ஞானம் அளித்த சாதனங்கள் வாயிலாக படைப்புகளின் தொழிநுட்ப எல்லைகள் விஸ்தாரமடைந்தன. தொழிநுட்பம் புதிய புதிய சாத்தியப்பாடுகளை புதிய அனுகுமுறைகளை அறிமுகப்படுத்தியது. ஒலிஒளிச் சாதனங்களின் வருகையும் கலையுலகை மேலும் செழுமைப்படுத்தின.

இருபதாம் நூற்றாண்டின் கடைக் கூற்றில் கணினி பாவனை கலைஇலக்கியத்தில் பல தாக்கங்களை ஏற்படுத்தத் தொடங்கியுளளது. குறிப்பாக இசை, கட்டிடக்கலை போன்றவற்றில் கணினியில் பிரயோகம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. பல்வேறுபட்ட ஒலிகளை உருவாக்குவதிலிருந்து பல்வேறு ஒலிவகைகளின் ஒத்திசைவு போன்ற பண்புகளை பரிசோதிப்பதற்கும் இசை வடிவங்களைத் தொகுப்பதற்கும் கணினி பயன் பட்டு வருகிறது.

அண்மைக்காலங்களில் நடனத்தில் கூட அசைவுகளின் தொடர்ச்சியையும் பல் வேறு உடலசைவுகளின் ஒத்திசைவையும் எதிர்வு கூற கணினி பயன் படுத்தப்பட்டுவருகிறது.

கணினியின் பாவனை கலைக்கு ஒத்தாசைபுரியும் வகையில் கலையின் தொழிநுட்பதுவத்தை விஸ்தாரப்படுத்தும் வகையில் பாவிக்கப்படும் பொழுது கலையின் செழுமை அதிகரிக்கிறது. அதேவேளை கலைபற்றிய அதிக ஈடுபாடற்றவர்கள் கூட கலைவடிவங்களை உருவாக்கும் சாத்தியப்பாடும் போலித்தனங்களின் அதிகரிப்பும் தொழிநுட்பத்திறனை முக்கியத்துவப்படுத்தி கலைத்தரத்தை இரண்டாம் பட்சமாக ஆக்கும் அபாயம் உணரக்கூடியதாக உள்ளது. கணினி இயந்திரம் தொகுக்கும் இசை வடிவங்களும் கணினி ஓவியங்களும் இதற்கு நல்ல எடுத்துக் காட்டுகள்.

எந்த ஒரு கலைவடிவமும் தொழிநுட்பத்தளம் அறிவியற்தளம் உணர்வுத்தளம் ஆகிய மூன்று தளங்களைக்கொண்டிருக்கும். தொழிநுட்பத்தளம் பௌதீகவியல் கணிப்பிற்கு உட்படக்கூடிய ஒருதளம். அத்தளத்தின் பல்வேறு பண்புகளும் அளவிடப்படக் கூடியன.

உதாரணத்திற்கு ஓவியக்கலையினை எடுத்துக் கொண்டால் ஒரு ஓவியம் சில அடிப்படையான கட்புல அலகுகளைக் கொண்டுள்ளது. அவை நிறம், ரேகை, உருவம் என்பன. இந்த மூன்று அல்குகளும் பல்வேறு பண்புகளைக் கொண்டதாக இருக்கிறது.

உதாரணமாக உருவமானது முக்கோணமாகவோ சதுரமாகவோ மனித உருவமாகவோ இருக்கலாம். அதே ரேகையானது நேரானதாகவோ, வளைந்ததாகவோ இருக்கலாம்.

இந்த கட்புல அலகுகள் அழகியல் அடிப்படைகளுக்கு அமைய இணையும் பொழுது ஓவியம் பிறக்கிறது. அழகியல் அடிப்படைகள் எனப்படுவது ஓவிய அலகுகளின் பரம்பல்பற்றியது. அவற்றினது தாக்கம் பற்றிய ஒரு கணிப்பாகும். உதாரணமாக சமநிலை என்ற அழகியல் அடிப்படை கட்புல அலகுகளின் சமநிலைப் பரம்பல் பற்றிய ஒரு கணிப்பு.

இந்த கட்புல அலகுகளும் அவற்றினது பண்புகளும் அழகியல் அடிப்டைகளும் முழுமையாக அல்லாவிடினும் பெருமளவிற்கு கணிப்பிற்கும் பௌதீக விதிகளுக்கும் உட்பட்டவை.

இப்படியான கணிப்பிற்குட்படக் கூடிய பௌதீக விதிகட்குட்பட்ட விடயங்கள் கணினியினால் எளிதாகக் கையாளப்படலாம். ஆக கணினியானது தொழிநுட்ப ரீதியில் தரமான ஓவியங்களை ஆக்கவல்லது.

கலை இலக்கிய வரலாற்றின் ஒவ்வொரு படியிலும் மனிதத்துவ வெளிப்பாடும் உணர்வு வெளிப்பாடும் முதன் நிலை பெற்றுவந்துள்ளது. கலை வளர்ச்சியை வெவ்வேறு சவால்கள் எதிர்கொள்ளும் பொழுது கலை ஒரு புதிய வெளிப்பாட்டு வடிவினை அடைந்துள்ளதை நாம் வரலாற்றில் காண்கிறோம்.

சவால்கள் கலைக்கு ஒன்றும் புதியதல்ல. இன்று கணினி ஒரு பெரிய சவாலாக உருவெடுத்துள்ளது. புகைப்படக்கலையின் வருகை ஓவியத்துக்கு ஒரு பெரும் சவாலாக அமைந்தது. காட்சிகளையும் உருவங்களையும் பதிவு செய்யும் கலைவடிவாக தொழிநுட்ப ஓவியம் புகைப்படக்கலை வந்ததும் இந்த பதிவு செய்தல் தொழிற்பாட்டை, பயன்பாட்டை இழந்தது. இருந்தாலும் ஓவியம் அழிந்து விடவில்லை. அது புதிய மிடுக்குடன் புதிய உத்வேகம் கண்டது. வில்லியம் டேனர் போன்ற ஓவியர்களது ஓவியங்களின் அரூபத்தன்மையையும் கலைத்திறனையும் விளங்கிக் கொள்ள புகைப்படக் கலையின் வருகையே உதவியது.

காலத்தில் ஏற்படும் வளர்ச்சிகளும், மாற்றங்களும் தவிக்க முடியாதவை. மாற்றம் காலத்தின் நிச்சயமான ஒரு நியதி. கலை வெளிப்பாட்டை நெருக்குகையில் காலத்தால் அழியாத புதிய வெளிப்பாடு வடிவங்கள் உருவாவது நமக்குக் காலம் காட்டித்தந்த உண்மை.



# கலை இலக்கியத்தில் கணிணியின் தாக்கம்!

கொ.றொ.கொன்சன்ஸ்ரைன்

## இனிப்பூட்டும் ஒரு கப்பல்

பொரிசொரியத்தான், உண்மையாய் இறுங்குப்
பொரிசொரியத்தான்
தலைக்கு மேலாய் கப்பல் பறக்கிறது!

நம்மூரில்,
மாடுகள் அதிகமாய் மூத்திரம் அடிக்கும்
பெரிய பெரிய வீடுகள் குவிந்த
அந்தச் சந்தியில்,
கடலை விற்ற கிழவி-
ஒரு காலில்
நொண்டி நடக்கும் கூனி-
தலைக்கு மேலாய் பறக்கின்ற, அந்த
கப்பல் தும்பியில் கால் நீட்டிப் போட்டிருப்பாள்!

கண்ணாடிக் கிழவி அவிக்கின்ற பயறு
தின்றால் மிகவும் ருசி, அது உனக்குத் தெரியும்.
கிழங்கவித்துச் சம்பல்
போட்டு விற்பதிலும்
கெட்டிக்காரி, பருப்புப் பொரிப்பதிலும்.

ஊருக்கு மேலால்,ஒரு விமானம் வாங்கி
இறுங்குப் பொரிசுமந்து தன்னுடைய நன்றிகளை
அனைவருக்கும் தெரிவித்து, மிகச்சிரமத்தின் மத்தியிலே
தன்னை ஆளாக்க வாடிக்கையான இந்த
மக்களை மறக்காமல் கையாட்ட, என்றோ
கிழவிக்கு இருந்ததுதான் கனவு!

கப்பல் பறக்கிறது,
மிகப் பணிவில் மிகப் பணிவில்!
விமானத்தின் புகையும் கண்ணுக்குத் தெரிகிறது!
அதன், இரண்டு சிறகிலும் இறுங்குப் பொரிச்சாக்கு.
வாலில் அந்தக்கிழவியின் ஊன்றுகோல்.
இது குண்டு வீசும் விமானமல்ல,வா வெளியில்,
இறுங்குப் பொரிசொரிய கிழவிவிடும் கப்பல்:
நம் நாற்றப் போர்மண்ணில், மனிதனுக்கு இனிப்பூட்ட-
இன்னும் நாம் உள்ளோம் என்பதையும் தெளிவாக்க.

●

28-8-95

## நானென்ற புதுக் குளிர்

வரமாட்டேன்.
உன் இருப்பிடம் தேடி வரமாட்டேன்.
வந்து
அதிகாலைக் குளிர்போல இனிக் குளிரேன்.
உன் உடல் சிலிர்க்க.
தலை முடிகள் கொடுக.

என் குளிரில்
உன் உடம்பு
நடுங்குகின்றதா, தயிரில்:
நட்டு முளைத்த தூயவெள்ளை
ரோஜாப்பூவின் இளையவளே!
நகம் உதிர்கிறதா.
சரி.

நானென்ன
புன்முறுவல் பூக்காத நிலத்தினிலே விடிகின்ற
ரோசம் பறந்த அதிகாலைக் குளிரின்
கருவில் வந்தவனா,
சீ...........போடி.
வாயெல்லாம் பல் தெரிய
கரமேந்திக் கூப்பிட்டு
தன் மரங்களையும் பாடவைக்கும் நிலத்திற்கு
புதுத்தெம்பை
ஊட்ட விடிகின்ற புதுக்காலைக் குளிர்.
சீ.........போடி
உன் மூக்கு:
நிலத்தில்
விழுந்து நசிந்த மாம்பழத்தை ஒத்தது.
பசித்த
அணிலும் முகராது, நான் வந்தால், அருக்கு!

●


21-09-95

சோலைக்கிளி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






# விடுதலைக்கான அரங்கை நோக்கி......

## முதற்காலடி ~ சில அனுபவங்கள்

92ம் ஆண்டு ஒன்ப்தாம் மாதம் 20ம் திகதி காலை ஒன்பதரை மணி. செங்குந்தா இந்துக்கல்லூரியில் ஒன்று கூடினோம். அரங்க அளிக்கை ஒன்றுக்கு முன்னர் அந்த அரங்க அளிக்கையை தயார் செய்வது பற்றிய ஒன்று கூடலே அது. தெருவெளி அரங்கொன்றைத் தயார் செய்வது தொடர்பாகவே நாங்கள் ஒன்று கூட வேண்டி இருந்தது. இந்த அனுபவப்பகிர்வு அந்தத்தெருவெளி அரங்கு பற்றியதல்ல. ஆனால் தெருவெளி அரங்குக்கான கரு, அளிக்கை வடிவம் என்பவற்றை நோக்கி கலாசார செயலாளிகளான நாங்கள் எப்படிப்பயணப்பட முயற்சி செய்தோம் என்பதையே வெளிக் கொண்டு வரமுயல்கிறது.

செங்குந்தா இந்துக்கல்லூரியின் முதலாம் மாடியில் உள்ள மண்டபத்தில் இருந்த வாங்கு மேசைகளை எடுத்து ஓரமாக அடுக்கி வைத்தோம். நாங்கள் பெரிய வட்டமாக அமரவும் அசைவுகளையும் ஆட்டங்களையும் மேற்கொள்ளவும் தேவையான வெளி உருவானது. டொல்க்கி, ரபான், கிலுகிலுப்பை, சினார் மற்றும் இவை தவிர ஒலி எழுப்பக்கூடிய வழவழப்பான சிறுகைத்தடிகள் மழமழப்பான சிரட்டைகள் என்பனவும் எங்களிடம் இருந்தன. ஆர்மோனியம் கிரியிடம் இருந்தது டொல்கி, சினார் நாத்திடம் இருந்தது. றபான் சிதம்பரநாதனிடம் இருந்தது கிலுகிலுப்பை எல்லாருடைய கைகளிலும் பயணப்படும்.

சிதம்பரநாதன், கிரி, தேவா, சுந்தா அங்கிள், கமலா, கரன், கிருஸ்ணா, நாத், பாஸ்கரன், ராதா எல்லோரும் வந்து விட்டிருந்தனர். கமலநாதனைக் காணவில்லை. அவன் கோகிலாக் கண்டியில் இருந்து வரவேண்டும். அவன் ஆத்துபறந்து வருவான் வேர்த்தொழுக.... நாங்கள் ஆரம்பித்தோம். சிதம்பரநாதன் சொன்னார்: ''சிறு தாளத்தோடை எங்களுடைய உடல்களையும் குரல்களையும் உற்சாகமூட்டிக் கொள்வோம். (Worrming Up)''

நாத் ஏற்கெனவே டொல்கியை வாசிக்கத் தொடங்கி இருந்தான்.
கமலநாதன் அப்பொழுதுதான் வந்து கொண்டிருந்தான் கீழே.

கிரி சொன்னான் அப்படியே தெருவெளி அரங்கின் ஒரு காட்சி போல செய்து கொண்டிருப்போம் என. நாங்களும் மெல்லியதாளத்துக்கு அமைய அசைவுகளைச் செய்து கொண்டிருந்தோம். கமலநாதன் மெதுவாக ஏறி வந்தான். பிறகு தயங்கித் தயங்கி வந்து மேளத்தை எடுத்து தடிகளையும் (Stick)யும் எடுத்து தட்டத் தொடங்கினான். நாங்களோ கவனியாதது போல. சிறிது நேரத்தின் பின். சிதம்பரநாதன் அசைவுகளையும் இசையையும் நிறுத்தச் சொல்லியபின். இவ்வளவோடை நிறுத்தி சனத்துடன் நாங்கள் கலந்துரையாடலை (Dissussion) இனைத் தொடங்குவோம் எனக்கூறியபடி அப்பொழுதுதான் கமலநாதனைக் கண்டது போல் ''என்னடாப்பா இப்பத்தான் வாறாய் ஒருக்கா பாத்து முடிச்சிட்டம்'' என்றார்.

தான் பிந்தி வந்தது பற்றிக் கமலநாதன் பட்ட சங்கடம்!

நாங்கள் யாவரும் சிரித்தோம். அனேகமாக எங்களது ஒன்று கூடலில் யாரோ ஒருவன் நேரம் பிந்தி வந்து முழுசுவது வழக்கம். நேரத்தை கடைப்பிடித்தல் கலாசாரக் குழு என அழைத்து கொள்ள முற்படும் எங்களுக்கு ஓர் பிரச்சினையாகவே இருந்தது என்பது இந்தப் போக்கில் சொல்லப்பட வேண்டியதுதானே.

இவ்வாறு ஆரம்பமான எங்களது காலைப் பொழுது பிறகும் தொடர்ந்தது.

தாளத்துக்கும் இசைக்கும் ஏற்ப மீண்டும் அசையத் தொடங்கினோம். வெவ்வேறு விதமான உடல் அசைவுகளை (Body Movements) ஏற்படுத்திப் பார்ப்பதே நோக்கமாயிருந்தது. தாளத்தையும் இசையையும் உள்வாங்கி ஒன்றித்து அசையத்தொடங்கிய நாங்கள் ஒலியும் எழுப்பத் தொடங்கினோம். இந்த ஒலி உடலின் வெவ்வேறு இடங்களில் இருந்து பெறப்பட்ட காற்றினால் உருவாக்கப்படுவதற்காகவே முயற்சிக்கப்பட்டது. இசையும் தாளமும் நிறுத்தப்பட்டு இந்த ஒலி அல்லது சத்தத்துடன் எங்கள் உடல் அசைவும் நிகழ்ந்து கொண்டிருந்தது. இது வளர்ந்து செல்லச் செல்ல விரைவில் நாங்கள். எங்கள் எங்கள் சொந்த உணர்வுகளின் வசப்பட தொடங்கினோம்.
எங்கள் ஆழ்மனத்தில் புதைந்திருந்த துயரங்களின் வசப்பட்டோம். அவை எங்களை விட்டு வெளியேறத் துடித்தன. அவை கேட்டபடி எங்கள் உடல்களும் குரல்களும் வீசப்படத் தொடங்கின. இப்பொழுது நாங்கள் எங்



களை வெளிப்படுத்தத் தொடங்கினோம். இதற்கு தடைவிதிப்பார் யாருமில்லை. எங்களைக் கத்தாதே, பாடாதே என அச்சமூட்ட எவரும் இல்லை. எங்களுடன் நேரடியாகச் சம்பந்தப்படாத புறவயமான நோக்கங்களுக்காக நாங்கள் நிர்ப்பந்திக்கப்படவில்லை. எங்களது அகவயமான உணர்வுகளின் குறியீடாக நாங்கள் அந்த வெளியில் அசையத் தொடங்கினோம்.

எனக்கோ என் மனதை தொல்லைப்படுத்திக் கொண்டிருந்த பிரச்சினைகள் ஒவ்வொன்றாகச் சத்தங்களுடன் அள்ளுண்டு செல்வது போல இருந்தது.

அந்த வெளியை துயர அழுகைகளும் ஒலியின் முறையீடுகளும் நிறைந்தன.

இப்பொழுது சிதம்பரநாதன் குரல் மெல்லக் கேட்கிறது.
''சரி நாங்கள் வட்டத்துக்கு வருவோம்''

நாங்கள் மெல்ல விடுபட்டோம்.

''பல்வேறு ஒலிகளையும் அசைவுகளையும் வெளிப்படுத்த முயற்சி செய்வோம் எனத்தான் இந்த நிகழ்வை ஆரம்பித்தேன். ஆனால் பிறகு பிறகு பார்க்கும் போது நீங்கள் ஒவ்வொருத்தரும் உண்மையாக இருந்தீர்கள். உண்மையின் வெளிப்பாட்டுக்கு ஏற்ப உடலும் குரலும் இருந்தது. நான் அதற்கு பிறகு உங்களில் தலையிட விரும்பாமல் உங்களை அவதானித்தபடி அமைதியாக இருந்தேன்'' என்றார் சிதம்பரநாதன்.

காலை தொடங்கி மதியம் வரை நடந்த அந்த வெளியில் இசையும் அசைவுகளும் ஒலிகளும் அதன் பாத்திரங்களான நாங்களும் ஒருவகையான புதிய அரங்கையே குறியீடு செய்தோம் என்று எனக்கு படுகிறது. அரங்க மூலகங்களான உடலும் அசைவும் குரலும் இசையும் பயன்படுத்தப்பட்டன. நாங்கள் நடிக்கவில்லை வாழ்ந்தோம். முன்கூட்டித் திட்டமிடப்படாத, வடிவம் அற்ற வடிவம் ஒன்று அந்த அரங்கத்துக்கு இருப்பதாக உணர்கிறேன். அதேவேளை அவ் அரங்கத்துக்குப் பார்வையாளர்கள் இருக்கவில்லை.

மதிய உணவின் பின்னர் மீண்டும் காலை நிகழ்வு தந்த புத்துணர்வுடன் தெருவெளி அரங்குக்கான புறவரைவொன்றை திட்டமிடவேண்டி இருந்தது.

சிதம்பரநாதன், ''சரி இப்பொழுது எல்லோரும் இந்த வெளியில் மிகத்தளர்வாக உடலைக் கிடத்தி கண்மூடி படுத்துக் கொள்ளுங்கள்! உங்களை அதிகம் வேதனைப் படுத்தும் ஒன்றை யோசியுங்கள்'' எனக்கூறினார்.

நேரம் போய்க் கொண்டிருந்தது. ஒவ்வொருவரும் தங்களுக்குள் போய் கொண்டிருந்தனர்.

சிதம்பரநாதன் மீண்டும் கேட்கிறார்: ''ஏன்! நாங்களும் மனிதர்கள்தானே! நாங்கள் ஏன் வேதனைப்பட வேண்டும் என்று யோசியுங்கள் நாங்கள் மனிதர்கள் இல்லையா?''

சற்று பிறகு சரி சத்தங்களைப் பயன்படுத்துங்கள் என்றார்.

உண்மையில் எனக்கு சத்தத்தை பிறப்பிக்க வேண்டும் போல் இருக்கவில்லை. மெல்லிய இசைபோன்றதொரு ஒலி எனது கண்டத்தில் இருந்து வரத்தொடங்கியது. நண்பர்களும் அவ்வாறுதான் மெல்ல மெல்ல ஒலியும் இசையும் போல். ஆயினும் பிறகு பிறகு காலை போலவே ஒரே ஓலமும் அழுகையுமாக உயரத் தொடங்கியது. தேவாவின் குரல்.... பிறகு கிரியின் குரல்.. பிறகு கமலாவின் குரல்... அந்தக் குரல்களினூடாக வந்த துயரங்கள் என்னை அறைந்தன! எனது துயரங்கள் பின்தள்ளப்பட்டன!! எனக்கு அழுகை விக்கிக் கொண்டு வந்தது. கத்த வேண்டும் போல இருந்தது. எனக்காகவும்! என் நண்பர்களுக்காகவும்!! எல்லோருக்காகவும் கத்தினேன்!!!

ஆனால் இந்தக் கத்தலால் என்ன ஆகும். எவை தீரும் என்கிற அறிவு வந்ததும் எனக்கு யாவும் வெறுமையாகிப் போயின. எனக்கு புறத்தே நண்பர்களின் குரல்கள் கேட்டபடி இருந்தன.

சிதம்பரநாதனின் குரல் மீண்டும் ஒலிக்கிறது. ''எங்களை ஒடுக்குகிறவர்கள் எங்களுக்கு இப்பொழுது தெரிகின்றார்கள். அவர்கள் தங்களுக்குள் பேசிச்சிரிக்கின்றார்கள். தங்கள் சிம்மாசன இருக்கைகளில் இருந்து துயரப்பட்டவனைப் பார்த்து ஏதோ கேட்டு பரிதாபப்படுவது போல பரிதாபப்படுகிறார்கள். சிரிக்கிறார்கள். பிறகு எழுந்து போகிறார்கள். நீங்கள் அவர்களைக் காண்கிறீர்கள்.......''

எனக்கு எங்களை ஒடுக்குகிற ஒரு முகத்தை பிம்பமாக மனதுக்குள் கொண்டுவர முடியவில்லை. எங்களை ஒடுக்குவது [illegible] என்பதே நினைவுக்கு வந்தது.

ஆனால், புறங்கைக்கட்டுடன் கைகளுக்கிடையில் சுங்கான் புகைய, கால்களில் முட்கள் முளைத்த ஒருவன் நீண்ட ஆளோடி ஒன்றில் நடந்து செல்வதை மனக்கண்ணில் கண்டேன். அவனுக்கு கதவு வழி விட்டது. பிறகு திரும்ப சடாரென மூடி என் முகத்தில் அடித்தது, அதற்கு அப்பாலும் என் யோக நிலை நீடிக்கவில்லை. வேறு படிமங்களும் அகப்படவில்லை.

நாங்கள் மீண்டும் வட்டமாக அமர்ந்தோம். தேவா விடுபட நீண்ட நேரம் எடுத்தது. இப்பொழுது எங்கள் அனுபவங்களைப் பரிமாறும் நேரம்.

பாஸ்கரன் தனக்கு கடுமையான வார்த்தைகளால் எல்லாரையும் பேச வேண்டும் போல இருந்தது என்று கூறினான்.

இன்றைய கணம் வரையும் சூனியமாக உள்ள தன்னுடைய வாழ்க்கையை யோசித்து கொண்டிருந்ததாக தேவா கூறினான்.

ஒடுக்குகிறவனைப் பார்த்து '' எங்கடை ரத்தம் தானே வேணும் இந்தா! நல்லாக்குடி!!. எங்கடை சதையள் தானே வேணும் இந்தா! தின்னடா!!'' எனக் கத்த வேண்டும் போல இருந்ததாக கிரி கூறினான்.

ஒடுக்குபவன் ஒடுக்கப்படுபவன் இருவரையும் பற்றிய புதிய படிமங்களை உருவாக்கவே, உங்களை ஒரு செய்து காட்டலுக்கு தயார்படுத்தவே, உங்களைச் செய்து பார்க்கும்படி தூண்டினேன். ஆனால் தொடங்கி ஒரு கட்டத்துக்கு மேல் எனக்கு நீங்கள் செய்து காட்டல் என்பதற்கு அப்பால் உங்களுக்குள்ளையே போகத் தொடங்கி விட்டீர்கள் எனப் புரியத்தொடங்கியது. எனக்கு நிற்பாட்டவும் மனமில்லை. என்னேன்று வழிப்படுத்துகிறது என்றும் தெரியவில்லை என்றார் சிதம்பரநாதன்.

காலையும் மாலையும் நிகழ்ந்த இரு அனுபவங்களாலும் அவர் ஓரளவுக்கு உணர்ச்சி வசப்பட்டிருந்தார்.

''நாங்கள் வெறுமனே நாடகத்திற்கென திட்டமிடுவதை விட்டு இதையே இந்த வெளியில் நிகழ்ந்த எங்களுடைய அக வெளிப்பாட்டு அரங்கையே சனத்திடம் கொண்டு செல்வோமா'' என்று கூடக்கேட்டார்.

காலையும் மாலையும் நாங்கள் எங்களுடைய ஒவ்வொருத்தரினதும் தனித்தனி பிரச்சினைகளை உடலாலும் குரலாலும் அசைவாலும் மட்டும் வெளிப்படுத்தினோம். நாங்கள் வெளிப்படுத்திய பிரச்சினைகள் இன்னதென நிகழ்வு தொடங்கி முடியும் வரை தெரியாது. உரையாடும் போதே பரஸ்பரம் எங்களுக்குள்ளே தெரியவரும்.

எங்களுக்கு ( நடிகர்கள் அல்லது பங்குபற்றுனர்கள்) இடையிலான இடைத்தாக்கம் பார்வையாலும் குரலாலும் மட்டுமே நிகழ்ந்தது. எனக்கு முன் அசைகின்றவனை ஒலி எழுப்புபவனை காணவும் கேட்கவும் செய்கிறேன் என்ற அளவில் மட்டும் எங்களுக்கிடையிலான இடைத்தாக்கம் இருந்தது. மற்றப்படி சுயமான தனித்தனி அலகுகளாகவே அந்த வெளியில் தொழிற்பட்டோம். இந்த அரங்கை பார்க்கிற ஒருவனுக்கு புலப்படும் ஒரே ஒரு செய்தி அவலமும் துயரமும் மட்டுமே. இவற்றுக்கு மேல் எதுவும் விளங்காது.

பிரச்சினை இன்னதென முன்னறிவிக்கப்படாத தனித்தனி பிரச்சினைகளின் தொகுதியாக மேலே சொன்ன ஒரே ஒரு செய்தியை மட்டுமே வெளிப்படுத்தும் எங்கள் அரங்கினை புரிந்து கொள்ளுமாறு பார்வையாளனை நெருக்கடிக்குள்ளாக்க முடியுமா? மறுபுறத்தில்,

இங்கு மொழி பயன் படுத்தப்படாமையினால் பார்வையாளனின் கற்பனைக்கும் அனுபவத்துக்கும் ஏற்ப எங்களது அரங்கம் தரும் செய்தி வெவ்வேறு விதமாக புரிந்து கொள்ளப்படும் வாய்ப்பும் உள்ளது.

இந்த வகையான அரங்குகளை புரிந்து கொள்ளக்கூடிய திறனும் கலாசாரமும் எங்கள் மக்களிடமும் இப்போதைக்கு இல்லை என்பதால் பார்வையாளர்கள் மிக மிக அந்நியப்பாட்டுடன் நின்று சிரித்து விடவும் கூடும்.

எங்கள் மக்கள் தங்கள் ஆத்மாவின் உண்மையான தேவைகளை ஒடுக்குமுறைக்கு பழக்கப்பட்டதன் காரணமாக உணராமலும், உணர்ந்தாலும் தமக்கு தாமே மறுதலித்துக் கொண்டு தமது வெளிப்பாட்டு சுதந்திரத்தை இழந்து வாழ்கிறவர்கள். அவர்களுக்கு அகவெளிப்பாட்டின் குறியீடு ஆக அமையும் இந்த அரங்கம் என்ன தாக்கத்தை கொடுக்கும்....?

எனக்கு இன்னுமொரு கேள்வியும் எழுந்தது. நாங்கள் எங்களுடைய பிரச்சினைகளை மட்டுமே வெளிப்படுத்த விரும்புகிறவர்களாக இருக்க முடியுமோ? நாங்கள் எங்களது வாழ்க்கைச் சூழ்நிலைகளால் அடைகிற மனவேதனைகளை கொட்டிவிடுவது மட்டுமா அரங்கம்? என்னுடைய சொந்தப் பிரச்சினைகள்; என்னைப் போன்ற மற்றவனின் பிரச்சினைகள்; என்னைப் போன்றதல்லாத மற்றவர்களின் பிரச்சினைகள் இவர்கள் எல்லாரையுமே பாதிக்கிற சமூக பொருளாதாரப் பிரச்சினைகள் என யாவற்றையும் வெளிப்படுத்தும் முறையில் அல்லவோ? எமது அரங்கம் அமைய வேண்டும்.

அவ்வாறு இல்லாவிடின் பங்குபற்றுபவர்களின் அக்கணத்து சுயதிருப்திக்கான களமாகவே அந்த அரங்கம் அமைந்து விடுமே!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





## அய்யாத்துரையாரின் பத்தியின் புனிதம்!

அ. இரவி அவர்களின் தகப்பனார் இறந்த சோகம் தாளாமல் அவர் எழுதிய ''அப்பா என்றதொரு சொல்'' குறிப்புக் களை தந்திருந்தீர்கள்; படித்தேன். என் கண்கள் குளமாகின. தொண்டை துக்கத்தால் வலித்தது. எனது அப்பாவின் தகப்பனார் இறந்த சமயம் எமக்கு இருந்த மனநிலை அந்தப் பிஞ்சுகளுக்கும்..... என எண்ணிய போது உள்ளம் வெம்பியது. இந்தக் காலத்தில் தனிக்குடித்தனம், பெரியவர்களை அலட்சியப்படுத்துதல் என்பன சர்வசாதாரணம். ஆனாலும் இரவி அவர்களின் குடும்பத்தின் கட்டமைப்பு மனிதம் இன்னும் பூரணமாக மரணிக்கவில்லை எனக்காட்டி ஆறுதல் படுத்தியது.

''மலையகப் பணிப்பெண் தீமூட்டிக் கொலை'' என்ற தலைப்புடன் வந்த விடயம் என்னை சிந்திக்கவைத்தது. மலையகத்தமிழரின் அரும் பெரும் காவலர் எனக் காட்டி வேடம் போடும் வேடதாரிகள் இவற்றை எங்கே கவனிக்கப்போகிறார்கள். மனித உரிமை; மாட்டு உரிமை என பெரிதாக கூச்சல் போடும் சில தாபனங்களும், பெண் உரிமைக் கழகங்களும் ஏன் மௌனம் சாதிக்கின்றன? ஓ... அந்த மலையகத் தமிழ்ச் சேவகி ஏழை; அவள் தோட்டக்காட்டுச்சமூகத்தை சார்ந்தவளல்லவா? என்ற போதும் நீதி வேண்டும் எனக்கோரி எமை தட்டி எழுப்பி துடிக்கச்செய்த வ.ஐ.ச. ஜெயபாலன் அவர்களின் செயற்பாடு மெச்சத்தக்கது. அதற்கு களம் தந்த சரிநிகருக்கும் என் நன்றிகள். ஆனால் அடுத்த கட்டம் என்ன என்பதுதான் புரியவில்லை. அந்த அபலையின் அநியாயக்கொலைக்கு அட்டகாசநாடகத்திற்கு எதிராக நீதி வேண்டும்! எனப் போராட அக்கறை உள்ள மானுடங்கள் முன்வர வேண்டும். பீஜிங் போய் கூட்டம் போட்டால் மட்டும் போதாது. உள்நாட்டின் கொடூரங்கள் ஒழிய குரல் கொடுக்க யார் முன் வருவார்கள்? பெண்ணுரிமை என்பது அர்த்தம் மாறிப் போய்க் கொண்டிருக்கும் இச்சந்தர்ப்பத்தில் இந்த ஏழை மலையகத் தமிழிச்சிக்காகக் குரல் கொடுக்க முன் வரயாருளர்? ஆனாலும் அசமத்துவத்திற்கு அடி கொடுக்கப் பெண்கள் ஆண்கள் என்ற பேதம் மறந்து முன்வரவேண்டும். வருவார்களா? வந்தால் எம்மைப் போன்றவர்களின் கரங்களும் இணையும்.

''அதிரடித்தவறு'' கவனித்தேன். ஆறுதலாய் இருந்தது. ஆவேஷமாயும் இருந்தது. தினமுரசில் இச்செய்திபடித்திருந்தேன். நான் மிகவும் அபிமானம் வைத்துள்ளது என்னவோ சரிநிகரில்தான். எனவே அதன் உயர் பீடத்தின் இச்செயலை என்னால் ஜீரணிக்க முடியவில்லை. இனிமேல் யாரிடமும் சரிநிகர் பற்றிப் பேசமுடியாதே என நொந்து போனேன்.

ஆனாலும் சரிநிகர் பற்றிய தவறான எண்ணம் பரவிஇருந்ததை எப்படி தடுக்கப் போகிறார்கள் என்ற கவலை என்னுள் எழுந்தது.

ஆனால் விடயத்தை பகிரங்கப் படுத்திய செயல், உள் உண்மைகளை விளங்கச்செய்த செயலை நான் பாராட்டுகிறேன். மது அருந்துவது அவரவர் தனிப்பட்ட விடயம். அதை அம்பலத்துக்குக் கொண்டு வரும் நோக்கில் உண்மையறியாது நிலைமை பற்றி விசாரிக்காது பத்திரிகையில் போட்ட செயலை வாசகர்கள் நிச்சயம் கண்டிக்கவேண்டும். நீங்கள் இது பற்றி அய்யாத்துரையாரிடம் கேட்டு பதிலைத்தர வேண்டும். (நான் எழுதுவேன் அவருக்கு) தமிழன் என்பதற்காக மீதிப்பணம் கொடுக்காமல் விட்டது; அடையாள அட்டை கேட்டது, அவமானத்திற்குள்ளாக்கிய செயல் கண்டிக்கத் தக்கது. அது சரிநிகர் பத்திரிகை ஆசிரியர் சுற்றத்தாருக்கு ஏற்படுத்தப்பட்டதால் அய்யாத்துரையார் மகிழ்ந்து போய் எழுதிருக்கலாம். ஆனால் தமிழ்க் குடிகளுக்கு தமிழ்க் குடிகள் என்ற ஒரே காரணத்திற்காக ஏற்பட்ட செயல் என்பதை அய்யாத்துரையார் உணராது விட்ட செயல் வருத்தத்தைத்தான் தருகிறது. இந்த தொண்ணூற்றைந்திலும் தமிழன் தமிழனுக்கு தடி எடுத்து குழி தோண்ட முயல்வது எம்மைத் தலைகுனிய வைக்கிறது. அதிகவலை என்னவெனில் ஜனநாயக விழுமியங்களையும், பத்திரிகா தருமத்தையும் மறந்தவரெல்லாம் இதுபற்றி பத்தியாக எழுதி தாளை நிரப்பும் 'புனித' செயலை எண்ணித்தான்.

***கேகாலை மலர்***
***கேகாலை.***

## அஷ்ரப்பின் தியாகமும் ஐந்து லட்சமும்

முஸ்லிம் காங்கிரஸ் அவுட் ஹவுஸ் இலிருந்து ஒரு குரல் எனும் தலைப்பிலான சித்தீக் என்பாரின் எதிர் வினை கண்டேன். மருதூர் பஷீத் எழுதியிருந்த கடிதத்திற்கு பதிலாக வந்திருந்த அக்குரல், சொற்களிலும், சம்பவத் தொகுப்புக்களிலும் இருந்த சிறு பிழைகளைக் கட்டிப்பிடித்துக் கொண்டு உயிரோட்டமான ஒரு கடிதத்தின் கருத்துக்களை மறுக்க முனைந்து மழுப்பி நின்றது. இதனை கட்டுரை பூராகவும் காண முடிந்தது.

1987இல் இந்தியா-இலங்கை சமாதான ஒப்பந்தத்தில் முஸ்லிம்களின் நலன்கள் பேணப்படவில்லை என்ற காரணத்திற்காக அவ்வொப்பந்தத்தினை எதிர்த்த மு.கா. தலைவர் அஷ்ஃரப் அவர்கள் அவ் ஒப்பந்தத்தின் கீழான மாகாண சபைத்தேர்தலில் போட்டியிடத் தீர்மானித்தது அவரது அரசியல் சாணக்கயத்தினை காட்டுவதாக கட்டுரையாளர் குறிப்பிட்டிருந்தார். இந்தியப் படையினரின் உதவியுடன் புலிகள் தவிர்ந்த ஏனைய தமிழ் இயக்கங்கள் நடத்தி முடித்த பாரிய மோசடியே வடகிழக்கு மாகாண சபைத் தேர்தல். இந்த மோசடியில் கணிசமான பங்களிப்பு மு. காவுக்கும் இருந்தது. பதவிப்பித்துக்காரணமாக ஜனநாயக முறைமைகளுக்கு விரோதமாக செயற்பட்டு பஞ்சாடசிக்கு விரோதமாக பெறப்பட்ட வெற்றிதான் அஷ்ஃரபின் அரசியல் சாணக்கியம் என்றால் அவரது அரசியல் நேர்மையைப் பற்றிப் பெரிதாக சொல்லிக் கொள்ளுவதற்கு எதுவுமில்லை.

1994 பொதுத் தேர்தலில் மு.கா. வின் ஜனநாயக முறைமைகளுக்கு விரோதமான செயற்பாடுகள் காரணமாக திகாமடுல்ல மாவட்டத்தில் ஐ.தே.கட்சியிலிருந்து ஒரு முஸ்லிம் பிரதிநிதி தெரிவு செய்யப்படுவது தடுக்கப்பட்டது. மு.கா.அடாவடித்தனம், அச்சுறுத்தல், எட்டப்பர் கதைகள் காரணமாக ஐ.தே.. கட்சிக்கு ஆதரவான பெருமளவு முஸ்லிம் வாக்காளர்கள் தமது வாக்குரிமையை பிரயோகிக்காதிருந்தனர். சுமார் 3000 வாக்குகள் வித்தியாசத்தினால்தான் ஐ. தே. கட்சியின் நான்காவது ஆசனம். அதாவது முஸ்லிம் பிரதி நிதித்துவம் இழக்கப்பட்டது. இது மு.கா.வின் தலைமைத்துவத்தின் அரசியல் சாணக்கியமா?

அஷ்ஃரபின் மக்களபிமானம் பற்றிப் பேசும் கட்டுரையாளர் 94 பொதுத்தேர்தலில் திகாமடுல்ல மாவட்டத்தில் மு.கா.72 ஆயிரம் அளவிலான வாக்குளையுப் பெற்றிருந்த அதே வேளை மு.கா. தலைவரும் அந்த மாவட்டத்தினைச் சேர்ந்தவருமான அஷ்ஃரப் அவர்கள் சுமார் 60 ஆயிரம் அளவிலான விருப்பு வாக்கினையே பெற்றிருந்தார். அதாவது சுமார் 12 ஆயிரம் அளவிலான மு.கா.ஆதரவாளர்கள் அஷ்ஃரப் அவர்களை ஏற்கவில்லை என்பது பற்றி என்ன சொல்லப் போகின்றார்?

அமைச்சர் அஷ்ஃரபின் தியாக உணர்வுக்கும் அர்ப்பணத்திற்கும் கட்டுரையாளர் சுட்டிக்காட்டிய உதாரணம்தான் கல்முனையில் அமைக்கப்பட்டிருந்த அஷ்ஃரபின் வீடு சுக்கு நூறாக்கப்பட்டது. சன்டே லீடரில் வெளிவந்திருந்த இதுவரை மறுக்கப்படாத செய்தியின் படி அந்த வீட்டுக்காக அமைச்சர் அஷ்ஃரப் ஐந்து லட்சம் ரூபாவினை வன்செயல் இழப்பீடாகப் பெற்றுள்ளாரே இதுதான் தியாகமும் அர்ப்பண உணர்வுமோ.

முஸ்லிம்களின் பிரச்சினைகளை சந்திக்கு கொண்டு வந்தவர்களில் முதன்மையானவர் அஷ்ஃரப்தான் என்று கட்டுரையாளர் சொல்ல வருகின்றார். தமிழ் மக்களின் பிரச்சினைகளூடாக முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளும் பின்னிப்பிணைந்து இவ்விரு தரப்பாருக்குமே பிரச்சினைகள் உள்ளன என்பதை உலகறியச் செய்தவர்கள் ஆயுதமேந்திய தமிழ் இளைஞர்கள்தாம். திம்பு பேச்சுவார்த்தை, சர்வகட்சி வட்ட மேசை மகாநாடுகள் இந்திய- இலங்கை சமாதான ஒப்பந்தம் உட்பட அண்மைய சந்திரிகாவின் சமாதானப் பொதிவரை அந்தந்த கால கட்டத்தில் அவை முன்வைக்கப்படுவதற்கு தமிழ் ஆயுதக் குழுக்களின் செயற்பாடே காரணமாயமைந்தது. தனது கற்பனைக் கோலமான தென் கிழக்கு மாகாணத்தைப் பெற்றுக் கொள்வதற்காக சமாதானப் பொதிக்குப் பேரம் பேசும் திறமைதான் அஷ்ஃரப்புக்கு உள்ளதே தவிர முஸ்லிகளின் பிரச்சினைக்கு தீர்வு காணும் எந்தத் திறமையும் அவரிடம் கிடையாது. ஏனெனில் சந்திரிகாவை பிரதமராகவும் ஜனாதிபதியாகவும் ஆக்கியதாக கூறிக்கொள்ளும் அஷ்ஃரபினால் முஸ்லிம் சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்திற்கு பொறுப்பான அமைச்சராகக் கூட வர முடியவில்லை.

முஸ்லிம் மாகாண சபை என்ற போலி வாக்குறுதியை வழங்கி முஸ்லிம் மக்களின் வாக்குகளை கொள்ளையடித்தவர்கள் தமது சுயரூபத்தினை இன்றும் வெளிக்காட்டியுள்ளனர். மு. காங்கிரஸின் அடிமட்டத் தொண்டன் என்ற வகையில் மு.கா. அஷ்ஃரப் என்பவரிடம் நான் கற்றுக்கொண்ட பாடம் அவர் ஒரு சுமாரான அரசியல் வாதி. இஸ்லாமிய அடிப்படை மூலாதாரங்களை குர் ஆன், ஹதீஸை மூலதனமாகக்கொண்டு தனது அமைச்சர் என்ற அந்தஸ்தினை அடைந்து கொண்டவர். அந்த அந்தஸ்தினை தமது உயிர் உள்ளவரை தக்கவைத்துக்கொள்வதற்காக எந்தக் கட்சிக்கு முஸ்லிம்கள் வாக்களித்தால் எட்டப்பர்கள் என்று கூறினாரோ அதே கட்சியுடன் (ஐ.தே.க.) கூட்டுச்சேரவும் தயங்காதவர்.

ஒன்றும் ஒன்றும் இரண்டே.

***முஹுத் உபைதுல்லாஹ்***
***காத்தான்குடி-2.***

## தொடரக்கூடாத சம்பவம்!

சரிநிகர் கண்டு அதிர்ச்சி அடைந்தேன். மலைய பணிப்பெண் தீமூட்டிக்கொலை என்ற வ.ஜ.ச. ஜெயபாலன் எழுதிய குறிப்பு. இடம் பெற்றிருந்த சில விடயங்கள் என் மனத்தில் பாதிப்புக்களை ஏற்படுத்தின.

இந்தப் பாவப்பட்ட சமூகத்தில் ஒருவருக்கு ஏற்பட்ட நிலைமையைச் சுட்டிக்காட்டி எழுதிய ஜெயபாலனுக்கும் இதனைத் துணிந்து வெளியிட்ட 'சரிநிகர்' இதழுக்கும் முதலில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

மலையகப் பெண்மணி லட்சுமிக்கு ஏற்பட்ட நிலை இனி ஒருவருக்கும் ஏற்படக்கூடாது. இந்த விடயம் தொர்பாக, உடனடியாக மலையக அமைச்சர்கள் முதற்கொண்டு தொழிற்சங்கத் தலைவர்கள் அரசு சாபற்ற நிறுவனங்களுக்கு அறிவித்தேன். இனியும் இந்த நிலை தொடரக்கூடாது. நான் அங்கம் வகிக்கும் தோட்டப் பிரதேச காட்டுச்செயலகத்திற்கு சட்ட நடவடிக்கை மேற்கொள்ளும் படி எழுதியுள்ளேன்.

***அந்தனி ஜீவா***
***கொழும்பு-06.***

## கடிகாரத்தில் கோளாறோ?

சரிநிகர் 83வது இதழில் மூதூர் பிரதேச சபை தவிசாளர் அவர்கள் திருகோணமலை - மூதூர் படகுச்சேவை ஒரு மணித்தியாலமும் முப்பது நிமிடமும் எடுப்பதாகக் கூறியுள்ளார். பாவம், அவரது கடிகாரத்தில் கோளாறு என்றுதான் கூறவேண்டும், இறங்குதுறைக்கு வந்து ஒருவர் வரிசையில் நின்று 'டோக்கன்' பெற்று படகில் சென்று மறுகரை சேர்வதற்கு மூன்றுமணித்தியாலம் கூடபோதாதே? அவற்றின் மத்தியிலும் பாதுகாப்பு படையினர் வருகின்றனர் என்றதும் அவர்கள் இறங்குத்துறை வந்து சேரும்வரை படகு நிறுத்திவைக்கப்படுகிறதே, அதனால் செல்லும் மணித்தியாலங்கள் எத்தனை என்று அவர் கணக்கெடுக்கவில்லைப் போலும். பாதுகாப்புப் படையினரை படகிலேற்றி விட்டு அரசாங்க ஊழியர்கள், ஆசிரியர்கள் போன்றோரை எத்தனை முறை விட்டுவிட்டுச் சென்றிருக்கிறார்கள். எது எப்படியோ அவர்களுக்கு மதுபானக்கடத்தல் ஒழுங்காக நடந்தால் சரி, மற்றவைபற்றி அவர்களுக்கு என்ன கவலை?

***சி. பூ. தம்பி***
***மூதூர்.***

## யாருக்காவது புரிகிறதா?

பூச்சியம் கலைவட்டத்தினராகிய நாங்கள் 'வளைவு' எனும் குறும் வீடியோ படம் ஒன்றைத் தயாரித்திருந்தோம். அதனை ரூபவாஹினியில் ஒளிபரப்புவதற்காக இரண்டு மாதங்களுக்கு முன் ரூபவாஹினி வர்த்தக முகாமையாளரிடம் கொடுத்திருந்தோம். அவர் தணிக்கைக்குப் பொறுப்பான பந்துல விதானகே என்பவரிடம் தணிக்கைச் சான்றிதழ் பெற்று வருமாறு கூறினார். அதன்படி தணிக்கைச் சான்றிதழ் பெறுவதற்கான கட்டணத்தைச் செலுத்தினோம். பந்துல விதானகே சில நாட்கள் கழித்துவரச் சொன்னார். சில நாட்களின் பின் போனோம் பநதுலவைச் சந்திக்க. அவரைச் சந்திக்க முடியாதென்றும், போன் பண்ணிப் பார்க்கிறேன் என்றும் கூறினாள் ரிஷெப்ஷனிஸ்ட். கொஞ்ச நேரம் கழித்து ரைபிஸ்ட் இல்லை, நாளை போன் பண்ணிவிட்டு வரட்டாம் என்றாள். ஒளிபரப்புவதற்கு அனுசரணையாளர் ஒருவரையும் அழைத்து வந்திருக்கிறோம். இன்றே தணிக்கைச் சான்றிதழை தந்தால் நல்லது என்று கேட்டோம். கேட்டு வருவதாகப் போன பியோன் 15 நிமிடத்திற்கு மேலாகியும் வரவில்லை. அருகிலிருந்த பேபோன் மூலமாக பந்துலவுடன் தொடர்பு கொண்டோம். அனுசரணையாளரையும் அழைத்து வந்ததை அவருக்கு விளக்கினோம். என்ன நடந்தது என்று புரியவில்லை. மறுமுனையிலிருந்து அவர் தாறுமாறாக ஏசுகிறார். நாங்கள் என்ன தவறிழைத்தோம் என்பது புரியவில்லை.

தணிக்கைச் சான்றிதழும் தர ஏலாது ஒன்றும் தர ஏலாது. இங்கு நான் விரும்பியபடி தான் செய்வேன். என்ன செய்வீர்கள்? என்று பலவாறாகத் திட்டிவிட்டு திடீரெனப் போனை வைத்தார்.

நாங்கள் செய்வதறியாது நின்றோம். சிறிது நேரத்தில் வெளியே வந்த அவர் மீண்டும் எம்மை ஏசலானார். ஆங்கிலத்தில் நாகரிகமற்ற வார்த்தைப் பிரயோகங்களைப் பாவித்தார். இறுதியாக 'பளயங்' என்று கத்தினார். பியோனிடம் சொன்னார் இருவரையும் பிடித்து வெளியில் போடுங்கோ என்று.

இதற்கு மேலும் நாம் அவமானப்பட வேண்டாம் என்று வெளியில் வந்து விட்டோம்.

எங்களது கேள்வி இதுதான்.

ஏன் நாங்கள் இப்படி அவமானப்படுத்தப் பட்டோம்.

ரூபவாஹினிக்குப் புதியவர்கள் என்பதாலா?

எமது திறமை அவர்களுக்குப் பொறாமையை ஏற்படுத்தியதாலா?

அல்லது நாங்கள் தமிழர்கள் என்பதாலா?

யாருக்காவது புரிகிறதா?

***விஜித்சிங்***
***கொழும்பு***

## உளவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்!

எல்லாரது தனிப்பட்ட வாழ்க்கை அந்தரங்கங்களையும் உளவறிந்து உலகறியச் செய்யும் வண்ணம் மொட்டைக் கடித இலக்கியத்துக்கு வளமூட்டுஞ் சான்றோர் வதியும் பாரிஸாம் பதியில் உறையுஞ் சுகன் என்பார் தனது உளவியல் ஞானத்தை பிரயோகித்துப் பேராசிரியர் துரைராஜா அவருக்கு பிரபாகரன் கௌரவம் அளித்த இரகசியத்தை உளவறிந்து உலகறியச் செய்ததன் மூலம் தனது பெருமைக்குரிய பாமரத்தனத்தையும் சரிநிகரின் 83ம் ஏட்டில் நிறுவியுள்ளார். அவர் தமக்கு முதற்கண் அடியேனது பணிவன் பான வணக்கங்கள்.

அடியேன் அன்னாரது மேற்குறிப்பிட்ட சிறப்புத் துறைகளான உளவு, பாமரத்தனம் ஆகிய இரண்டில் எதனுள்ளும் அடிவைக்கும் நோக்கம் உடையேனல்லேன் எனவும் இத்தாற் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகையால், அன்னார் திருவுளம் அமைதியடைவராக.

மனித உரிமைக்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள் (யாழ்ப்பாணம்) என்ற அமைப்பு யாழ்ப்பாணத்தில் இயங்குவது உண்மையென நம்புவோரது விசுவாசத்தைக் கெடுப்பது கண்கெட்ட நாத்திகரது செயலாக இருத்தல் கூடும் என யாவரும் அறிவோமாக. அத்தகைய அமைப்பு அண்மைக் காலங்களில் விடுத்த அறிக்கைகளில் அதன் அக்கறைகள் பற்றி அறிவோர் அவர்கள் பக்கச் சார்பின்றி நடுநிலை பிறழாது எழுதுவது பற்றியும் யாழ்ப்பாணத்தில் அரசாங்கம் இன்று தொடுத்துவரும் சமாதானத்திற்கும் மனித உரிமைக்குமான போர் பற்றியும் அறிவர். யாழ்ப்பாணத்துச் சூழலுள் தலைமறைவாக இயங்கிக் கொண்டு அங்கு விடுதலைப் புலிகளின் விமானக் குண்டுவீச்சாலும் வெடியோட்டுத் தாக்குதலினாலும் வியாபாரத் தடையினாலும் அழிவுக்குள்ளாகும் மக்கள் பற்றிய செய்திகளை தம் நடுநிலை பிறழாமை கருதி மிக விவரிக்காமல் இருக்கும் அச்சான்றோர் பற்றி எவரும் வியக்காமல் இருப்பது கடினம்.

அடியேனது கடிதம் வெளிவந்த அதே 81ம் ஏட்டில் இன்னொரு மடலும் சரிநிகரில் வரும் சில ஒருதலைப் பாங்கான மதிப்பீடுகள் பற்றிக் குறிப்பிட்டிருந்தது. அதனை இயற்றியவரும் அடியேன் போற் குற்றவாளியே எனக் கருதும் நிலையில் உள்ளேன். சுகன் அவர்கள் அடியேனின் குற்றங்களுக்குத் தண்டனையாக அடியேனது கவிதையின் தலைப்பை மாற்றி எழுதியமையையும் ஏற்றுக் கொள்ள கடமைப்பட்டுள்ளேன். காதற் கவிதைகள் எழுதுவதில் அடியேனது வயதை மட்டுமன்றி அனுபவத்தையும் அறிந்துள்ள சுகன் அவர்களது உளவு ஞானத்துக்கு முன் அடியேன் தலை வணங்குகிறேன். லண்டன் நாழிகை (?) தொடர்பாயும் நல்ல தண்ணீர் கிணறு பற்றி தொடங்கி (தகுதியின் அடிப்படையில்) இல்லாத ஒரு அமைப்பை உள்ளதாக்கும் முறையிலும் அன்னாரது வாக்கியங்கள் என்னைச் சிலிர்க்க வைத்தன. அன்னார் வாழ்க. அன்னாரது மனிதார்த்த உளவுப் பணியும் வாழ்க.

***சி.சிவசேகரம்***
***லண்டன்***

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சரிநிகர்
SARINIHAR

# இங்கு நடப்பது தான் என்ன?

யாழ் நகரை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் இலங்கை அரசப்படைகளின் தாக்குதல் நடவடிக்கைகள் பற்றியும் அவற்றின் வெற்றிகள் பற்றியும் செய்திகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. யுத்தமுனையில் எடுக்கப்பட்ட படங்களை போட்டுக் காண்பித்து இந்த வெற்றியின் சாதனைகளை விளக்குகிறது ரூபவாஹினி. தனது நீண்ட குண்டுவீச்சும் குழாயை நீட்டியபடி வயல்வெளிகளினூடாக நகர்ந்து கொண்டிருக்கும் தாங்கி ஒன்று, மரமொன்றை சாய்த்து அதன்மேல் தனது இராட்சத சக்கரங்களை நகர்த்திச் செல்வதை இப்படங்களில் ஒன்று காட்டியது.

இந்தக் காட்சியை ஒரு குறியீடாக கொள்வதானால், குடாநாட்டின் மார்பை இரத்த விளாறாக்கி மீள்வதே இலங்கை அரசின் உறுதியான முடிவு என்பதை விளங்கிக் கொள்ளலாம். யாழ் குடாநாட்டினை முற்றாக அழித்து விடுவது என்று கங்கணம் கட்டியபடி நடக்கும் இந்தத் தாக்குதல் நடவடிக்கையிலிருந்தும் தப்புவதற்காக தமது வீடுவாசல்களையும் பொருட்களையும் அப்படியே கைவிட்டு தென்மராட்சியையோ, வடமராட்சியையோ, கிளிநொச்சியையோ நோக்கி மக்கள் ஓடிக் கொண்டிருக்கிறார்கள். புலிகள் முகமூடி அணிந்து மக்களை விரட்டுகிறார்கள் என்ற பாமரத்தனமான அரச எடுபிடிகளது அபிப்பிராயங்களைக் கேட்டு நகைக்கக் கூட முடியாமல் உலகெங்கும் வாழ்கின்ற சமாதான விரும்பிகள் திக்பிரமை பிடித்து நிற்கின்றார்கள்.

செய்தித் தணிக்கையை அமுலில் வைத்துக் கொண்டு, வடக்குக்கு உண்மை நிலையை ஆராய்வதற்காக செல்வதற்கான வாய்ப்பை பத்திரிகையாளர்கட்கு மறுத்துக் கொண்டு, அங்குள்ள மக்களை விடுவிக்கவே தாம் யுத்தம் புரிவதாக கூறி வருகிறது அரசு.

அரசின் ஊதுகுழல் வேலை பார்க்கும் அரச நிறுவனமான ரூபவாஹினிக்கு மட்டும் யுத்த நிலைமைகளை அறிவிக்கும் சிறப்பு வாய்ப்பை அரசு வழங்கி இருக்கிறது.

அங்குள்ள அகதிகளின் நிலை, தென்மராட்சியின் தெருவோர மரநிழலுக்காக போட்டி போடும் அவர்களின் பரிதாபம், அங்கு அனுப்பப்படும் உணவு மற்றும் நிவாரணங்கள் தொடர்பான எந்த விடயங்கள் தொடர்பாகவும், அரசு சார்பு செய்திகளைத் தவிர்ந்த வேறெந்த செய்திகளும் வெளியிடப்பட முடியாத நிலை. அகதிகள் மீதான குண்டு வீச்சுக்கள் பற்றிய செய்திகள் தப்பித் தவறி வந்து விடக் கூடாது, அங்குள்ள மக்களின் அவல நிலை வெளியே தெரியக் கூடாது என்பதில் மிகவும் அக்கறையாக இருக்கிறது அரசாங்கம்.

யுத்த நிலை காரணமாகவும், கொழும்பு தலைநகராக இருப்பதாலும் தவிர்க்க முடியாமல் கொழும்பு வரும் தமிழர்கள் தங்குவதற்கு இருந்த சிறிய தங்கு விடுதிகளையும் மூடிவிட்டது மட்டுமல்லாமல், தங்க இடங் கொடுக்கும் தனியார்களையும் இம்சைப்படுத்தி வருகிறது அரசின் பொலிஸ் படை. அண்மையில், இவ்வாறு திடீரென சீல்வைக்கப்பட்ட விடுதிகளிலிருந்து விரட்டப்பட்ட தமிழர்களில் பல குழந்தைகளும் சிறுவர்களும் அடங்குவார்கள் என்பதால், சிறுவர்களுக்கான சமூக நலப்பணிகளில் ஈடுபடும் அரசசார்பற்ற நிறுவனங்கள் சில அரசாங்கத்திடம் இதுபற்றி முறையிட்டு தாம் இத்தகையோரை பராமரிக்க அனுமதி கேட்டபோது அதையும் மறுத்துள்ளது இந்த அரசாங்கம்.

தமிழர்கள் கூட்டமாக அவ்வாறு வைத்திருக்கப்பட்டால், ஏதாவது கலவரம் ஏற்படும் பட்சத்தில் தம்மால் எதையும் செய்ய முடியாமல் போய் விடுமென்பது இதற்கு அரசு தரப்பு கற்பித்த 'நியாயம்'!

மக்களைப் பெருமளவுக்கு பாதிக்காத, அவர்களுக்கு ஒரு ஆசுவாசத்தை தந்த ஒன்றாக அரசதரப்பாலும், அடிவருடிகள் தரப்பாலும் புகழப்படும் புதிய வரவு செலவுத் திட்டம் பாதுகாப்புக்கென ஒதுக்கியிருக்கும் நிதி 38 பில்லியன் ரூபாய். இது கடந்த வருடம் ஒதுக்கப்பட்டதை விட 14 பில்லியின் அதிகமானது.

யுத்தம் வேண்டாம் சமாதானம் வேண்டும் என்று தொண்டை கிழிய கத்திய அரசாங்கம், சமாதான திட்டம் என்று ஒன்றை பத்திரிகை அறிக்கை வடிவில் அறிவித்து, சமாதான திட்டம் எங்கே என்று கேட்டவர்களின் வாயை அடைத்து விட்ட பெருமிதத்துடன் யுத்தத்தில் ஈடுபடுகிறது. சமாதானத்தின் பேரால் ஜனநாயகத்தின் பேரால் தமிழ் மக்கள் மீது நடாத்தப்படும் இந்த யுத்தத்திற்கு புலிகளின் நடவடிக்கைகளைக் காட்டி நியாயம் கற்பிக்கிறது அரசு.

இன்றுவரை முன்வைக்கப்பட்ட அரசியல் தீர்வை நடைமுறைச்சாத்தியமாக்குவதற்கான ஒருமுயற்சியாக குறைந்த பட்சம் பிரதான எதிர்க்கட்சியுடன் கூட பேசவில்லை. புலிகளுக்கு இந்த அறிக்கையை உத்தியோக பூர்வமாக அனுப்பமாட்டோம் என்று கூறும் அரசாங்கம், அதை தனது தரப்பில் ஒரு நடைமுறை விவகாரமாக மாற்ற எந்த முயற்சியும் எடுக்கவில்லை. மாறாக, சர்வதேச ரீதியிலும் உள்நாட்டிலும் போரை நியாயப்படுத்துவதற்காக தனது வெளிநாட்டமைச்சரை முழுநேரமாக பயன்படுத்தி வருகிறது.

பாதுகாப்பு விழிப்புக் குழுக்கள், சுது நெலும் இயக்கம், பாதிக்கப்பட்ட இராணுவத்தினருக்கு உதவும் நடவடிக்கைகள், ஆயுதப்படைகளுக்கு புகழாரம் சூட்டுதல் போன்றவற்றின் மூலமாக ஒரு போலியான தேசிய இன வெறியை வளர்த்து வருகிறது.

இந்த இனவெறியின் வெளிப்பாடுகள், கொழும்பிலும் அதையண்டியும் நடக்கும் ஒவ்வொரு அசம்பாவிதத்தின் போதும் தெளிவாக வெளிப்படுகிறது. கொலன்னாவ சம்பவத்தின் போது தாக்கப்பட்ட தமிழ் மக்களின் நிலைமை தொடர்பாக அரசின் 'பாதுகாப்பு படைகள்' நடந்து கொண்ட விதம் அச்சமூட்டுவதாயுள்ளது.

இந்த இனவெறிப் போக்கின் இன்னொரு அம்சம் தான், பெந்தோட்டையில் நடக்க விருந்த அரசசார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியத்தின் மாநாட்டுக்கு எதிராக நடந்த ஆர்ப்பாட்டமும் சரிநிகர் பத்திரிகையின் சகோதரப் பத்திரிகையான யுக்திய பத்திரிகையின் ஆசிரியர் சுனந்த தேசப்பிரிய அவர்கள் மீதான தாக்குதலும்!

ஆக, மொத்தத்தில் இங்கு நடப்பது தான் என்ன?
ஜனாதிபதியே சொன்னதுபோல ஏற்கனவே பிரிந்து போய் இருக்கும் நாட்டின் ஒரு பிரிவின் பிரசையான தமிழ் மக்களை அகதிகளை விட மோசமான நிலைக்கு தள்ளுவது தானா?

இதுதானா பொ.ஐ.மு.வின் சமாதானமும் ஜனநாயகமும்
ஒருகால் யுத்த மூலம் யாழ்ப்பாணத்தை பிடித்து, சிங்கக் கொடியை நாட்டிவிட்டு விட்டால், சமாதானம் முளைவிட்டு விடும் என்று காதிலே பூச்செருகுகிறதா இந்த அரசாங்கம்.

யுத்தத்தில் தோற்கடிக்கப்படுவது புலிகளல்ல, தமிழ் மக்கள் கொஞ்ச நஞ்சம் வைத்திருந்த இந்த அரசாங்கத்தின் மீதான நம்பிக்கையும், ஐக்கியமாக வாழ வேண்டும் என்று விரும்பும் ஆசையும் தான் என்பதை, தெளிவாகத் தெரிந்திருந்தும் இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடுவது ஏன்?

பாரம்பரியமாக உளறி வந்த சிங்கள மேலாதிக்க வெறியின் ஒரு புதிய வடிவம் தான் இந்த அரசாங்கமும் என்பதை தமிழ் மக்களுக்கும் உலகுக்கும் மெய்ப்பிப்பதுதான் இதன் நோக்கமா?

ஐயா மன்னிக்கவும், அம்மா, இது தான் நோக்கம் என்றால் ஏன் வீணாக ஒரு சமாதான முகமூடி? ஏன் வெறும் ஜனநாயகம் என்ற பசப்பல்?

ஏன்தான் தமிழ் மக்களின் விடுதலை பற்றிய முதலைக் கண்ணீர்?

நீங்கள் விரும்பியதை வெளிப்படையாகவே செய்யுங்கள். உங்கள் ஆக்கிரமிப்பு மனோவியாதிக்கு பலியாகும் தமிழ்மக்கள் அவர்கள் முட்டாள்தனமாக உங்களை நம்ப வேண்டியதில்லை.

நீங்கள் வெளிப்படையாகவே உங்களை வெளிப்படுத்தினால், குறைந்தபட்சம் அதையாவது செய்தால் அவர்கள் தம் வாழ்நாளில் என்றென்றைக்கும் உங்கள் தகப்பனாரை நினைவு வைத்திருப்பது போல நினைவு வைத்திருப்பார்கள்.

செய்வீர்களா?

# புலிகளின் அடுத்த இலக்கு துறைமுகமாம்!

கொழும்புத் துறைமுகத்தின் இரகசிய தகவல்கள் பல, கடந்த காலத்தினுள் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க உளவுப் பிரிவினரிடம் சென்று கிடைத்துள்ளதாகத் தகவல் கிடைக்கப்பெற்றுள்ளதாகச் சிரேஷ்ட இரகசியப் பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் ''ரொசீ'' உளவுப் பிரிவு, தற்போது துறைமுகத்தில் பணிபுரிவதாகக் கூறப்படும் அதிகாரிகள், தொழிலாளர்களின் உதவியுடன் இத் தகவல்களைப் பெற்றுக் கொண்டுள்ளதுடன் துறைமுகத்தின் அனைத்து அமைவுகளையும் காட்டும் புகைப்படங்கள் பலவற்றை அவர்களினூடாகவே பெற்றுக் கொண்டுள்ளதாகவும் கூறிய அவ் இர்கசியப் பொலிஸ் அதிகாரி, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டுள்ள அத் துறைமுக அதிகாரிகளும், தொழிலாளர்களும் யாரெனக் கண்டு பிடிக்கத் தற்போது உயர் மட்ட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

இதேசமயம் தமீழழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் தொடர்புகளை வைத்திருப்பதாகக் கூறப்படும் கொழும்புத் துறைமுகத்துடன் தொடர்பான தமிழ் அதிகாரிகள் தொடர்பாகவும், ஊழியர்கள் 12 பேர் தொடர்பாகத் தற்போது விசாரணை நடத்தப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

புலிகள் இயக்கத்தின் முக்கிய இலக்குகளில் கொழும்புத் துறைமுகமும் ஒன்றாகும்.

லங்காதீப -1995.11.10

# சமாதான யுத்தத்தில் வடமாராட்சியில் கொல்லப்பட்டோர்!

பருத்தித்துறையையும், நவின்டில் வல்வெட்டித்துறை, குடிமனைகளை நோக்கியுமே ஷெல் தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன. பல ஆயிரக்கணக்கான, அகதிகள் வலிகாமம் பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்து வாழ்கின்றனர். துறை முகத்தை நோக்கிய ஷெல்தாக்குதலின் போது சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தின் ''ஹபரண'' கப்பல், அவசரகால உணவு வகைகளை ஏற்றிக்கொண்டு வந்திருந்தது. துறை முக வேலையாட்கள், பாதுகாப்பு தேடி ஒளிந்து கொண்டனர். ஹாட்லி கல்லூரியில் உள்ள ஐ.சீ.ஆர்.சி அலுவலகத்திற்கு அருகிலும் ஷெல் விழுந்தது.

வடமாராட்சி பிரதேசத்தில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் ஷெல் தாக்குல்களினால், ஆறு பொதுமக்கள் கொல்லப்பட்டனர். ஒருவர் ஷெல் விழுந்த அதிர்ச்சியினால் கொல்லப்பட்டார். மேலும் இத்தாக்குதலினால் 21 பேர் காயமடைந்துள்ளனர். கொல்லப்பட்டவர்களின் விபரம்.

1. தர்மலிங்கம் பாலசந்திரன் (ஆண், 20)
2. செல்லத்துரை சபேன் (ஆண், 22)
3. புஸ்பானந்தன் உதயசங்கர் (ஆண், 12)
4. தர்மரட்ணம் கோமனன் (ஆண், 12)
5. சின்னத்தம்பி ரத்தினம் (ஆண், 45)
6. இரட்னம் பாமா (பெண், 11)
7. சுப்பிரமணியம் கந்தையா (ஆண், 24)

யாழ்ப்பாணத்தைப் பிடிக்கும் முயற்சியில் இலங்கை இராணுவம் கொக்குவில், கோண்டாவில், மானிப்பாய், திருநெல்வேலி, நல்லூர்,கல்வியங்காடு, இணுவில், இவற்றை அண்டியப் பகுதிகளுக்கு மோட்டார் ஷெல்களை ஏவுகின்றது. இந்த ஷெல்கள் பலாலி, மண்டைத்தீவு, இராணுவ முன்னேறும் இடங்களில் இருந்து ஏவப்படுகின்றன. யுத்தம் நடைபெறாத இடங்களில் விழும் பரந்த அளவிலான ஷெல்களினால் சேதங்கள் ஏற்பட்டுள்ளது மட்டுமின்றி இடம் பெயராது இருந்த மக்களைக் கூட தென்மாராட்சியை நோக்கி இடம் பெயரவைத்துள்ளது.

# இப்படியும் மனிதர்கள்!

'பணத்துக்கு ஆசைப்பட்டு வீடுகளில் இடமளியாதீர். நாட்டின் பாதுகாப்புக்குக் குந்தகம் ஏற்படுத்தாதீர்' இவ்வாறு பத்திரிகைகளில் தினமும் செய்திகள் வருகின்றன. அதிகாரிகளதும் படையினதும் ஆலோசனையும் இதுவேதான் தலைநகரிலோ அன்றி சுற்றுப் புறங்களிலோ வீடு அல்லது வாடைகைக்கு எடுத்தல் என்பது தமிழர்களுக்கு பயங்கரக் கனவாகி வருகின்றது.

இச் சந்தர்ப்பத்தில்தான் கொலன்னாவ எண்ணெய் குதங்கள் மீதான தாக்குதல் சம்பவங்கள் இடம் பெற்று அப்பகுதியில் 'குண்டர்கள் ஆட்சி' சில மணித்தியாலங்களுக்குக் கொடிகட்டிப் பறந்தது. இதன் பிரதிபலிப்பு நகரின் ஏனைய பாகங்களிலும் எதிரொலிக்கவே செய்தது. ஆயிரக்கணக்கில் கைதுகள். அநாகரீக நடாத்துகைகள் மிரட்டல்கள். கேலிகள் இவற்றையெல்லாம் தமிழர்கள் தாங்கிக் கொள்ள வேண்டிய வாரமாக ஒக்டோபர் கடைசிவாரம் அமைந்து விட்டது.

சோதனைகள் பல்கலைக்கழக மாணவர்களையும் விட்டு வைக்கவில்லை. மொறட்டுவ. கொழும்புப் பல்கலைக்கழகங்களது மாணவர்களின் வாடகை அறைக்கும் நாவலயிலுள்ள திறந்த பல்கலைக்கழக மாணவர்களது இடங்களும் பலத்த சோதனைக்குள்ளாகின. மொறட்டுவ மாணவர்களே மோசமாகப் பாதிக்கப்பட்டனர். 18 மாணவர்கள் ஒரே நேரத்தில் கைது செய்யப்பட்டு அடைக்கப்பட்டனர். சென்றுபார்க்க. உணவு கொடுக்க யாருமில்லை. யாருமே சென்று பார்க்க முன்வராத வேளையில் மொறட்டுவ பல்கலைக்கழக உப வேந்தர் பேராசிரியர் ஜி.ரி பிரான்சிஸ் டீ சில்வா தானே பொலிஸ் நிலையம் செல்கிறார். பொலிஸ் அதிகாரிகளிடம் விளக்கமளிக்கிறார். மாணவர்களைச் சந்தித்து ஆறுதலும் நம்பிக்கையும் நவில்கின்றார். விடுதலையைத் துரிதப்படுத்த விரைந்து உதவுகிறார்.

இது ஒரு புறமிருக்க. தமிழ் மாணவர்கள் வாடகைக்குக் குடியிருக்கும் வீட்டுச் சொந்தக்காரர்களில் சிங்களவர்கள் மாணவர்களை வெளியேற்ற முனைவதை அறிந்து அந்த வீடுகளுக்கும் நேரிலே செல்கிறார் உபவேந்தர். வீட்டுச் சொந்தக்காரர்களுக்குத் தனிப்பட்ட ரீதியில் உத்தரவாதம் வழங்குகிறார். வேண்டுமாயின் அந்த வீடுகளுக்குப் பொலிஸ் பாதுகாப்புப் பெற்றுத்தரவும் முடியும் என்று உறுதியளிக்கின்றார். விடுதியில் மேலதிகமாகவும் இடம் வழங்கித் தமிழ் மாணவர்களைத் தங்க வைக்கிறார். இவ்வளவும் ஒரு தனிமனிதனாகச் செயற்படும் மொறட்டுவப் பல்கலைக்கழக உபவேந்தர் செய்த மனிதாபிமான உதவிகள்.

இதேவேளையில். பேராதனை. கொழும்புப் பல்கலைக்கழக உப்வேந்தர்கள் இப்பிரச்சினைகளில் 'கையைக் கழுவி' விடுவதிலேயே கவனமாக உள்ளனராம். கைதான மாணவர்களைப் பொலிஸ் நிலையத்தில் போய்ப்பார்ப்பதற்கு இந்தப் பல்கலைக்கழங்களில் யாரையும் அனுப்பவுமில்லை. உத்தரவாதம் எதுவும் வழங்கவுமில்லை. மனிதாபிமானமும் மண்ணாங்கட்டியும்.

நோக்குமிடமெல்லாம் நீக்கமற நிறைந்திருப்பதாகப் புலிளைக் கொழும்பிலே தேடுகையில் பல்கலைக்கழக மாணவர்களது நிலை மிகமோசமாக உள்ளது. கற்பது தடைப்படும் போது மாண்வர்களுக்கு இரண்டு வழிகளே எஞ்சும். ஒன்று வடக்கே போய்ப் பயங்கரவாதியாகுவது அல்லது வெளிநாடு போய் உழைத்து 'இயக்கங்களுக்கு' சந்தா தாரராவது இது அரசாங்கத்துக்கு தெரியாத விடயமல்ல. ஆனாலும் அது தனது வேட்டையை நிறுத்த தயாரில்லை. போர் தனது சொந்த மக்களுடனேயே என்ற ஞானோதயம் ஏற்படும் வரை அரசாங்கம் பயங்கரவாதிகளின் எண்ணிக்கையினை அதிகரித்துக் கொண்டே செல்லும் என்பதற்கு இந்தத் தேடுதல் வேட்டைகள் தெளிவான உதாரணங்கள்.

# யுத்தமும்...

இத்தகைய ஒரு அவல நிலையில் அரை அடிமைத் தமிழர்களுக்கு இழைக்கப்படுகிற கொடுமைகளுக்கு எதிராகவும் யுத்தத்துக்கு எதிராகவும் சமாதான தீர்வுக்காகவும் குரல் கொடுக்கிற இரு பத்திரிகைகள் கொழும்பிலிருந்து வெளிவருகிறது கொஞ்சமாவது நிம்மதி தருகிறது. துரதிர்ஷ்டவசமாக இரண்டுமே தமிழ் பத்திரிகைகள். ஒன்று சரிநிகர் மற்றது வீரகேசரி. வீரகேசரியின் அண்மைக் காலத் தலையங்கங்கள் குறிப்பிடப்பட வேண்டியவை. யுத்தத்தில் புலிகள் தவறு செய்தாலும் புலிகளையே கண்டிப்போம். அரசு தவறு செய்தாலும் புலிகளையே கண்டிப்போம் என்கிற நிலைப்பாட்டையே பொதுவாக சிங்கள பத்திரிகைகளும் சிங்கள முதலாளிகளது ஆதிக்கத்திலுள்ள ஆங்கிலப் பத்திரிகைகளும் எடுத்துள்ளன. இவற்றுள் ராவய, கிரு,யுக்திய என்பவை குறிப்பிடத் தக்கவகையில் மாறுபட்டுள்ளவை:

பொதுசன ஐக்கிய முன்னணி அரசை ஆதரித்த போதும் யுத்தத்தை ஆதரிப்பதற்கு அஞ்சிய பல சிங்கள முற்போக்காளருக்கு துணிவைத் தந்தன மனித உரிமைகளுக்கான இரண்டு மாஜி பல்கலைக்கழக ஆசிரியர்களது அறிக்கைகள்; அவர்களது தொலைக் காட்சிப் பேட்டிகள்; கருத்தரங்கு, பேச்சுக்கள் என்பன. தமிழர்களது மனித உரிமைகளை வலியுறுத்தினால் விடுதலைப்புலிகளுக்கு ஆதாயம் கிடைத்துவிடும் என்கிற கருத்தை இரண்டு மாஜி பல்கலைக்கழக ஆசிரியர்களும் விவாதங்களின் போது வலியுறுத்தி வருகிறார்கள்.

மேர்ஜ் போன்ற நியாய புத்தியுள்ள அமைப்புகளின் அறிக்கைகளை உதாசீனப்படுத்துகிற திவ்யின, ஐலன்ட் போன்ற சிங்கள, ஆங்கில பத்திரிகைகளும் அரசுசார்பு பத்திரிகைகளும் மேற்படி மாஜி பல்கலைக்கழக ஆசிரியர்களின் கருத்துகளுக்கு முதல்பக்க முக்கியத்துவம் கொடுத்து வளர்த்து வருகிறது ஆச்சரியத்துக்குரியதல்ல.

மேற்படி பின்னணியை புரிந்து கொண்டால் தமிழ் அகதிகளின் கண்ணீரிலும் ரத்தத்திலும் அவர்கள் புகுந்து விளையாடியிருப்பதையும் சிங்கள இனவாதிகளின் பத்திரிகைகளும் தொடர்புச் சாதனங்களும் வழமை போல அதற்கு மேலதிக முக்கியத்துவம் கொடுத்திருப்பதையும் புரிந்து கொள்ள இயலும்.

விடுதலைப்புலிகள் அவர்களது மனித உரிமைகள் அமைப்புக்கெதிராகவும் அதன் முன்னணிப் போராளியான மதிப்புக்குரிய ராஜனி திரணகம அவர்களுக்கும் கொடுமை இழைத்திருக்கிறது என்பதில் யாருக்கும் இரண்டு கருத்திருக்க முடியாது. ஆனால் அதற்காக அவர்களது யுத்தம் தொடர்பான நிலைப்பாட்டை யாரும் ஆதரிக்க முடியாது. மறுபுறத்தில் எல்லைப்புற சிங்கள குடி மக்கள் மீதான படுபாதகமான தாக்குதல்களை விடுதலைப்புலிகள் உடன் கைவிட வேண்டும். இத்தகைய தாக்குதல்கள் தொடர்பாக கவலை தெரிவிப்பதுடன் நீதி விசாரணைக்கும் ஏற்பாடு செய்ய வேண்டும் எதிர்காலத்திலும் தமிழ் மக்களது வரலாற்றை இப்படி சிங்கள மக்களது இரத்தத்தால் கறைபடுத்தக் கூடாது என்று வலியுறுத்த விரும்புகிறோம்.

அரசபடைகளது இராணுவ நடவடிக்கைகளால் தோன்றியுள்ள இன்றைய வரலாறு காணாத மனித அவலத்துள்ளும் அகதிகள் நிலையிலும் கூட தமிழ் மக்கள் போராளிகளால் படுபாதகமான முறையில் அகதிகளாக விரட்டியடிக்கப்பட்ட வடபகுதி முஸ்லீம் சகோதரர்களதும் சகோதரிகளதும் நிலைமை குறித்தும் ஒரு கணம் நினைத்துப் பார்க்க வேண்டும்.

போரை நிறுத்தி சமஸ்டி திட்டம் ஒன்றின் அடிப்படையில் உயர்மட்ட பேச்சுவார்த்தை ஒன்றை ஆரம்பிக்கும்படியும், வடபகுதி தமிழ், முஸ்லீம் மக்களது மீள்குடியமர்வு, புனர்வாழ்வு என்பவற்றுக்கு பொறுப்பெடுக்குமாறும் அரசையும் விடுதலைப் புலிகள் அமைப்பையும் வலியுறுத்த விரும்புகிறோம்.

இரு தரப்பினருக்கும் ஒரு வார்த்தை: மக்கள் அல்லல்பட்டாற்றாது அழுத கண்ணீரன்றோ செல்வத்தை தேய்க்கும் படை.

பிரதம ஆசிரியர்:- சேரன். எல்லாத் தொடர்புகட்கும்: இல.4, ஜெயரட்ன மாவத்தை. திம்பிரிகஸ்யாய, கொழும்பு 05. 593615
வெளியீட்டாசிரியர்: ச.பாலகிருஷ்ணன். மேர்ஜ் 18/2 அலோசாலை, கொழும்பு -03. அச்சுப்பதிவு: நவமக அச்சகம்.334 காலி வீதி இரத்மலானை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்